மதுரா



# பூ மரத்துப் பறவைகள்

CPL 701722

திருவரசு புத்தக நிலையம்

முதற் பதிப்பு : மார்ச் 2009
உரிமை : ஆசிரியருக்கு

பதிப்பாசிரியர் : வானதி திருநாவுக்கரசு

விலை : ரூ.60.00

□ Title : **POO MARATHU PARAVAIGAI**
□ Author : **Madura**
□ Language : Tamil
□ Subject : Novel
□ Edition : First Edition, March - 2009
□ Pages : iv + 188 = 192
□ Publication : **THIRUVARASU PUTHAKA NILAYAM**
23, Deenadayalu Street
Thyagaraya Nagar
Chennai - 600 017
✆ 24342810/24310769

□ **Price : Rs.60.00**

Typesetting : *Good Will Computers,*
*T.Nagar, Chennai -17.* Mobile: 9444006583
E.Mail : goodwilltngr@yahoo.co.in

*Printed at :* **NOVENA OFFSET PRINTING CO.,** Chennai - 5 ✆ 28446166, 28446891

701722
894.8113
MAD

CONNEMARA PUBLIC LIBRARY
13 NOV 2010
CHENNAI 600 008

## என்னுரை

யாரோ -எங்கோ-சொன்னது.

உறுதியாய் அடித்துச் சொன்னது.

இன்றும்

என் மனதில் 'காதல்' என்றதும் ஓடிவரும் வார்த்தைகள்.

'காதல் என்பது ஜலதோஷம் போன்றது.

ஒவ்வொருவரையும் அது பிடித்தே தீரும்'

- எத்தனை உண்மை என்று வியக்கும் போதே நடிகை மீனா ஓங்கிச் சொல்கிறார்,

'காதல் வராதவரை ஒன்றுமில்லை. வந்தபிறகு நல்லதோ கெட்டதோ ஏதாவது ஒன்று செய்து விட்டுத்தான் போகும்' என்று.

- அதற்கு மேல் கவிஞர் அறிவுமதி குறுக்கே வந்து பயமுறுத்துகிறார்--

'அணு அணுவாய் சாவதற்கு முடிவெடுத்து விட்டால் காதல்... சரியான வழிதான்.' தோள் தட்டி அழைத்து காதலுக்கு விளக்கம் தருகிறார் டைரக்டர் பாலசந்தர்,

'காதல் - ஒரு மருந்து தடவிய மாத்திரை. சிலர் அதை விழுங்கி விடுகிறார்கள். பலரை அது விழுங்கி விடுகிறது.'

அதற்குள் முகத்துக்கு எதிரே வந்து-

'காதலுக்கு கண்ணில்லை என்பது காதல் மொழி. காதலிப்பவர்கள்தான் கண்ணை மூடிக்கொண்டு காதலிப்பார்கள்'

- என்று சொல்லிவிட்டு புன்னகைக்கிறார் கலைஞர் மு. கருணாநிதி.

நடிகை நக்மாவோ -

'காதல் அழகானது. கடவுள் கொடுத்தது' - என்கிறார்.

சாலமன் பாப்பையாவோ -

'காதலே ஒரு அதிசயம் தான் அப்பு... சிக்குனவனையெல்லாம் கிறுக்குப் புடிச்சித் தன்னால அலையவிட்டு வேடிக்கை பாக்குமய்யா...'

- என்று சொல்லிவிட்டு கபகபவென்று சிரிக்கிறார்.

'காதல் முழுமையாய்ப் பகிர்ந்து கொள்ள முடியாத ஓர் அனுபவம்.

ஒரு வகையில் கடவுளைப் போலத்தான் காதலும்'

- புன்னகையை சிந்தி விட்டு நகர்ந்து போகிறாள் கவிதைப் பெண் ஒருத்தி.

ஓடிவந்து சுற்றும் முற்றும் பார்த்துவிட்டுப் பேசுகிறார் கிரேஸி மோகன் -

'காதல்ங்கறதும் எனக்கு காமெடியாத்தான் படுது- அதுவும் உச்சக்கட்ட காமெடி.'

தார் ரோட்டில் தடதடத்து ஓடும் ஆட்டோவின் முதுகோ-

'கல்லறையின் கரையிலே பூக்கும் மலர்தான் காதல்'

- என்று உபதேசிக்கிறது.

காதல் என்பது என்ன...?

ஒரே ஒரு கேள்விக்குப் ஓராயிரம் பதில்கள்.

இந்த காதல் கேள்விக்குப் பதில் வேறுபடுகிறது இதயத்துக்கு இதயம். நானும் எனது வசந்த நாட்களில் இதயத்தில் காதலுடன் சுற்றியிருக்கிறேன்.

தோளில் கரும்பு வில் சுமந்து திரிந்திருக்கிறேன்.

எனக்கும் காதல் என்பது என்னவென்று-

சட்டென்று பதில் சொல்ல முடியவில்லை.

இந்தக் கதையில் சொல்ல முயன்றிருக்கிறேன். இந்த கதையை தொடராக வாசகர்கள் முன் வைத்த தேவி வார இதழ் ஆசிரியர் திரு. பா. ராமச்சந்திர ஆதித்தன் அவர்கட்கும், கதிரவன் கணேஷ்குமார் அவர்கட்கும் என் இதய நன்றி.

ஓவியங்கள் வரைந்து கதைக்கு அழகு சேர்த்த ஓவிய நண்பர் திரு ஸ்யாம் அவர்கட்கும்-

காதல் மரத்து பறவைகளை இலக்கிய வானில் பறக்க விட்டிருக்கிற - முதல் பார்வையிலேயே என் இதயம் தொட்ட - வானதி திருநாவுக்கரசு அவர்கட்கும், எளிமையாய் வலம் வருகிற திரு. ராமு அவர்கட்கும் என் இதய நன்றி.

என்னை எழுத வைக்கிற வாசகர்களிடமிருந்து எழுத்து சுமந்த காகிதங்களை எதிர்பார்க்கிறேன். வழி மீது விழி வைத்துக் காத்திருக்கிறேன்.

இதய அன்புடன்

**மதுரா**

13 NOV 2010




## பூ மரத்துப் பறவைகள்

காதலிப்பதைக்
காட்டிலும் முட்டாள்தனம்
உலகத்திலேயே வேறெதுவும் கிடையாது.
ஆனால்...
எத்தனை
உன்னதமான முட்டாள்தனம்.

*கவிஞர் மு. மேத்தா*

"கிச்சிட்... கிக்"

வினோதமாய் குரல் எழுப்பியது அந்த சின்னக் குருவி, தலையை அங்கும் இங்கும் அசைத்தபடி சின்ன தாய் பளபளக்கும் கண்கள் எட்டு திசைக்கும் உருள, சன்னல் கம்பியில் நடந்தது நாட்டியம் தெரிந்த சின்ன பெண் போல.

மீண்டும் ஒரு முறை குரல் எழுப்பியது.

யாரையோ அழைப்பது போலிருந்தது. குரலின் தொனி.

சின்ன விழி அசைத்துக் கீழ் திசை பார்த்தது.

கதிரவனின் தங்க விளிம்பு மட்டும் தெரிந்தது.

தலை திருப்பி, சிறகு விரித்து, தன் சங்கீதக் குரலில் ஏதோ மிழற்றியது.

கண் விழித்த மதுமிதாவின் கரிய பெரிய கண்களில் அந்த சின்னக் குருவி பட்டது.

அவளுக்குள் ஒரு உற்சாகப் பூ பூத்தது.

தலை தூக்கி விட்ட மஞ்சள் சூரியனின் ஒளி வீச்சில்-

தங்கப் பறவையாய் மினுக்கியது அந்த சின்னக் குருவி.

"பட்டுக்குட்டிம்மா"

உதட்டு முத்தமொன்றை உள்ளங்கையில் ஏந்தி காற்றில் வீசினாள். காற்றின் முதுகில் ஏறி பறந்த முத்தம்,

சின்னக்குருவியின் சின்ன மஞ்சள் அலகு தொட்டது.

வெட்கத்தில் சிறகசைத்து பறந்தது குருவி.

"குட்டியம்மாவுக்கு வெட்கம் வந்திடிச்சா..?"

கண் சிமிட்டி சிரித்தாள் மதுமிதா.

போர்த்தியிருந்த போர்வையை உதறினாள் வேகமாய்.

அது சுருண்டு அறையின் மூலையில் போய் விழுந்தது.



போர்வையை உதறியவளுக்கு ஏனோ எழுந்திருக்க மனமில்லை.

அழகுப் பதுமையாய் படுத்திருந்தாள் அசைவின்றி.

நீல வண்ணத்தில் 'கனத்த' நைட்டி அணிந்திருந்தாள்.

அந்த நைட்டியால் அவள் அழகுக்கு திரை போட இயலவில்லை.

'அழகு... அழகு...' என்றது சுமந்து கொண்டிருந்த படுக்கை. மதுமிதா கண்களை ஒரு முறை இமைத்தாள் படபடவென்று. தப்பி வந்த வண்ணத்து பூச்சி ஒன்று சிறகசைப்பது போலிருந்தது.

உதட்டின் ஓரத்தில் அமர்ந்திருந்தது புன்னகை.

விடிகாலை பிச்சி மலர் இதழ் விரிப்பது போலிருந்தது மதுமிதாவின் முகம்.

இமைத்த கண்களை மூடினாள்.

உதட்டுப் புன்னகை தொலைந்து போயிற்று.

எதையோ சிந்திப்பது போல அந்தத் துண்டு நிலா நெற்றி சுருங்கிற்று.

மீண்டும் புன்னகை எட்டிப் பார்த்தது.

"கீச்சிட்... கீக்..."

குருவியின் குரலில் கண் திறந்தாள்.

தலையை அசைத்தபடி சன்னல் கம்பியில் அமர்ந்திருந்தது பறந்து சென்ற சின்னக்குருவி.

அதன் கவனம் படுக்கையில் படுத்திருந்த மதுமிதாவின் மீது இல்லை.

தலை திருப்பி வெளியே பார்த்தது.

மீண்டும் ஒரு முறை வினோதமாய் குரல் எழுப்பியது.

எங்கிருந்தோ பறந்து வந்து அமர்ந்தது இன்னொரு குருவி.

இந்தச் சின்னக்குருவியை விட சற்று பருமனாக இருந்தது புதிதாய் வந்த குருவி.

இருவரும் தங்கள் பாஷையில் தலையை 'ஆட்டி ஆட்டி' ஏதோ பேசிக் கொண்டார்கள்.

மதுமிதா கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இரண்டு குருவிகளும் திடீரென்று அமைதியாகி விட்டன.

எந்த வித குரலும் அவள் காதுக்கு கேட்கவில்லை.

முகத்தை உற்றுப் பார்ப்பது போல குருவிகள் ஒன்றையொன்று உற்றுப் பார்த்துக் கொண்டன.

சின்னக்குருவி தலையை மட்டும் ஒரு முறை அருகிலிருந்த குருவியின் முகத்துக்கு நேரே நீட்டியது.

அந்த குருவியோ கண்டுகொள்ளாமல் மௌனமாய் இருந்தது. சின்னக் குருவி சற்றே கோபம் வந்தது போல் சன்னல் கம்பியில் நடந்து எதிர்த் திசையில் நகர்ந்தது.

ஒரு முறை திரும்பவும் பார்த்தது கண்களைச் சுருக்கி.

சற்று பருமனான குருவி தயக்கமாய் பின்னால் நடந்து சின்னக் குருவியின் அருகில் போய் நின்றது மௌனமாய் உரசிக் கொண்டு.



சின்னக் குருவியோ ஜன்னலுக்கு வெளியே 'பராக்கு' பார்ப்பது போல் பாவனை செய்தது. பொறுமை இழந்த 'குண்டு' குருவி-

"கீச்..." - என்றது சின்னக்குரலில்.

அலட்சியமாய் திரும்பிப் பார்த்தது சின்னக்குருவி.

அடுத்த இமை மூடுபொழுது இரண்டு குருவிகளும் மூக்கோடு மூக்கு உரசிக் கொண்டன.

"அட கழுதைகளா... விடியறதுக்குள்ள இது என்ன அசிங்கம்.. வெட்கம் கொஞ்சமும் இல்லாம ஒரு சின்ன பொண்ணு முன்னால காதலிக்கவா செய்றீங்க..."

-தலையணையை தூக்கி வீசுவது போல ஓங்கினாள் மதுமிதா.

இரண்டு குருவிகளும் பயத்தில் சிறகசைத்து அவசரமாய் பறந்தன ஒரே திசையில்.

படுக்கையிலிருந்து குதித்து இறங்கினாள் மதுமிதா.

மனசு துள்ளாட்டம் போட்டது.

ஓடிப்போய் ஜன்னல் வழியே வெளியே எட்டிப் பார்த்தாள்.

வட்டமாய் படர்ந்திருந்த கொய்யா மரம் தெரிந்தது பச்சை பசேலென்று. கிளைகளின் மீது பார்வையை ஓட விட்டாள். உச்சிக் கிளையில் மூக்கோடு மூக்கு உரசியபடி அமர்ந்திருந்தன இரண்டு குருவிகளும்.

"வர்றேன் உங்களுக்கு..."

— பொய்க் கோபத்துடன் நாக்கை துருத்தி சுட்டு விரலால் எச்சரித்தவள், காலடி ஓசையில் அதிர்ந்தாள். திரும்பி வாசலைப் பார்த்தாள்.

வாசலில் அம்மா லட்சுமி நின்று கொண்டிருந்தாள் புன்னகையுடன்.

"உனக்காக தோட்டத்தில் யார் காத்துக்கிட்டிருக்கா... வர்றேன்னு சொல்லிட்டு துள்ளாட்டம் போட்டுகிட்டு போறே..?"

"குருவி"

— என்றாள் வெட்கத்துடன்.

"அஞ்சு வயசு பொண்ணு குருவிகிட்ட பேசுறாளாம். நீ என்ன சின்ன பாப்பாவா... உனக்கு குருவி கிட்ட பேசற வயசா... உன் வயசில உன் அண்ணனையும், உன்னையும் மடியில போட்டு கொஞ்சிகிட்டிருந்தேன். நீ என்னடான்னா குருவிகிட்டே பேசிகிட்டிருக்கே... இந்த தை மாசம் பொறந்தா..?"

"எனக்கு பதினெட்டு வயசு. எல்லா அம்மாக்களும் சொல்றதைத் தான் நீயும் சொல்றே... சும்மா தொண தொணன்னுகிட்டு... போம்மா..."

— அம்மாவின் கன்னத்தைக் கிள்ளி விட்டுத் தோட்டத்துக்கு ஓடினாள்.

கொய்யா மரத்தில் இருந்த குருவிகள் எங்கோ பறந்து போயிருந்தன.

"காலேஜ் போயிட்டு வந்து உங்களை பேசிக்கிறேன்."

கொடியில் கிடந்த துண்டை எடுத்து தோளில் போட்டுக் கொண்டு பாத்ரூமை நோக்கி நடந்தாள் துள்ளாட்டம் போட்டபடி.

"ச்... சொலெர்..."



-தண்ணீர் விழுந்து தெறிக்கிற சத்தம் கேட்டு திரும்பி பார்த்தாள் மதுமிதா. எதிர் தோட்டத்தின் மூலையில் கிடந்த கிணற்றிலிருந்து நீரை வாளியில் இறைத்து அருகிலிருந்த பெரிய தொட்டியில் ஊற்றிக் கொண்டிருந்தான் சந்திரன்.

இடுப்பில் ஒரு துண்டு மட்டுமே கட்டியிருந்தான்.

திறந்த மார்பில் செவ்வக டாலர் தொங்கிய தங்கச் செயின் அங்கும் இங்கும் அசைந்து கொண்டிருந்தது, காலைச் சூரியனின் மஞ்சள் ஒளியில்.

வியர்வையில் நனைந்த மேனி பளபளத்தது. வேலிக்கு அருகிலிருந்தது கிணறு.

கிணற்றை நோக்கி நடக்க ஆரம்பித்தாள் மதுமிதா.

தண்ணீரை இறைத்து இறைத்து தொட்டியில் ஊற்றுவதில் குஷியாய் இருந்தான் சந்திரன்.

"என்ன சந்திரன்... காலையிலே கிணத்தை கழுவி காய வைக்கப் போறியா..?"

— மதுமிதாவின் குரலில் நிமிர்ந்து பார்த்தான் சந்திரன்.

அவளைக் கண்டதும் முகம் தானாகவே புன்னகைத்தது.

"இந்த கிண்டல் தானே வேணாங்கிறது... மோட்டர்ல பேரிங் உடைஞ்சிடிச்சி. மெக்கானிக் பத்து மணிக்கு தான் வருவேன்னு சொல்லிட்டான். குளிச்சிட்டு மதுமிதாவோட காலேஜுக்கு போகணும். அதுக்குத்தான் இந்த வேலை நடக்குது."

"ஐயோ.. நீ வரலன்னா எனக்கு காலேஜுக்கு பாதை தெரியாது பாரு.. யாரும் எனக்காக கஷ்டப்பட வேண்டாம்"

"யாருமில்லை. சந்திரன், தேய்ஞ்சி போகாத சந்திரன்."

"சந்திரனாவது, இந்திரனாவது, நான் குளிக்கப் போகிறேன்"

"ம்... நீ குளிக்கிறதுக்கு ஒண்ணு செய்யலாமா மதுமிதா..?"

'என்ன..' என்பது போல் புருவம் உயர்த்தினாள்.

"உன் இடுப்பில் கயித்தைக் கட்டி கிணத்தில் முக்கி முக்கி எடுக்கட்டுமா..?"

— முகம் பூவாக கேள்வி வந்தது சந்திரனிடமிருந்து.

"ஆசைதான்."

— உதடு சுளித்தாள் மதுமிதா.

வேறு எதுவும் பேசாமல் திரும்பி பாத்ரூமை நோக்கி நடந்தாள்.

"மதுமிதா.. கொஞ்சம் நில்லேன்."

'எதுக்கு...' என்பது போல் பார்வையை அவன் முகத்துக்குத் திருப்பினாள்.

"காதல்ன்னா என்ன..?"

எதிராளியை அடித்து வீழ்த்துகிற கேள்வியை வீசி விட்டு காய்கறிக் கடைக்காரரிடம் கத்தரிக்காய் என்ன விலை என்று கேட்டு விட்டு பதிலுக்காய் நிற்கும் பெண் மணி போல மதுமிதாவின் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றான்.



அந்தக் கேள்வி குளிர் நீரை முகத்தில் வீசியது போலிருந்தது மதுமிதாவுக்கு.

'இந்த கேள்விக்கு என்ன பதில் சொல்வது.. காதல் என்றால் என்ன.. எதற்காக இந்த கேள்வியை என்னிடம் கேட்டான்.. உண்மையிலேயே காதல் என்பது என்ன..?'

"சந்திரன்" - கனத்த குரல் கிணற்றுச் சுவரில் மோதியது.

"எங்க மாமா கூப்பிடறாங்க. காலேஜ்ல பார்க்க லாம்."

- என்று சொன்னவன் அவள் பதிலை எதிர்பார்க்கா மல் ஓட்டமும் நடையுமாய் தன் வீட்டின் முன் பகுதியை நோக்கிச் சென்றான்.

அவர்கள் இருவரையும் இரண்டு கண்கள் உன்னிப் பாய் கவனித்துக் கொண்டிருந்தன.

பார்வையில் வியப்பு தடவியிருந்தது. கண்களில் சந்தேகம் மிதந்தது.

மதுமிதாவோ முணுமுணுத்தபடி மீண்டும் பாத் ரூமை நோக்கி நடந்தாள்.

"காதல் என்பது.. காதல் என்பது.."

உதடுகள் திரும்ப திரும்ப அசைந்து கொண் டிருந்தன.

"இவன் தான் சந்திரன். எங்க அக்கா மகன். எங்க அக்காவும் அத்தானும் எதிர்பாராமல் சின்ன வயசிலேயே செத்துப் போயிட்டாங்க. எட்டு வயசிலயிருந்து இங்கதான் இருக்கான். அஞ்சி மோட்டார் கிணற்றையும் இவன்

மட்டுமே பார்த்துக்கிடறான். நான் இப்ப வயக்காட்டு பக்கமே போறது கிடையாது. விவசாயம் சம்பந்தமாக எது பேசுறதாயிருந்தாலும்..."

- சந்திரன் மாமா யாரிடமோ பேசிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது.

தோளில் கிடந்த துண்டு நழுவி தரையில் விழுந்தது.

குனிந்து எடுத்தவள் இதயமோ, சந்திரன் வீசி விட்டுச் சென்ற கேள்வியிலேயே விழுந்து கிடந்தது. 'எதற்காக அந்த கேள்வியை என்னிடம் கேட்டான்...?'

அவள் நடந்து சென்ற பாதையின் குறுக்கே கிடந்தது அந்த வட்டக் கிணறு.

மதுமிதா அப்பா அவசர அவசரமாய் வெட்டிய கிணறு. சந்திரன் மாமா தோட்டத்தில் கிணறு வெட்டி நல்ல தண்ணீர் வந்த பொறாமையில் மதுமிதா அப்பா வெட்டிய கிணறு.

ஆனால் மதுமிதா தோட்டத்து கிணறோ உப்பாய் கசந்தது.

கிணற்று சுற்றுச் சுவர் மீது ஏறி அமர்ந்தாள்.

மனதுக்குள் அலையடித்தது.

குனிந்து கிணற்று நீரை பார்த்தாள் மதுமிதா.

'அப்பா விஜயநாராயணம் குளத்திலிருந்து பிடித்துக் கொண்டு போட்ட விலாங்கு மீன் எங்கே... அடிக்கடி மேலே வந்து ஆட்டம் போடுமே...'

— கண்களால் நீரைத் துழாவினாள்.

இரண்டு கெண்டை மீன்கள் நீர் பரப்புக்கு மேல் வந்து தலை தூக்கிப் பார்த்தன.



அடுத்த விநாடி சட்டென்று மூழ்கி காணாமல் போயின.

சில விநாடிகளில் மீண்டும் மேல் பரப்புக்கு வந்தன மீன்கள்.

"கண்ணாமூச்சி காட்டுகிறீர்களா...?"

— இரண்டு மீன்களும் வால் சுழற்றி, அங்கும் இங்கும் நீந்தின தாங்கள் மட்டுமே அந்த கிணற்று நீரில் இருப்பது போல. அந்த ஜோடி மீன்கள் கிணற்று நீரில் குறுக்கும் நெடுக்குமாய் நீந்துவது, ஜோடிப் பொருத்தம் மேடையில் கை கோர்த்து தங்களை அறிமுகப்படுத்திக் கொள்வது போலிருந்தது. நீரில் அழகாய் வழித்தடம். ஒரு சின்னக் கல் எடுத்து வீசிக் கலைக்கலாமா என்ற எண்ணம் வந்தது.

'வேண்டாம்... வேண்டாம்... காதல் மீன்களை துன்புறுத்த வேண்டாம். யார் சொன்னது உனக்கு அந்த மீன்கள் காதலர்கள் என்று...?'

— தனக்குத் தானே சிரித்துக் கொண்டாள்.

"என்ன மதுமிதா... கிணத்தை பார்த்து சிரிக்கிறே... எனக்கு சந்தேகமா இருக்குது."

— குறும்பு புன்னகையுடன் வந்து கொண்டிருந்தாள் அம்மா.

"உங்க முகத்தை பார்த்தா சிரிக்கிற அழகில இல்லை. அதனால கிணத்து தண்ணியில தெரியிற என் முகத்தை பார்த்தே சிரிச்சிட்டிருக்கேன்" - என்றாள் ஒரு கண்ணை மூடித் திறந்து.

"என்ன சொன்னே...?"

-அம்மா குனிந்து காய்ந்த மரக்கிளையொன்றை தூக்க—

கிணற்று சுற்றுச் சுவரிலிருந்து குதித்து பாத்ரூமை நோக்கி ஓடினாள் மதுமிதா சிரித்தபடி. தன்னை விரட்டிக்விரட்டி காதல் குதிரை ஒன்று துரத்தப்போவதை அந்த நிமிடம் வரை அவள் அறிந்திருக்கவில்லை.




காற்றிலும் கடிய
வேகத்தில் செல்லும்
காலக்குதிரையும்
கால் இடறிக் கணமேனும்
தடுமாறி நிற்குமிடம் தான் காதல்

- குமரி அனந்தன்

குளித்து முடித்திருந்தாள் மதுமிதா.

மார்புக்குக் குறுக்கே கட்டிய டர்க்கி டவலுடன் பாத்ரூமை விட்டு வெளியே வந்தாள்.

கூந்தலிலிருந்து தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது. அந்த டவல் உடம்போடு ஒட்டிக் கிடந்தது சந்தோஷமாக. முகத்தில் குழப்பம் தெரிந்தது. பனியில் நனைந்த பூவின் அழகு மேனியில் தெரிந்தது. கண்களில் கொஞ்சமாய் சிவப்பு. கன்னம் பளபளத்தது ஈரத்தில். நல்ல சிவப்பு. வயது தந்த மதமதப்பும் சேர்ந்து அழகாய்-அழகாய் தெரிந்தாள்.

காலைக் கதிரவனின் மஞ்சள் ஒளி மஞ்சள் தேவதையாய் நிறம் மாற்றியிருந்தது. கண்கள் தேடின. அம்மா காணாமல் போயிருந்தாள்.

சந்திரனும் பார்வையில் சிக்கவில்லை.

பக்கத்து தோட்டத்து தென்னை மரத்தில் சாய்ந்து கிடக்கும் சைக்கிளையும் காணவில்லை. குளித்து சாப்பிட்டு, சைக்கிளை தூக்கிக் கொண்டு வயல்வெளியை நோக்கி ஓடியிருப்பான். வீட்டை நோக்கி நடந்தாள் ஈரப் பாதங்கள் பதியப் பதிய.

சமையலறையிலிருந்து குக்கரின் விசில் சத்தம் காற்றில் மிதந்து வந்தது.

'அம்மா சமையலில் மும்முரமாய் இருப்பாள்...'

தன் அறைக்குள் நுழைந்து, ட்ரெஸிங் டேபிள் முன்னால் போய் நின்றாள் மதுமிதா.

அங்கே இன்னொரு மதுமிதா தெரிந்தாள்.

அழகாய் பிரதிபலித்தது முகம் பார்க்கும் கண்ணாடி.

நாலு சுவருக்குள் ஒரு மஞ்சள் நிலவு. கண்ணாடியில் இன்னொரு நிலவு.

சிரித்தாள்... சிரித்தது.

சிணுங்கினாள்... சிணுங்கியது.

அழுதாள்... அழுதது.

யாரோ எழுதிய கவிதை நினைவுக்கு வந்து இதயத்தில் முட்டியது.

'கண்ணாடியில் தான் இன்னொரு மதுமிதா கிடைப்பாள்.'



ஈரம் சுமந்த டர்க்கி டவல் நழுவியது. அந்த அழகு மேனியிலிருந்து.

கண்ணாடி வெட்கப்பட்டது. எங்கும் ஓடிப் போக முடியவில்லை.

அவசர அவசரமாய் சிவப்பு சுரிதாருக்கு மாறினாள்.

இடது தோளிலிருந்து வெள்ளை வெளேர் துணி ஒன்று நீளமாய் தொங்கியது. ஈரம் சொட்டிக் கொண்டிருந்த கூந்தலை வேக வேகமாய் உலர்த்தினாள்.

அம்மாவிடமிருந்து அழைப்பு வந்தது.

டைனிங் டேபிளில் போய் அமர்ந்தாள்.

முல்லை பூஞ்சிரிப்பும், மல்லிகைப் பூ இட்லியுமாய் அம்மா வந்தாள்.

தட்டொன்றை அவள் முன்னால் வைத்து இட்லிகளை வரிசையாய் அடுக்க ஆரம்பித்தாள். மௌனமாய் பார்த்துக் கொண்டிருந்தாள் மதுமிதா.

"வைச்சி முடிச்சிட்டியா...?"

"ம்..."

"எத்தனை இட்லி வைச்சிருக்கே...?"

"எட்டு"

- பதில் எதுவும் பேசாமல் மௌனப் புன்னகையுடன் அமர்ந்திருந்தாள்.

அம்மா மீண்டும் சமையலறைக்குள் நுழைந்ததும், பரபரவென்று இரண்டு இட்லி சாப்பிட்டாள். மின்னலாய் எழுந்து, கை கழுவி, மூன்று இட்லியை டிபன் கேரியரில் வைத்து மூடினாள். மீதி மூன்று இட்லி தட்டில் அப்படியே இருந்தது.

"மதுக்குட்டி... அஞ்சி இட்லிதான் சாப்பிட்டியா..?"

-அன்பு தடவிய கேள்வியுடன் உள்ளே நுழைந்தாள் அம்மா.

"காலை டிபன் இரண்டு இட்லி. மத்தியானம் மூன்று இட்லி"

-டிபன் பாக்சை உயர்த்தி காட்டினாள் மதுமிதா.

"அரை வயிறும் கால் வயிறுமாய் சாப்பிட்டு எலும்பும் தோலுமாய் ஆயிட்டா எவன்டி கட்டுவான்..?"

"ஒரு நேரத்துக்கு இருபது இட்லி சாப்பிட்டு பிந்துகோஷ் மாதிரி குண்டடிச்சிட்டா என்னை எவன்மா காதலிப்பான்..?"

"அடி செருப்பால. உங்கப்பா காதில விழுந்திச்சி, கழுத்தை முறிச்சிப்புடுவாரு"

"ஐயோ அம்மா... பஸ்ஸுக்கு நேரம் ஆயிடிச்சி. வர்றேன்"

— என்றவள் மின்னலாய் தன் அறைக்குள் நுழைந்தாள்.

நேற்று வீசிய பேனாவை இன்று தேடினாள்.

'எங்கே... எங்கே போயிற்று..?'

ட்ரெஸிங் டேபிள் கண்ணாடியில் பரபரப்பாய் மதுமிதா தெரிந்தாள். தேடுதலை நிறுத்தி தன்னையே ஒரு முறை நிதானமாய் பார்த்துக் கொண்டாள். "அழகாகத்தான் இருக்கிறேன்"

— உதடுகள் ஒரு முறை முணுமுணுத்தது.



எங்கோ அடிவானத்து தேவதை ஒன்றை இழுத்து வந்து நிறுத்தியது போலிருந்தது.

'ஏன் அந்த கேள்வியை என்னிடம் கேட்டான்..?'

— மனதுக்குள் ஒரு முறை கேட்டுப் பார்த்துக் கொண்டாள்.

"காதல் என்றால் என்ன..?"

— அவளையறியாமல் வாய் சத்தமாய் கேட்டது.

கண்ணாடியில் தெரிந்த மதுமிதா அதே கேள்வியை சத்தமில்லாமல் திரும்பக் கேட்டாள்.

'காதல் என்றால் என்ன..?'

— இதயத்துக்குள் மீண்டும் மீண்டும் புரண்டது அந்தக் கேள்வி.

கண்கள் தொட்ட காகிதத்தில் - இதயம் தொட்ட வரிகள். அதிகாரத்தை கையில் வைத்துக் கொண்டிருக்கும் அதிகாரியின் பேனா சிந்திய உண்மை. ரசித்து சிரித்த நிஜம். உதடுகளுக்குக் கூட அந்த ரகசியம் தெரிந்து விடக் கூடாது என்று உள்ளத்திலேயே பலர் பூட்டி வைத்திருக்கும் அதிசய தகவல்- இப்படிச் சொன்னால் எப்படி.... வார்த்தைகளில் வரி வரியாய் சொன்னால் தானே புரிந்து கொள்ள முடியும்... காதலுக்கு புரிதல் அவசியமன்றோ... வார்த்தைகளில் காதல் என்றால் என்ன... காதல் என்பது... 'காதல்..? வார்த்தைகளில் கஷ்டம். பார்வைகளின் இஷ்டம்' திரையில் மின்னும் நட்சத்திர பெண் ஒருத்தி சினிமாத்தனம் உதறி...

"டிங்... டாங்... டிங்... டாங்..."

-சுவர்க் கடிகாரம் சத்தமிட்டு மதுமிதாவைக் கலைத்தது.

இரண்டு புத்தகங்களையும் நோட்டையும் எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டு வாசலுக்கு வந்தாள். வழியை மறித்துக் கொண்டு நான்கைந்து வேன்கள் நின்று கொண்டிருந்தன. வேன்களின் தலைகளில் கட்சி கொடிகள் படபடத்தன. வேன்களின் முதுகில் கட்சித் தலைவர் சிரித்துக் கொண்டிருந்தார். அங்கும் இங்கும் கரை வேஷ்டிகள் நகர்ந்து கொண்டிருந்தன.

ஆட்காட்டி விரலை அசைத்து அசைத்து ஏதோ கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தார் மதுமிதாவின் அப்பா. பரமசிவம் அந்த வட்டாரத்தில் பெரிய புள்ளி. பரமசிவம் ஒயின்ஸ் அந்த வட்டாரத்தில் பிரபலம். பிரதான அரசியல் கட்சி ஒன்றின் ஒன்றியச் செயலாளர். விரல் நீட்டிய திசையில் பாய்ந்து செல்லும் தொண்டர் படை கைவசம் உண்டு. மொத்தத்தில் பரமசிவம் அந்த வட்டாரத்தின் முடிசூடா சக்கரவர்த்தி. ஆறடி உயரத்தில் கறுகறுவென்று இருந்தார், மழையில் நனைந்த பனை மரம் போல. கோபத்துக்கு அடையாளமாய் மீசை. இப்பொழுதுதான் நரைக்கத் தொடங்கியிருந்தது. அப்பாவின் முதுகுக்கு பின்னால் முயல் குட்டிபோல் நடந்து தெருவுக்கு வந்தாள் மதுமிதா. இழுத்து நிறுத்தியது முரட்டுக் குரல்.

"மதுக்குட்டி..."

"என்னப்பா..?"

"காலேஜுக்குப் புறப்பட்டிட்டியாம்மா...?"

"ஆமாம்ப்பா."



"பத்திரமா போயிட்டு வாம்மா..."

- தலையசைத்து விட்டு வேகமாய் நடந்தாள் வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல.

பஸ் ஸ்டாப்பை நெருங்கியதும் கைக்கடிகாரம் பார்த்தாள்.

நேரம் 9.20.

'பஸ் வரும் நேரம் தான்.'

பஸ் ஸ்டாப் எவருமில்லாமல் வெறுமையாய் கிடந்தது.

'சந்திரன் எங்கே போனான்... கேள்வி கேட்டவன் பயந்து காணாமல் போய் விட்டானா... அவன் முகத்தைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே... பஸ் எப்போ வரும் என்று கேட்பது போல் அல்லவா அந்த கேள்வியை கேட்டான்..?'

மார்போடு அணைத்த புத்தகச் சுமையுடன் பஸ் ஸ்டாப்பில் காத்திருந்தாள்.

அந்த கிராமத்துக்கு இரண்டு பஸ் நிறுத்தம்.

வடக்கிலிருந்து தியேட்டர் நிறுத்தத்தில் ஆட்களை ஏற்றிக் கொண்டு தான் தெற்கேயிருக்கும் பிள்ளையார் கோவில் நிறுத்தத்துக்கு பஸ் வரும். அதனால் பஸ்ஸில் பொதுவாக கூட்டம் அதிகமாக இருக்கும். வடக்கு நோக்கி மதுமிதாவின் கண்கள் காத்திருந்தன. அவள் பொறுமையை அதிகம் சோதிக்காமல் முக்கி முனகியபடி பஸ் வந்து நின்றது. படிக்கட்டில் வேஷ்டிகளும், பேண்ட்களும் தொங்கிக் கொண்டிருந்தன.

சிவப்பு சுரிதாரை பார்த்ததும் விலகி வழி விட்டன.

கையில் புத்தகச் சுமையுடன் சிரமப்பட்டு ஏறிக் கொண்டாள்.

அவள் சிரமம் கண்ட யூனிபார்ம் அணிந்த ஸ்கூல் மாணவி ஒருத்தி கை நீட்டி புத்தகங்களையும், டிபன் பாக்சையும் வாங்கிக் கொண்டாள். கூட்டம் அங்கும் இங்கும் நெருக்கியது.

பஸ் உறுமி, சப்தம் எழுப்பி பெரிதாய் புகை கக்கி புறப்பட்டது.

கசங்கிய காகிதமாய் மதுமிதா முன்னால் வந்து நின்றார் கண்டக்டர்.

"டிக்கெட்"

"காலேஜ்"

— பத்து ரூபாய் தாளை நீட்டினாள்.

டிக்கெட்டும், சில்லறையும் கொடுத்து விட்டு நகர்ந்தார்.

ஸ்கூல் மாணவி கையசைத்து அழைத்தாள் மதுமிதாவை.

தாவணி சேலைகளை விலக்கி அந்த சின்ன பெண்ணை நெருங்கினாள்.

அந்த மாணவி எழுந்து மதுமிதா உட்கார இடம் கொடுத்தாள்.

'அப்பாடா!'

இடம் கிடைத்த சந்தோஷத்துடன் இருக்கையில் அமர்ந்தாள்.



பஸ் ப்ரேக்கிட்டு நின்றது.

யூனிபார்ம் அணிந்த ஸ்கூல் மாணவர்களும், மாணவிகளும் உதிர்ந்தார்கள்.

பஸ் மீண்டும் புகை கக்கிப் புறப்பட்டது.

கூட்டம் கணிசமாய் குறைந்து விட்டதால் காற்று வந்து ஜில்லிப்பாய் முகத்தில் மோதியது. அந்த சுகம் அந்த நேரத்திற்குத் தேவையாயிருந்தது மதுமிதாவுக்கு.

இருக்கையில் இன்னும் நன்றாக சரிந்து அமர்ந்து கொண்டாள். மடியில் புத்தகங்களும், டிபன் பாக்சும் சொகுசாய் அமர்ந்திருந்தன.

பக்கவாட்டில் கண்களை ஓட விட்டாள்.

இன்னும் சில இளைஞர்கள் படிக்கட்டில் தொங்கிக் கொண்டிருந்தனர் உற்சாகமாய்.

'நிர்மலா வந்திருப்பாளா...' இன்று முதல் பீரியட் பயோகெமிஸ்ட்ரி. ரம்பத்துடன் புரொபசர் தவளையார் வந்து அறுத்திடுவாரே...'

-மடியிலிருந்த 'பயோ கெமிஸ்ட்ரி' புத்தகத்தை எடுத்துப் புரட்டினாள்.

அந்தப் புத்தகத்தின் முதல் பக்கத்தில் அதிர்ச்சி காத்திருந்தது.

காற்றில் அசைந்தது அந்தக் காகிதம்.

அவளை நோக்கிக் கண் சிமிட்டிச் சிரித்தது.

அதிர்ச்சியில் வாய் திறந்தது.

நெற்றியில் வியர்வைப் பூக்கள்.

'எனக்கு தெரியாமல் எப்படி...?'

கண்களில் குழப்ப ரேகைகள்.

முதல் பக்கத்தை உற்றுப் பார்த்தாள்.

காற்று காகிதம் அசைத்ததால் அது தன் வாலை ஆட்டியது போலிருந்தது.

மீண்டும் ஒரு முறை கண் சிமிட்டியது.

அது — காகிதத்தில் ஒட்டும் ஸ்டிக்கர்.

தங்க வால் குதிரை.

மதுமிதாவின் உதடுகள் அசைந்தன —

"தங்க வால் குதிரை."




காதல் என்பது சோகமானது
ஆனாலும் சுகமானது
புரிந்தவர்களுக்கு
புனிதமானது
புரியாதவர்களுக்கு
பொழுது போக்கு.

- டைரக்டர் ராஜேந்தர்

பஸ் வேகமாய் ஓடிக் கொண்டிருந்தது.

மதுமிதாவின் சிந்தனையோ ஒரே இடத்தில் ஆணி அடித்தது போல் நின்றிருந்தது. பயோ கெமிஸ்ட்ரி புத்தகத்தின் முதல் பக்கத்தில் ஒட்டப்பட்டிருந்த 'தங்க வால் குதிரை' ஸ்டிக்கர் அவளுக்கு அதிர்ச்சியையும் ஆச்சர்யத்தையும் ஒரே நேரத்தில் கொடுத்திருந்தது. இந்த தங்க வால் குதிரை எப்படி வந்தது என் புத்தகத் தில்_யார் இதை ஒட்டியிருப்பார்கள்_எனக்கு தெரியாமல் என் புத்தகத்தில் எவர் ஒட்ட முடியும்... புத்தகத்தை

வகுப்பறையில் வைத்து விட்டு தண்ணீர் குடிக்கச் சென்ற போது யாரும் ஒட்டியிருப்பார்களோ... இல்லை லேடீஸ் வெயிட்டிங் ஹாலில் புத்தகத்தை விட்டு விட்டு வரும் போது... இருக்கலாம். நிர்மலா ஒட்டியிருப் பாளோ... அவள் எதற்கு இதை ஒட்டப்போகிறாள்... அவளுக்குத்தான் எனக்கு குதிரை என்றால் நிரம்ப பிடிக்கும் என்று தெரியும்... அவள் தான் ஒட்டியிருக்க வேண்டும். எனக்குத் தெரியாமல் ஏன் ஒட்டினாள்... என்னிடம் விளையாட்டா காட்டுகிறாய்... இரு... இரு... வருகிறேன்"

— முகத்தில் அதிர்ச்சி விலகி புன்னகை ஓடியது.

மீண்டும் முதல் பக்கத்தைப் பார்த்தாள்.

காற்றில் காகிதம் வேகமாய் படபடத்தது.

அந்த தங்க வால் குதிரை வால் அசைத்து ஓடுவது போலிருந்தது கண்களுக்கு.

"தங்க வால் குதிரை"

- மதுமிதாவின் உதடுகள் காதலுடன் முணுமுணுத் தன.

- மனதுக்குள் ஒரு முறை ஆசையாய் சொல்லிப் பார்த்துக் கொண்டாள்.

சட்டென்று குனிந்து தங்க வால் குதிரைக்கு முத்தம் ஒன்று தந்தாள்.

அடுத்த வினாடியே வெட்கம் வந்து சூழ்ந்து கொண்டது.

ஓடும் பஸ்ஸில்... அதுவும் அறுபது பேருக்கு மத்தியில்... இதென்ன முட்டாள் தனம்... நான் முத்தம்



கொடுத்ததை யாரும் பார்த்திருப்பார்களோ... என்ன புத்தி இது...

- கண்களால் ஒரு முறை வட்டமிட்டாள். யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை.

மௌனமாய் பயோகெமிஸ்ட்ரி புத்தகத்தை மூடினாள்.

உள்ளேயிருந்த தங்க வால் குதிரை திமிறுவது போலிருந்தது.

நோட்டை எடுத்து புத்தகத்தின் மேல் வைத்து அழுத்தினாள் குறுஞ்சிரிப்புடன்.

பஸ் ப்ரேக்கிட்டு நின்றது.

தலையை நீட்டி வெளியே எட்டிப் பார்த்தாள்.

கல்லூரி முகப்பு வாயில் தெரிந்தது.

திருவள்ளுவர் கலைக்கல்லூரி என்ற பெயர்ப் பலகை.

அந்தக் கல்லூரி கிராமங்களைச் சார்ந்த கலைக் கல்லூரி.

கல்லூரியில் பல வண்ணங்களில் தாவணிகளையும் ஒன்றிரண்டு வேஷ்டிகளையும் பார்க்கலாம்.

பஸ்ஸிலிருந்து நிதானமாய் இறங்கினாள் மதுமிதா.

"ஹாய்... ஹாய்..." - சத்தங்களும் கையசைப்புகளும் அழைக்க.

மாணவர்களும் மாணவிகளும் சந்தோஷத் துள்ள லுடன் இறங்கிப் போனார்கள்.

மதுமிதா மட்டும் தனிமைப்பட்டு நிற்பது போலிருந்தது.

சற்று தள்ளியிருந்த யூகலிப்டஸ் மர நிழலில் சில மாணவிகள் பேசிக் கொண்டிருந்தனர்.

'எங்கே நிர்மலா... தினமும் வந்து யூகலிப்டஸ் மர நிழலில் காத்து நிற்பாளே...' - கண்கள் அங்கும் இங்கும் அலைந்து தேடின.

எந்த திசையிலும் நிர்மலாவைக் காணவில்லை.

'நிர்மலா ஏன் வரவில்லை... குதிரை படம் ஒட்டியிருப்பதை நானே பார்த்து கேட்கட்டும் என்று வெயிட்டிங் ஹாலில் காத்திருக்கிறாளோ... கழுதை...'

— வெயிட்டிங் ஹாலை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

'குதிரையில் தங்க வால் குதிரை இருக்கிறதா... இது வரை எந்த குதிரைக்கும் தங்க வால் பார்த்தது இல்லையே... தங்கத்தால் வால்...'

சூரியன் சூடாகியிருந்தான்.

மாணவர்களும் மாணவிகளும் சைக்கிள்களிலும், மோட்டார் சைக்கிள்களிலும், நடந்தும் கல்லூரி கட்டிடங்களை நோக்கிப் போய்க்கொண்டிருந்தனர். அங்கும் இங்குமாய் ஒன்றிரண்டு மாணவிகள் தெரிந்தார்கள்.

வெயிட்டிங் ஹாலில் காலடி எடுத்து வைத்தாள்.

மாணவிகள் இடம் விட்டு இடம் வண்ணத்து பூச்சியாய் நகர்ந்து கொண்டிருந்தார்கள்.

சிலர் படிகளில் அமர்ந்து புத்தகங்களை புரட்டிக் கொண்டிருந்தார்கள். சிலர் கையகல முகம் பார்க்கும் கண்ணாடியில் ரசித்து ரசித்து ஒப்பனை செய்தார்கள்.



மதுமிதாவின் கண்கள் விழுந்து விழுந்து தேடின.

நிர்மலாவைக் காணவில்லை.

'எங்கே போய் விட்டாள்... லெட்ரின் போயிருப்பாளோ...'

கல்லூரி மணி அடிக்கிற சத்தம் கேட்டது.

மாணவிகள் பரபரப்பாய் தங்கள் வகுப்பறையை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

அவசரமாய் ஓடிப் போய் லெட்ரினை எட்டிப் பார்த்தாள்.

அகல திறந்து கிடந்தது.

'நிர்மலா வரவில்லையா...'
— ஏமாற்றத்துடன் திரும்பினாள்.

"என்ன மதுமிதா... கிளாஸுக்கு வரலியா...?"

— அழைத்தாள் வகுப்புத் தோழி ஒருத்தி.

"ம்... போகலாம்."

அரை மனதுடன் வகுப்பறையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

வகுப்பறை அமைதியாய் இருந்தது.

கரும்பலகையில் வண்ண வண்ணக் கோடுகளைக் கிழித்து - தன் எண்ணங்களைச் சிதறிக் கொண்டிருந்தார் பேராசிரியர்.

மதுமிதாவின் எண்ணங்களோ நான்கு திசைக்கும் சிதறியிருந்தன.

'நிர்மலா ஏன் வரவில்லை... தங்க வால் குதிரையை அவள் தான் ஒட்டியிருப்பாளோ... வேறு யாராவது... இருக்காது... எதற்காக என் புத்தகத்தில் ஒட்ட வேண்டும்...'

- பாடத்தில் மனம் செல்ல மறுத்தது பிடிவாதமாய்.

கண்கள் விரித்து வைத்திருந்த பயோ கெமிஸ்ட்ரி புத்தகத்தின் முதல் பக்கத்தையே தொட்டுக் கொண்டிருந்தன. இதயம் குதிரையின் காலடியில் விழுந்து கிடந்தது.

உதட்டோரத்தில் வியர்வைப் பூக்கள். விரல்கள் மெலிதாக நடுங்கின.

கண் மூடித் திறந்தது அந்த தங்க வால் குதிரை.

வியப்பு தடவிய கண்களுடன் அந்த ஸ்டிக்கர் குதிரையை உற்றுப் பார்த்தாள்.

ஏதும் அறியாத அப்பாவி போல குதிரை அசைவின்றி இருந்தது.

'நிர்மலா ஏன் வரவில்லை என்று உடனே தெரிந்தாக வேண்டும்'

- உள் மன ஆசை உந்தித் தள்ளியது. எழுந்து விட மனம் துடித்தது.

'பீரியட் முடியட்டும்'

- பல்லைக் கடித்துக் கொண்டு காத்திருந்தாள் கரையும் நிமிடங்களுக்காய்.

மணி ஒலித்தது.

கரும்பலகையை துடைத்து விட்டு சோர்வுடன் வெளியேறினார் பேராசிரியர்.



மாணவர்களும் மாணவிகளும் உற்சாகமாய் எழுந்து கொண்டனர்.

அடுத்த வகுப்பு தமிழ்.

எதிரிலிருக்கும் 'சி' பிளாக் மாடி அறையில் நடக்கும்.

அதற்குள் எப்படியும் வசந்தாவைப் பார்த்து விட வேண்டும் என்ற வேகத்தில் புத்தகத்தை கையில் எடுத்துக் கொண்டு பக்கத்துக் கட்டிடத்தை நோக்கி ஓடினாள்.

எதிரில் வந்தாள் 'அந்த வசந்தா.'

"உன்னை பாக்கிறதுக்குத் தான் ஓடி வர்றேன். நிர்மலா ஏன் வரல்ல..."

— என்று கேட்டாள் படபடப்பாய்.

"தெரியவில்லை"

— பதில் வந்தது ஒரு வார்த்தையில்

விடை தெரியாத கேள்வியுடன் திரும்பி வகுப்பறைக்கு வந்து, மறந்து விட்டுச் சென்ற நோட்டை கையில் எடுத்துக் கொண்டு 'சி' பிளாக்கை நோக்கி நடந்தாள்.

'புரொபசர் வந்திருப்பாரோ... தாமதமானாலும் எதுவும் சொல்ல மாட்டார்... தமிழ் வகுப்பு தான் கலகலப்பான வகுப்பு. சிரிக்க வைத்து சிந்திக்க வைக்கிறவர்.

மதுமிதா வேக நடை நடந்தாள் வகுப்பறையை குறி வைத்து.

இரண்டு கண்கள் இமைக்காமல் அவளைக் கவனித்துக் கொண்டிருந்தன — காதலுடன்.

தமிழ் வகுப்பு சிரிப்பலைகளுடன் துவங்கியிருந்தது.

வாசலில் போய் நின்றாள் மதுமிதா தயக்கத்துடன்.

"...அவன் பாரதிக்கு தாசன். நாமோ அவனுக்கு தாசன். அவன் வாழ்ந்த காலத்தில் நானும் வாழ்ந்திருக்கிறேன். அவன் சுவாசித்த காற்றையே நானும் சுவாசித்திருக்கிறேன் என்ற எண்ணமே..."

- பாடம் நடத்திக் கொண்டிருந்த தமிழ் பேராசிரியர் இளமாறன் பேச்சு பாதியில் அறுந்தது. அவர் கண்கள் திரும்பிப் பார்த்தன அவசரமாய்.

புன்னகை வந்து உதட்டில் ஒட்டிக் கொண்டது.

"மாணவர்கள் கவனம் வகுப்பறையில் இருப்பதை விட வாசலில் இருக்கிறதே ஏன்...? மங்கை நல்லாள் வந்து நின்றதாலா...?"

— வினா தொடுத்தார் தமிழ்ப் பேராசிரியர்.

"இல்லை ஐயா, நீங்கள் திரும்பிச் செல்கிற வழிப்பாதை அது என்பதால்..."

— குரல் கொடுத்தான் ஒரு 'துடுக்கு' இளைஞன்.

"நல்ல பதில்"

- தலையசைத்தவர் மதுமிதா முகத்துக்கு கண்களைத் திருப்பினார்.

அவளுக்கோ வெட்கமாய் போயிற்று.

"ஏனம்மா தாமதம்...?"

"சார்... வந்து..."

"தமிழ் ஐயா... இந்த கேள்வியை நாங்கள் கடுமையாக ஆட்சேபிக்கிறோம்"



— என்றான் மாணவன் ஒருவன்.

"காரணம்...?"

— கேள்வி கேட்டார் புருவம் உயர்த்தி.

"நிலவு சில நாட்கள் தாமதமாய் வருவது அதன் இயல்பு. மஞ்சள் நிலவு மாதத்துக்கு ஒரு நாள் வராமல் கூட இருப்பதுண்டு" என்றான் அதே மாணவன் குரலில் இனிமை சேர்த்து.

"ஓ..." என்று சத்தமிட்டு ஆமோதித்தன குரல்கள்.

"மன்னிக்க வேண்டும் மாண்புமிகு மாணாக்கரே... தாங்கள் போன பிறவியில் கம்பனாய் பிறந்திருக்க வேண்டும். மஞ்சள் நிலவே தாமதமானாலும் தயங்காமல் வரவேண்டும். இருட்டாய் கிடக்கும் வகுப்பறை வானத்துக்கு மஞ்சள் ஒளி தருக"

- என்றார் பேராசிரியர் சற்று குனிந்து இரு கரம் விரித்து நீட்டி.

வெட்கத்தில் கன்னம் சிவந்து போயிற்று மதுமிதாவுக்கு,

"மஞ்சள் நிலவே வருக... மங்கல விளக்கே வருக... கொஞ்சும் தமிழே வருக... கோடானு கோடி தருவோம்..."

பாடல் வந்தது வகுப்பறையின் ஒரு மூலையிலிருந்து.

ஓட்டமும் நடையுமாய் போய் இருக்கையொன்றில் அமர்ந்து கொண்டாள் மதுமிதா.

வகுப்பறை மீண்டும் 'ஓ' போட்டது உற்சாக சத்தத்தில்.

"இனி கொஞ்ச நேரம் பாரதிதாசன் சொல்றதைக் கேட்போமா_"

"நீங்க சொல்றதை வேணும்னா தலைவிதியே என்று கேட்கிறோம்."

"கொஞ்ச நேரம் கண்களும் காதுகளும் இங்கே இருக்கட்டும். அது போதும் என் தமிழ்ப் பணிக்கு"

- என்றவர் எல்லோருடைய முகத்தையும் ஒரு முறை பார்வையால் வருடி விட்டு உதடுகளில் புன்னகை மிதக்கப் பாடத்தை ஆரம்பித்தார்.

"எத்தனையோ குற்றங்களை நம் கண் முன்னே பார்த்திருக்கிறோம். குற்றங்களுக்கு தண்டனை கொடுப்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். கொலைக் குற்றம், திருட்டுக் குற்றம், இப்படி எத்தனையோ குற்றங்கள். இங்கே புதிதாக ஒரு குற்றத்தை நமக்கு பாரதிதாசன் அறிமுகப்படுத்துகிறார். அது மகத்தான குற்றம்"

- என்று சொல்லி விட்டுப் பேச்சை நிறுத்தினார் பேராசிரியர்.

நிமிர்ந்து உட்கார்ந்தாள் மதுமிதா.

- அத்தனை கண்களும் அவர் முகத்தையே மொய்த்துக் கொண்டிருந்தன.

"அந்த குற்றம்_ காதல் குற்றம்_"

- என்றார் புன்னகை மாறாமல்.

மதுமிதாவின் கண்கள் இமைத்தன காதல் பட்டாம் பூச்சியாய்.



# 4

காதல் என்பது மனுஷ வாழ்க்கையில் ஏற்படும் ஒரு தத்து.
இந்த தத்து சிலரைத் தொடாமலேகூடப் போய்விடும்.
சிலரைத் தொட்டு லேசாக அலுக்கிவிட்டுப் போகும்.
சிலரை பேயாய் பிடித்து ஆட்டும்.
இந்த காதல் தத்தில் -
அடிபட்டுக் காணாமல் போனவர்களும் உண்டு.

*- கி. ராஜநாராயணன்*

காதல் குற்றம் என்று பேராசிரியர் சொன்ன அந்த வினாடியே இளைய இதயங்களின் கவனம் ஒரே புள்ளியில் வந்து குவிந்து நின்றது. மதுமிதாவின் உதடுகளோ சத்தமில்லாமல் முணுமுணுத்தன. துண்டு துண்டு வார்த்தைகளாய்.

'காதல் குற்றமாம்_ அதுவும் மகத்தான குற்றமாம்_ பாரதிதாசன் சொன்னதாக சொல்கிறாரே காதல் குற்றமென்றால் காதலிப்பவர்கள் குற்றவாளிகளா_ காதல்

குற்றவாளிகள்... நல்ல தலைப்பு... காலையில் காதல் என்றால் என்ன என்று சந்திரன் கேட்டானே...?'

- கண்களைத் திருப்பி வகுப்பறையில் சந்திரனை தேடினாள். கடைசி வரிசையில் அமர்ந்திருந்தான் அவன் கண்களோ பேராசிரியர் முகத்தில் நிலைத்திருந்தன. காதல் குற்றம் என்று பேராசிரியர் வாயிலிருந்து வார்த்தைகள் சிதறிய சில வினாடிகளில் வகுப்பறையில் ஒரு மூலையிலிருந்து ஒரு மாணவி எழுந்து கேள்வி ஒன்றை வீசினாள்.

"காதல் குற்றமா சார்...?"

"அதை தெரிஞ்சிட்டு நீ என்னம்மா செய்யப் போறே...?"

- வகுப்பறை மொத்தமும் 'ஓ' போட்டது.

'உன் பெயர் என்னம்மா...?'

"அமராவதி."

"அம்மா அமராவதி, காதல் குற்றம்னு யார் சொன்னாலும் நீ ஒத்துக்க மாட்டே... இந்த ஏழை வாத்தியார் சொல்றதையா ஒத்துக்கப் போறே... உன் சந்தேகத்தை தீர்க்கும் கவிதை நிச்சயம் அம்பிகாபதியிடம் கிடைக்கும்."

- மாணவர்கள் மீண்டும் ஒரு முறை 'ஓ' போட்டனர்.

வகுப்பறை சிரிப்பலையில் அதிர்ந்தது.

சிரிப்பு அடங்கியதும் அந்த மாணவியை அமரும்படி சைகை செய்தார்.

"எங்களுக்கும் அந்த குற்றத்தை செய்ய ஆசையாயிருக்கிறது"



- என்றான் மாணவன் ஒருவன் எம்.என். நம்பியார் குரலில்.

- புன்னகையுடன் பாடத்தைத் தொடர்ந்தார் தமிழ்ப் பேராசிரியர்.

"பாரதிதாசன் சொல்கிற குற்றம் காதல் குற்றம். கொலைக் குற்றத்தை ஒரு தனி மனிதனால் செய்ய முடியும். திருட்டுக் குற்றத்தையும் ஒரு தனி மனிதனால் செய்ய முடியும். ஆனால் காதல் குற்றத்தை மட்டும் தனி ஒரு மனிதனால் செய்ய முடியாது. அதுதான் காதல் குற்றத்துக்கு உள்ள மகத்துவம். ஒரு ஆணும் ஒரு பெண்ணும் சேர்ந்து தான் காதல் குற்றத்தில் ஈடுபட முடியும். அதனால்தான் தன் கவிதைக்குத் தலைப்பாக 'காதல் குற்றவாளிகள்' என்று வைத்திருக்கிறார் பாரதிதாசன். கவிதையே காதல் கதை சொல்கிறது...

கையிலிருந்த புத்தகத்தை புரட்டினாள் மதுமிதா.

'காதல் குற்றவாளிகள்' என்ற தலைப்பு கண்ணில் பட நிறுத்தினாள்.

கவிதை எழுதியவர் பாரதிதாசன் என்று அடிக் குறிப்பு சொன்னது.

அதே நேரம் நிர்மலா நினைவும் வந்தது.

'அவள் வந்திருந்தால் இந்த வகுப்பு இன்னும் கலகலப்பாய் இருந்திருக்கும்... இன்று பார்த்து வராமல் இருந்து விட்டாளே...'

மதுமிதாவின் இதயத்துக்குள் தங்கவால் குதிரை மெல்ல நடந்தது.

'...சுந்தரன் உங்களைப் போல ஒரு கல்லூரி காளை. ஆனால் உங்களைப் போல வீட்டுக்குப் போனதும்

மோட்டார் சைக்கிளில் ஊர் சுற்றுகிறவன் அல்ல. கல்லூரி பாடங்களை விழுந்து விழுந்து படிக்கிறவன். திடீர் திடீரென்று அவன் வீட்டு தோட்டக் கதவு திறக்கும். நம்ம ஊர் படத்து மும்தாஜ் மாதிரி சொர்ணம் என்ற பெயருடைய அழகுப் பெண் வருவாள். கொஞ்ச நேரம் கொஞ்சி கொஞ்சி கொஞ்சு தமிழில்..."

"கொன்னுட்டிங்க சார்."

'ஓ' போட்டது வகுப்பறை.

'நோ கமெண்ட்ஸ். கொஞ்சு தமிழில் சுந்தரன் அம்மாவிடம் வீட்டுக் கதைகள் பேசி விட்டு வீடு செல்வாள். அது அந்த தங்க மயிலின் வாடிக்கை. இனிதான் வேடிக்கை. அன்று பட்டுச் சேலை எடுக்க சுந்தரன் அம்மா ஆரெம்கேவி சென்று விட்டாள். வழக்கம் போல தோட்டக் கதவை திறந்து கொண்டு சுந்தரன் வீட்டுக்கு வந்து விட்டாள் சொர்ணம். கூடத்திலே அமர்ந்து பயோ கெமிஸ்ட்ரி படித்துக் கொண்டிருந்தான் சுந்தரன்"

- வார்த்தைகள் அறுந்து விழுந்து விட்டன போல சட்டென்று இடையில் பாடத்தை நிறுத்தினார் தமிழ் பேராசிரியர் இளமாறன். மாணவர்களும் மாணவிகளும் அவருடைய முகத்தைக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

"மீதியை நாளைக்கு வைச்சுக்கலாமா..?"

"இடைவேளை போட வேண்டிய இடமா சார் இது..?"

-அங்கலாய்த்தான் கடைசி வரிசையிலிருந்த சந்திரன்.



"விபரீதத்துக்கு வழி வகுக்காதா சார்..?"

- கேள்வியை வீசினான் ஜீன்ஸ் அணிந்த மாணவன் எழுந்து.

"எதுக்கு விபரீதம்..?"

— என்று கேட்டார் நெற்றி சுருக்கி.

"நாளைக்கு தமிழ் வகுப்பு எப்போ சார்..?"

"மதியம் இரண்டு மணிக்கு."

"இந்த தமிழ் வகுப்புக்கும் அடுத்த தமிழ் வகுப்புக்கும் இடைவெளி இருபத்தைந்து மணி நேரம் சார். அதுவரைக்கும் ஒரே வீட்ல ஒரு வயசு பெண்ணும் ஒரு வயசு பையனும் தனியாக இருந்தா என்ன சார் ஆகும் தப்புத்தண்டா ஆகிவிடாதா.. ஏதாவது விபரீதம் ஆகிப் போச்சன்னா பாரதிதாசனுக்கு நீங்க தான் சார் பதில் சொல்ல வேண்டியதிருக்கும்..."

-ஒரு தேர்ந்த நடிகன் போல அந்த மாணவன் கண் உருட்டி, கையசைத்துப் பேச, டெஸ்க்கில் கை தட்டி ஹோவென்று சிரித்தது மொத்த வகுப்பறையும். வாய் பொத்திச் சிரித்தாள் மதுமிதா.

"அமைதி... அமைதி... ஆரெம்கேவிக்கு பட்டு வாங்கப் போன சுந்தரன் அம்மா இடையில் வந்து விடுவாள் என்று நான் நம்பினேன். நீங்கள் அம்மா வரக்கூடாது என்று நினைக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். அப்படித்தானே?"

-மீண்டும் புன்னகை முகங்கள்.

"சுந்தரனும் சொர்ணமும் சந்தித்து கொண்டவை அழகு தமிழில் பாரதிதாசன் எழுதியிருக்கிற எழுத்தே அழகுக்கு அழகு. கவிதைக்குள் கவிதை"

"பாடிக் காட்டுங்க சார்"

— என்றாள் மதுமிதா கெஞ்சும் குரலில்.

"மஞ்சள் நிலவு சொன்ன பின் மறுபேச்சு உண்டா..?"

— மீண்டும் வெட்கத்தில் முகம் சிவந்து போயிற்று அவளுக்கு.

உதட்டை ஈரப்படுத்திக் கொண்டு கம்பீரக் குரலில் பாட ஆரம்பித்தார் பேராசிரியர்.

**"கூடத்திலே மனப்பாடத்திலே-விழி**
**கூடிக் கிடந்திடும் ஆணழகை**
**ஓடை குளிர் மலர் பார்வையினால் அவள்**
**உண்ணத் தலைப்படு நேரத்திலே**
**பாடம் படித்து நிமிர்ந்த விழி-தனிற்**
**பட்டுத் தெரித்தது மானின் விழி!**
**ஆடை திருத்தி நின்றாள் அவள் தான் — இவன்**
**ஆயிரம் ஏடு திருப்புகின்றான்."**

வகுப்பு நேரம் முடிந்ததை அறிவிக்கும் மணி ஒலித்தது.

"நாளை தொடர்கிறேன்"

— என்று சொல்லி விட்டு வெளியேறினார் தமிழ்ப் பேராசிரியர்.

தயக்கத்துடன் எழுந்து கொண்டாள் மதுமிதா.

கையிலிருந்த 'பயோகெமிஸ்ட்ரி' புத்தகம் கனத்துக் கிடப்பது போலிருந்தது.



'சின்னதாய் இருக்கும் தங்கவால் குதிரைக்கு இத்தனை கனமா..?'

உயர படிகளில் நிதானமாய் இறங்கி நடந்தாள்.

அதே இரண்டு கண்கள் விழி அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தன.

கண்களில் காதல் மிதந்தது.

வேறு இரண்டு கண்களும் மதுமிதாவை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன.

அவைகளில் காமம் வழிந்தது.

அதே நேரம் —

மன்மதன் கரும்பு வில் மலர்க் கணையோ மதுமிதாவின் இதயத்தைக் குறி பார்த்தது.

அவளோ குழப்பத்துடன் நடந்து கொண்டிருந் தாள்.

தூரத்து பூ மஞ்சள் மரம் நோக்கி.

**மா**லையில் அதிகக் களைப்புடன் வீடு வந்து சேர்ந் தாள் மதுமிதா.

புத்தகங்களைப் படுக்கையில் போட்டு விட்டு, தோட்டத்துக்குச் சென்று முகம் கழுவித் திரும்பினாள். சுரிதாரை உதறி விட்டு நைட்டிக்கு மாறினாள்.

அம்மா சுடச்சுட காபி தந்தாள் பாசம் கலந்து.

மதுமிதாவின் இதயத்துக்கு இதமாய் இருந்தது.

வார இதழ்களில் படிக்காமல் விட்டிருந்த தொடர் கதையைத் தேடி பிடித்தாள்.

சூரியன் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் பதுங்கிக் கொள்ள, வேக வேகமாய் இருட்டு ஓடி வந்திருந்தது.

எழுந்து குழல் விளக்கின் ஸ்விட்சை அழுத்தினாள்.

மூன்று முறை கண் சிமிட்டி வெளிச்சம் வீசியது.

"கொஞ்ச நேரம் எதாவது 'தியரி' படிக்கலாமா..?

- முணுமுணுத்தவள் படுக்கையில் கிடந்த 'பயோ கெமிஸ்ட்ரி' புத்தகத்தைக் கையில் எடுத்தாள். புத்தகம் கனத்துக் கிடப்பது போன்ற பிரமை ஏற்பட்டது.

புத்தகத்திலிருந்து நழுவி காலடியில் விழுந்தது ஒரு சின்னக் கவர்.

அந்த கவரின் அமைப்பு விசித்திரமாயிருந்தது.

மூன்று சென்டி மீட்டர் அகலமும் பதினைந்து சென்டிமீட்டர் நீளமும் இருந்தது. அந்த கவர் மஞ்சள் நிறத்தில் இருந்தது.

'இந்த கவர் எப்படி புத்தகத்துக்குள் வந்தது...?'

- கவரை ஒரு முறை வியப்புடன் புரட்டிப் பார்த்தாள்.

'நேற்று தங்கவால் குதிரை... இன்று மஞ்சள் கவரா..?'

— வியப்பு கலந்த பயம் எட்டிப் பார்த்தது.

'இன்று நிர்மலாவும் வரவில்லை. வேறு யாரோ எனக்கு..?'

அந்த நினைப்பே அவள் உடம்பை மெலிதாக நடுங்கச் செய்தது.

அந்த சின்ன மஞ்சள் கவரின் ஓரம் கிழித்தாள்.

விரல்கள் நடுங்குவது உணர்ந்தாள்.



நெற்றியில் வியர்வைப் பூக்கள் உள்ளேயிருந்து எட்டிப் பார்த்தன.

பளபளப்பான வெள்ளைக் காகிதம்.

மெல்ல உருவி காகிதத்தை வெளியே எடுத்தாள்.

வெள்ளைக் காகிதத்தில் நீல எழுத்துக்கள் சிரித்தன.

'மதுமிதா...

அட...

ஓராயிரம் கவிதைக்கு

உரிய அழகா

ஒரே ஒரு வார்த்தைக்கு..?

— தங்கவால் குதிரை.'



உள்ளத்துக்குள்ளே மழைத்துளி
துள்ளிவிழ முடியுமா?
ஜன்னலுக்கு அருகே
உணவு மறந்து-வலி மறந்து
உயிர் மறந்து -
தவம் செய்ய முடியுமா...?
மொழி அறியாவிட்டாலும்
ஒருவரால் கவிதை எழுத முடியுமா...?
முடியும்!
காதல்!

*- நடிகை ரம்பா*

மதுமிதாவின் மடியில் கிடந்த மஞ்சள் கவர் நழுவி தரையில் விழுந்தது. கையில் இருந்த வெள்ளைக் காகிதம் ஃபேன் காற்றில் படபடத்தது. நீல எழுத்துக்கள் நீலப் பறவைகளாய் உருமாறி, சிறகடிப்பது போலிருந்தது. மயக்கம் வருவது போல் உணர்ந்தாள்.



அந்த சில நிமிடங்களுக்குள் தெப்பமாய் வியர்வையில் நனைந்து போயிருந்தாள். மீண்டும் ஒருமுறை மனதுக்குள் படித்தாள் வார்த்தையாய்.

'மதுமிதா..

அட—

ஓராயிரம் கவிதைக்கு

உரிய அழகா

ஒரே ஒரு

வார்த்தைக்கு..?

- தங்கவால் குதிரை'

ஒரு நிமிடம் அந்தக் காகிதத்தை இமைக்காமல் பார்த்தாள்.

எழுத்துக்கள் ஒன்றுக்கொன்று மோதி சிரிப்பது போல் இருந்தது.

'தங்க வால் குதிரை' என்ற எழுத்துக்களே குதிரையாய் உருமாறிக் கனைப்பது போலிருந்தது.

'இதென்ன சிந்தனை..?'

- கையிலிருந்த காகிதத்தை உதறினாள்.

காகிதத்திலிருந்த எழுத்துக்களை உதிர்த்து விடும் கோபம் அதிலிருந்தது.

மீண்டும் அந்த எழுத்து சுமந்த காகிதத்தைப் பார்த்தாள்.

இம்முறை எழுத்துக்கள் வருத்தம் அடைந்திருப்பது போல மனதுக்குப் பட்டது.

குனிந்து காலடியில் கிடந்த மஞ்சள் கவரைக் கையில் எடுத்தாள்.

அந்த 'தங்க வால் குதிரை'யை கவரின் வயிற்றுக்குள் தள்ளினாள்.

அடுத்த விநாடி திடுக்கிட்டாள்.

அவளை நோக்கி வந்து கொண்டிருந்தது காலடி ஓசை.

'ம்.. இதை என்ன செய்வது..?'

கையிலிருந்த மஞ்சள் கவரை அவசர அவசரமாய் புத்தகத்துக்குள் மறைத்து விட்டு நிமிர்ந்தாள். முகத்தில் பதட்டம்.

வாசலில் அம்மா. "சாப்பாடு வைம்மா. இதோ வர்றேன்" என்றாள் மதுமிதா படபடப்புடன்.

"என்ன இது ஆச்சர்யமாயிருக்கு! முந்நூறு தடவை மூச்சு விடாம கூப்பிட்டாதான் முக்கி முனகி சாப்பிடறதுக்கு எழுந்து வருவே. அதிசயமாயிருக்கு. இன்னைக்கி நீயாவே சாப்பாடு கேட்கிற.. ராத்திரியே மழை வந்தாலும் வந்திடும்."

"வயிறு பசிக்க ஆரம்பிச்சிடிச்சும்மா"

— என்றாள் பொய்யான நடிப்புடன்.

"தினமும் இப்படியே பசிச்சா நல்லது தான்."

அம்மா திரும்பி சமையலறையை நோக்கி நடந்தாள் புன்னகையுடன்.

மதுமிதா மின்னல் வேகத்தில் எழுந்து —

அந்த கவரை மறைத்து வைத்திருந்த புத்தகத்தை எடுத்துப் புத்தக அடுக்கினுள் செருகினாள்.



முகத்தில் பூத்திருந்த வியர்வையை நிதானமாய் துடைத்துக் கொண்டாள்.

நிம்மதிப் பெருமூச்சுடன் டைனிங் ஹாலில் போய் அமர்ந்தாள்.

வெள்ளி தட்டில் கொஞ்சமாய் சோறு போட்டு, சாம்பார் ஊற்றி, முருங்கைக்காய் பொரியலும், மாங்காய் ஊறுகாயும், அப்பளமும் வைத்தாள் அம்மா.

தட்டிலிருந்த சாப்பாட்டை பார்த்த மதுமிதா திடுக்கிட்டாள்.

சோற்று பருக்கைகள் எல்லாம் நீல எழுத்துக்களாய் மாறி விட்டது போல் இருந்தது.

'மதுமிதா... மதுமிதா... ஓராயிரம்... ஓராயிரம் கவிதைக்கு உரிய அழகா ஒரே ஒரு வார்த்தைக்கு.. ஒரே ஒரு வார்த்தைக்கு.. தங்க வால் குதிரை.. தங்க வால் குதிரை..' தட்டிலிருந்த சோற்று பருக்கைகள் குதித்து குதித்து சப்தமிடுவது போல பிரமை ஏற்பட்டது.

"என்ன மது.. சாப்பாட்டை அழகு பாக்கிறியா..?"

அம்மாவின் குரலில் கலைந்தாள் திடுக்கிடலோடு.

அவசர அவசரமாய் சாப்பிட ஆரம்பித்தாள் வெட்கத்துடன்.

ஒவ்வொரு கவளம் சோற்றையும் விழுங்குவது பெரும் பாடாக இருந்தது. தண்ணீர் குடித்து குடித்து கொஞ்சம் கொஞ்சமாய் சாப்பிட்டாள்.

எழுத்துக்களையே மென்று விழுங்குவது போல் இருந்தது. பாதிக்கு மேல் ஒரு கவளம் கூட சாப்பிட முடியவில்லை. குமட்டுவது போல் உணர்ந்தாள்.

இன்னும் ஒரு கவளம் சாப்பிட்டாலும் வாந்தி தான் என்ற நிலைக்கு வந்ததும் சாப்பாட்டை தட்டில் அப்படியே வைத்து விட்டு எழுந்து விட்டாள் மதுமிதா.

"மதுக்குட்டி... காலேஜிலயிருந்து வந்ததும் வராததுமா பசிபசின்று பறந்தே... சோறு தட்டில அப்படியே இருக்குது.. சப்பாத்தி செய்து தரட்டுமா..."

"போம்மா.."

உதட்டைச் சுளித்தவள் தோட்டத்தை நோக்கி ஓடினாள் மனதில் சுமையுடன்.

கதிரவனின் மஞ்சள் ஒளி மிச்சங்கள், மேற்கு வானத்தில் மிதக்கும் துண்டு மேகங்களுக்கு தங்கச் சரிகையாய் கட்டப்பட்டிருந்தன. கீழ் வானத்தில் வெட்கத்துடன் எட்டிப் பார்த்தது மஞ்சள் நிலவு. வேலியோரத்தில் பூத்துக் கிடந்த சூரிய காந்தி முகத்தில் மட்டுமே வாட்டம் தெரிந்தது. தென்மேற்கு பருவக்காற்று மெல்ல மதுமிதாவின் தாவணியை அசைத்தது. தரையில் புரளும் பாவாடையை தூக்கிப் பிடித்தபடி தோட்டத்து கிணற்றை நோக்கி நடக்கிறாள். எங்கிருந்தோ குயில் ஒன்று கூவுவது காற்றில் மிதந்து வருகிறது. தோட்டத்தில் பூத்துக் கிடக்கும் வண்ணப் பூக்கள் வரவேற்பது போல் உணர்கிறாள். அங்கிருந்த பூவரசு மரத்து கிளையில் சின்ன வயது குருவிகள் இரண்டு மூக்கோடு மூக்கு உரச.. ஏனோ அவளுக்குச் சிரிப்பு வருகிறது. தன்னையறியாமல் சிரிக்கிறாள்.

காலடியில் வந்து விழுகிறது கொய்யா காய் ஒன்று.

திடுக்கிட்டு நிமிர்ந்து பார்க்கிறாள்.

கொய்யா மரத்து கிளையில் இரண்டு அணில்கள் ஒன்றோடு ஒன்று தொட்டு, சிணுங்கி..



"கொய்யா கனியை கொய்து போட்டது நீங்கள் தானா..?"

குனிந்து காலடியில் விழுந்து கிடந்த கொய்யா காயைக் கையில் எடுத்தாள்.

அந்த கொய்யா காயிலோ அணில் கடித்ததற்கான எந்தவித அடையாளமும் இல்லை. 'அணில் கடித்து போடவில்லையென்றால் எங்கேயிருந்து வந்து விழுந்திருக்கும்?' அவள் தனக்குள் கேள்வி கேட்டுக் கொண்டிருக்கும் பொழுதே இன்னொரு காய் வந்து காலடியில் விழுந்து சருகுகளில் சத்தம் செய்தது. வியப்புடன் நிமிர்ந்து பார்த்தாள். வேலியோரத்துப் பூக்களுக்கு மத்தியில் சந்திரன் முகம் தெரிந்தது.

"என்ன மதுமிதா.. அணில் முதுகில் எதுக்கு மூணு கோடுன்னு ஆராய்ச்சி பண்றியா..?"

"உனக்கு யாரு சந்திரன்னு பேரு வைச்சதுன்னு யோசிச்சிக்கிட்டிருக்கேன்."

"இந்திரன்னு பேர் வைச்சிருக்கலாம்னு நினைக்கிறியா..?"

"ஏதாவது அகலிகை கண்ல சிக்கியிருக்கிறாளா..?"

— எதிர்க்கேள்வி கேட்டாள் மதுமிதா.

"ம்... அதைவிடு... என் கேள்விக்கு பதிலே சொல்லவில்லையே.."

"என்ன கேள்வி..?"

"நடிக்காதே மதுமிதா.. காலையில் கேட்டேனே.."

"காலையில் கேட்டால் மாலையில் பதில் சொல்ல வேண்டுமா என்ன.."

"தெரியாதுன்னா தெரியாதுன்னு சொல்லிட்டு போயேன்."

"உன் கேள்வி அப்புறம். முதல்ல என் கேள்விக்கு பதில் சொல்லு. எதுக்காக அந்த கேள்வியை என்கிட்ட கேட்டே.. நான் என்ன காதல் ஆராய்ச்சியா பண்றேன்..?"

"அதைவிடு. காதல் என்றால் என்ன..?"

-'சொன்னால்தான் நகர விடுவேன்' என்பது போல வார்த்தைகள் பிடிவாதம் பிடித்தன. அவள் முகத்தையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் சந்திரன்.

மதுமிதாவின் கண்களில் புன்னகை மினுக்கியது. உதடுகள் துடித்தன வார்த்தைகள் தேடி.

"காதல்... காதல்... அதைப் பற்றி எனக்கு எதுவும் தெரியல. பெர்னாட்ஷா சொன்னது மட்டும் நினைவில் நிற்கிறது. முட்டாள்தனம் சிறு பங்கு, புதியன அறியும் ஆர்வம் பெரும் பங்கு இவை அடங்கியது தான் முதல் காதல்."

"அட.. நீ என்ன சொல்றே?"

"காதலிச்சதும் சொல்றேனே சந்திரன்" - என்றாள் பொய்யான சலிப்புடன்.

வெளியே மோட்டார் சைக்கிளின் உறுமல் சத்தம் கேட்டது.

"அப்பா வந்து விட்டார்."

வேறு எதுவும் பேசாமல் வீட்டை நோக்கி நடந்தாள் மதுமிதா.

"மதுமிதா.. நீ எப்போ காதலிக்கப் போறே..?"



முதுகில் மோதிய அந்த கேள்வி அவளை அதிர்ச்சி அடையச் செய்திருக்க வேண்டும். சட்டென்று திரும்பி அவனைப் பார்த்தாள். பார்வையில் கோபம் இருந்தது. அடுத்த விநாடியே கோபம் கரைந்து உதடுகளில் புன்னகை மிதந்தது. மீண்டும் மௌனமாய் நடக்க ஆரம்பித்தாள்.

காலையில் கவனித்த அதே கண்கள் வியப்புடன் அந்த நிமிடமும் கவனித்துக் கொண்டிருந்தன.

மல்லாந்து படுத்திருந்தாள் மதுமிதா.

கண்கள் தலைக்கு மேல் சுழலும் ஃபேனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன. இதயமோ இழுத்து இழுத்து தோற்று போய்க் கொண்டிருந்தது. நினைவு சேற்றுக்குள் சிக்கியிருந்த தங்க வால் குதிரையை வெளியே இழுத்துக் கொண்டு வர இயலவில்லை. குதிரை திணறியது. கால் உதைத்து திமிறியது. 'சந்திரன் தான் எனக்கே தெரியாமல் புத்தகத்தில் தங்க வால் குதிரை ஸ்டிக்கரை ஒட்டியிருப்பானோ, புத்தகத்துக்குள் மஞ்சள் கவரையும் அவன் தான் வைத்திருப்பானோ... அவன் என்னை காதலிக்கிறானோ.. நேரில் சொல்ல வேண்டியது தானே... என்னிடம் சொல்ல பயந்துதான் இப்படி யெல்லாம் செய்கிறானா... என் மீது ஏன் காதல்..?'

- காதருகே கொசு ஒன்று வந்து சத்தமிட்டுச் சென்றது.

புரண்டு படுத்தாள். இதயமும் ஒருமுறை புரண்டது.

'எதற்காக என்னிடம் வந்து காதல் என்றால் என்ன என்று கேட்டான். செய்ததை எல்லாம் செய்து விட்டு என்னை வேவு பார்த்தானா.. அவன் முகத்தைப் பார்த்தால்

அப்படித் தெரியவில்லையே... அந்த முகத்தில் கள்ளத்தனம் இல்லையே...'

தண்ணீர் குடிக்க வேண்டும் போலிருந்தது.

படுக்கையிலிருந்து எழுந்திருக்க மனம் வரவில்லை. 'யாரோ என்னை காதலிக்கிறார்கள்... குதிரை என்ன காதல் சின்னமா... அதுவும் தங்க வால் குதிரை... முகம் தெரியாத அந்த குதிரைக்கு கவிதையும் தெரியுமா... மதுமிதா... மதுமிதா... ஓராயிரம்... ஓராயிரம் கவிதைக்கு உரிய அழகா ஒரே ஒரு வார்த்தைக்கு... ஒரே ஒரு வார்த்தைக்கு தங்க வால் குதிரை... தங்க வால் குதிரை...'

"என்ன மதுமிதா... லைட்டை போட்டுக்கிட்டே தூங்கிறியா...?"

அம்மாவின் குரலில் கலைந்தாள்.

வாசலில் நிழல் ஓவியமாய் அம்மா நின்று கொண்டிருந்தாள்.

"படிச்சிக்கிட்டிருந்தேன். அப்படியே தூங்கிட்டேன்"

- அவசரமாய் பொய் சொன்னாள் மதுமிதா.

"ம்... தூங்கு."

விளக்கை அணைத்து விட்டு அம்மா போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'அம்மா... என் அம்மா... தொப்புள் கொடி உறவே... இன்று எனக்குள் ஒரு பரிதவிப்பு இருக்கிறது... உன்னிடம் ஏனோ என்னால் சொல்ல முடியவில்லை... என் இதயத்துக்கு காதல் தேவைப்படுகிறதா... குதிரையே ஓடிப்போ... ம்... ஓடிப்போ'



மனதுக்குள் விரட்டினாள் ஓடி ஓடி.

குதிரையோ செக்கு மாடு போல் அவளைச் சுற்றி சுற்றியே வந்தது.

அப்படியே தூங்கிப் போனாள் உதட்டோர புன்னகையுடன்.

சற்று தாமதமாகவே எழுந்திருந்தாள் மதுமிதா.

கனவு தந்த களைப்பு முகத்தில் மிச்சமிருந்தது.

வேக வேகமாய் பாத்ரூமை நோக்கி ஓடினாள். ஐந்தே நிமிடத்தில் ஐந்து பக்கெட் தண்ணீரை காலி செய்து விட்டு வெளியே வந்தாள் ஈர ரோஜாவாய்.

பக்கத்துத் தோட்டத்துக்கு கண்கள் ஒருமுறை பயணம் செய்து விட்டுத் திரும்பின. 701722

சந்திரனையும் காணவில்லை. அவன் சைக்கிளையும் காணவில்லை.

894.8113 MAD

மார்புக்கு குறுக்கே கட்டிய டர்க்கி டவலுடன் சோப் விளம்பர மாடல் அழகி போல வீட்டை நோக்கி நடந்தாள். கூந்தலிலிருந்து தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது.

நேற்றைய நினைவுகள் இன்னும் நெஞ்சில் மீதமிருந்தன.

அவசரமாய் தன் அறைக்குள் நுழைந்து —

ட்ரெஸிங் டேபிள் முன்னால் போய் நின்றாள் மதுமிதா.

அங்கே புதிதாய் இன்னொரு காதல் அதிர்ச்சி காத்திருந்தது.

CPL 701722
ARA PUBLIC LIBRA
13 NOV 2010




காதல்
வேர்களைத் தேடுகிற
விதைகளின்
வெற்றி விழா ஒத்திகை!

காதல்-
பூமி முழுவதும் படர்ந்தும்
புல்லைக் கூட ஈரமாக்கி விடாத
ஒளிக்கடலின் ஒத்தடம்!

காதல்-
தொலைவில் போய்
அருகில் பிடிபட்டு விடுகிற
அறிவியல் அவஸ்தை!

*- வலம்புரி ஜான்*

அதிர்ச்சியில் உதடுகள் பிரிந்து முத்துப் பற்கள் கண்ணாடியில் தெரிந்தன. ட்ரெஸிங் டேபிள் கண்ணாடி



யில் மதுமிதா மட்டும் தெரியவில்லை. செவ்வக வடிவில் ஒட்டப்பட்டிருந்த துண்டு காகிதமும் தெரிந்தது. அந்த வெள்ளைக் காகிதத்தில் வரி வரியாய் நீல எழுத்துக்கள். அடியில் தங்க வால் குதிரை ஓவியமாய். பல வர்ணங்களில் அந்த ஓவியம் தீட்டப்பட்டிருந்தது அழகாய். வால் மட்டும் தங்க நிறத்தில்.

அவசரமாய் ஓடிப் போய் தன் அறைக் கதவை மூடினாள்.

மீண்டும் ஓடி ட்ரெஸிங் டேபிள் கண்ணாடி அருகே சென்றாள் படபடக்கும் இதயத்துடன். கண்ணாடியில் ஒட்டப்பட்டிருந்த துண்டுக் காகிதமும் படபடத்துக் கொண்டிருந்தது ஃபேன் காற்றில். காகித அசைப்பில் ஓவியக் குதிரை ஓடுவது போலிருந்தது.

குதிரையின் ஓட்டத்தை விரல்களால் நிறுத்தினாள்.

வரி வரியாய் நீல எழுத்துக்கள் மனதுக்குள் ஓடியது.

'வேறு வழியில்லை உன்னை நான் காதலித்து தான் ஆக வேண்டும். நீ மட்டுமே என் கண்களுக்கு அழகாக தெரிவதால்'

- ஓவிய குதிரை மேலுதடு உயர்த்திச் சிரிப்பது போலிருந்தது அவளுக்கு. மெல்ல குதிரையின் முதுகில் கிள்ளினாள் வலித்து விடாதபடி. உதடுகளைப் புன்னகை அசைத்தது.

'வேறு வழியில்லை.. உன்னை நான் காதலித்து தான் ஆக வேண்டும்.. நீ மட்டுமே என் கண்களுக்கு அழகாக தெரிவதால்..'

- மீண்டும் ஒரு முறை வார்த்தைகள் இதயத்துக்குள் அடுக்கினாள்.

'நான்... நான் அத்தனை அழகாகவா இருக்கிறேன்'

- கண்ணாடிக்குள் தெரிந்த மதுமிதாவை வியப்புடன் பார்த்தாள் மதுமிதா.

ஈரம் சுமந்த டர்க்கி டவல் அவசரமாய் நழுவித் தரையில் விழுந்தது.

'அழகு தான்... அழகு தான்'

- வெட்கத்துடன் முனகியது உள்ளதை உள்ளதாய் காட்டும் அந்த கண்ணாடி.

மின்னல் வேகத்தில் குனிந்து டவலை எடுத்து மேனியில் சுற்றிக் கொண்டாள்.

கண்ணாடியில் ஒட்டியிருந்த காகிதமோ காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது.

'அம்மா பார்ப்பதற்குள் கிழித்து எடுத்து விட வேண்டும்'

- காகிதத்தைத் தொட்ட விரல்கள் அப்படியே அசைவற்று நின்றன.

'கிழிக்கிற வேகத்தில் காகித குதிரை சிதைந்து விடக் கூடாது.'

'கவிதை வரிகள் உடைந்து போய் விடக் கூடாது.'

டவலில் ஈரம் எடுத்து காகித ஓரங்களை நனைத்தாள். சில நிமிடங்களுக்கு முன்னால் தான் அந்த காகிதம் ஒட்டப்பட்டிருக்க வேண்டும். சண்டித்தனம் செய்யாமல் கண்ணாடியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய் பிரிந்தது. ஓவியக் குதிரைக்கு வலிக்காமல் பிரித்தெடுத்தாள். காகிதம் கண்ணாடியில் ஒட்டப்பட்டிருந்ததற்கு அடையாளமாய் வெண்மையாய் காகித பிசிறுகள் மிச்சமிருந்தன. அதை துடைத்தெடுக்க டவலை உயர்த்தினாள்.



"ஏய்... மதுமிதா"

- அம்மாவின் குரல் அதட்டியது

தொடர்ந்து கதவு தட்டப்பட்டது அவசரம் உணர்த்துவது போல்.

'ஐயோ... அம்மா... என்ன செய்வது...'

கையிலிருந்த ஓவியக் குதிரை சிரித்தது. முகத்தில் ஓங்கிக் குத்தலாம் போலிருந்தது.

'எங்கே... எங்கே மறைத்து வைப்பது...'

சட்டென்று தலையணைக்கடியில் காகிதத்தை வைத்தாள் கசங்கி விடாதபடி.

மீண்டும் கதவு தட்டப்பட்டது.

'உள்ள என்னடி செய்றே கதவை பூட்டிக்கிட்டு...?'

ஓடிப்போய் கதவைத் திறந்தாள்.

வாசலில் அம்மா நின்று கொண்டிருந்தாள். கண்களில் கோபம் மிதந்தது.

"கதவை பூட்டிக்கிட்டு உள்ள டான்சா ஆட்றே... குளிச்சிட்டு வந்து மூணு மணி நேரம் ஆகுது... ஈரத்துண்டை கட்டிக்கிட்டு என்ன செய்றே..."

— அம்மாவின் கண்கள் படுக்கைக்கு தாவின.

கால்கள் கட்டிலை நோக்கி நகரத் தொடங்கின.

மதுமிதாவுக்கு 'பகீர்' என்றது.

அம்மாவின் கண்கள் ஏதோ தேடும் பாவனையில் அலைந்தன.

மின்னலாய் ஓடிப்போய் தலையணை மேல் ஏறி அமர்ந்து கொண்டாள் மதுமிதா. கண்களில் திருட்டுத்

தனம் வந்திருந்தது. முகம் அவசரமாய் வியர்த்திருந்தது. அம்மா அவளை வியப்புடன் பார்த்தாள். உதட்டோரம் புன்னகை.

"மதுமிதா... இன்னைக்கி நீ சரியில்லை. முழியில கள்ளத்தனம். அம்மாவுக்கு தெரியாம ஏதோ தப்பு பண்றே- கண்டுபிடிக்கிறேன்."

"பெரிய இரும்புக் கை மாயாவி. இப்ப நீ என்ன தேட்றே..?"

"போஸ்டர்ல போட்றதுக்கு தலைவர் போட்டோ ஒண்ணு வேணுமாம். அது நம்ம வீடு திறப்பு விழா போட்டோ ஆல்பத்தில் இருக்குதாம்- உடனே வேணும்னு அந்த மனுஷன், அதான் உங்க அப்பா குதிக்கிறாரு- அந்த ஆல்பத்தை நீதான் வெள்ளிக் கிழமை வைச்சிருந்தே- எங்கே அந்த ஆல்பம்..?"

"இதுக்குத்தானா இந்த ஆர்ப்பாட்டம்- மேஜையில பாருங்க."

அம்மா மேஜையை நோக்கி நகர்ந்தாள்.

மதுமிதாவோ தலையணையை விட்டு இறங்காமல் இருந்தாள்.

"ஏய் எருமை மாடு- முதல்ல தலையணையை விட்டு கீழே இறங்கு- கடன் வந்து வீட்டை அமுக்கப் போகுது- மேஜையா இது குப்பைக் கூடையா-"

-போட்டோ ஆல்பத்தைத் தேடி எடுத்திருந்தாள் அம்மா.

"சந்தான லட்சுமி."

— அப்பாவின் குரல் படுக்கையறை வரை வந்து மிரட்டியது.



"இதோ வந்திட்டேன்"

— பதில் குரல் கொடுத்தாள் அம்மா.

போகிற போக்கில் மதுமிதாவின் பக்கம் திரும்பினாள்.

"இன்னும் குரங்கு மாதிரி தலையணை மேல தான் உட்கார்ந்து இருக்கியா- ஈரத் துண்டை அவிழ்த்து தூர போடு- ரத்தத்தை உறிஞ்சப் போகுது."

இரண்டு தோள்களையும் உற்சாகமாய் குலுக்கியவள், மின்னலாய் உடம்போடு ஒட்டிக் கிடந்த டர்க்கி டவலை உருவினாள்.

"இரண்டு வயசு குழந்தைன்னு நினைப்பு"

- அம்மா தலையில் அடித்தபடி கதவை சார்த்தி விட்டுச் சென்றாள்.

சந்தோஷமாய் குதித்து இறங்கினாள்.

'ஏன் இந்த சந்தோஷம்'

— உள் மனம் கேள்வி கேட்டது.

"தெரியலியே"

— என்றாள் உதடுகள் அசைய.

தலையணையைத் தூக்கிச் சுவரில் வீசினாள்.

அந்தக் காகிதத்தை எடுத்தாள், பத்து நாள் குழந்தையைத் தூக்குவது போல.

இன்னும் ஒரு முறை மனதுக்குள் படித்தாள் அந்த காதல் வரிகளை.

நீல எழுத்துக்கள் நீலப் பறவைகளாய் மாறி மனதுக்குள் சிறகடித்தன. ஆறு வயது குழந்தையாய் மாறிப் போயிருந்தாள் மதுமிதா.

அந்த காகித வரிகளில் விரல்களை ஓட விட்டாள்.

ஓவியக் குதிரையின் முதுகை தடவிக் கொடுத்தாள்.

வாலைப் பிடித்து இழுத்தாள் — கற்பனையில்.

‘உனக்கு வலித்ததா கண்ணே.. மூச்சு விட கஷ்டமாக இருந்ததா என் குட்டிக்கு.. இலவம் பஞ்சு தலையணை கனத்து கிடந்ததா என் செல்லக் குட்டிக்கு.. நான் தான் உனக்கு கனத்து கிடந்தேனா...இந்த நாப்பத்தெட்டு கிலோவை சுமக்க பிறந்தவன் நீதானே... ம்... சிணுங்க கூடாது நீ...நாங்கள் கொலுசை வேண்டுமென்றால் தங்கத்தில் போட்டுக் கொள்ளலாம்... உனக்கு வாலே தங்கமாயிற்றே... எங்களுக்கு தலைமுடி உதிர்ந்தாலும் குப்பை தான். உனக்கு வால் முடி உதிர்ந்தாலும்..’

“மதுமிதா..”

— அம்மாவின் அழைப்பில் எரிச்சல் இருந்தது.

அவசர அவசரமாய் பாட புத்தகமொன்றில் குட்டி போடும் மயிலிறகாய் ஓவிய குதிரை சுமந்த காகிதத்தை பத்திரப்படுத்தி விட்டு ஆடை மாற்றினாள்.

அடுத்த இருபதாவது நிமிடம் பஸ் ஸ்டாப்பில் நின்று கொண்டிருந்தாள் மதுமிதா. அன்று திசையன் விளை சந்தை நாள் என்பதால் கூட்டம் அதிகமிருந்தது. வெள்ளைச் சட்டை, கறுப்பு பேண்ட் அணிந்து சந்திரனும் பஸ்ஸுக்காக காத்திருந்தான். அவன் கண்கள் அவளையே தொட்டு தொட்டு திரும்பிக் கொண்டிருந்தன கடல் அலை போல. அவளும் அதை கவனிக்கத்தான் செய்தாள். கண்டு கொண்டதாக காட்டிக் கொள்ளவில்லை. பஸ் வர தாமதமாகும் போல் தெரிந்தது. டிரக்டர்கள் நடமாட்டம் அதிகமிருந்து. சந்திரன் அவளை நோக்கி நடந்து வந்தான்.

5



நடையில் தயக்கம் அதிகமிருந்தது. மதுமிதாவுக்கு அவனுடைய நடை வியப்பைத் தந்தது.

அன்று முதன் முதலாய் புதியதொரு சந்திரனை பார்ப்பது போலிருந்தது.

மெல்ல நெருங்கி அருகில் வந்தான்.

அவள் கண்களை ஏறிட்டுப் பார்த்தான். அதில் ஒரு நடுக்கம் தெரிந்தது.

‘என்ன..’ என்பது போல் புருவம் உயர்த்தி பார்த்தாள்.

“மது.. மதுமிதா”

“என்ன சந்திரன்..?”

“உன்கிட்ட பேசணும்”

— குரலில் எந்தவிதத் துள்ளலும் இல்லை.

“காலேஜுக்கு போய் பேசலாமே.”

மௌனமாய் தலையசைத்தவன் சற்று தள்ளி போய் நின்று கொண்டான் அமைதியாய். அவனுடைய செயல் விசித்திரமாய் மனதுக்குப் பட்டது.

‘சந்திரனுக்கு என்னவாயிற்று?’

பஸ் வேகமாய் வந்து நின்றது கூட்டம் அதிகமில்லாமல்.

கூட்டம் மொத்தமும் ஓடிப் போய் ஏறிக் கொண்டது. மதுமிதாவும் ஏறிக் கொண்டாள். முகத்தில் பதட்டத்துடன் வியர்வையை துடைத்தபடி சந்திரன் ஏறுவதை கவனித்தாள். உட்கார இடம் கிடைத்தது. இருக்கிற இடத்திலிருந்து சந்திரன் முகம் தெரிந்தது.

‘என்னிடம் எது குறித்து பேச வந்திருப்பான்.. என்னை காதலிக்கிறேன் என்று சொல்ல வந்திருப்பானோ..

அவன் தான் தங்க வால் குதிரையா... என்னால்... என்னால் அவனைக் காதலிக்க முடியாதே... என் இதயத்தில் அவனுக்கு அந்த இடம் இல்லையே... அவன் ஒரு நாளும் தங்க வால் குதிரையாய் இருக்க முடியாது... வேறு ஏதாவது இருக்கும்...'

பஸ் அவசரமாய் ப்ரேக்கிட்டு நின்றது.

இரண்டு 'காதல்' எருமை மாடுகள் சாவகாசமாய் சாலையைக் கடந்து கொண்டிருந்தன. பஸ் மீண்டும் புகையைக் கக்கி சிரமத்துடன் பயணிக்க ஆரம்பித்தது.

'நிர்மலாவிடம் சொல்ல வேண்டும்... எல்லாம் சொல்ல வேண்டும்... இன்று முதல் பீரியட் ஆங்கிலம்... கவலையில்லாமல் பேசிக் கொண்டிருக்கலாம்'

-மெல்ல புத்தகத்தை திறந்து ஓவியக் குதிரையை ஒரு முறை பார்த்துக் கொண்டாள்.

'என் வீட்டுக்குள் எப்படி வந்தது... ஏன் இதுவரை நான் யோசிக்கவே இல்லை... அதுவும் என் படுக்கை யறைக்குள்... அத்தனை தைரியமாய் வீட்டுக்குள் நுழைந்து, என் படுக்கையறையை கண்டுபிடித்து, ட்ரெஸிங் டேபிள் கண்ணாடியில் ஒட்டி விட்டு போனது யார்... என் மீது கொண்ட காதல் தந்த தைரியமா... சந்திரன் தான் இதை செய்திருப்பானோ... சந்திரனை என் இதயத்தால் காதலிக்க முடியாது... தங்க வால் குதிரை வேறு யாராகயிருந்தாலும் காதலிப்பேனோ... நான் காதலிக்க ஆரம்பித்து விட்டேனா...இதன் பேர்தான் காதலா... முகம் பார்க்காமலே காதலா...'

- பஸ் மீண்டும் ப்ரேக்கிட்டு நின்றது. கல்லூரியை அடைந்திருந்தது பயணம். முதல் ஆளாய் குதித்து இறங்கினாள் மதுமிதா.



யூகலிப்டஸ் மர நிழலில் காத்து நின்றாள் நிர்மலா கறுப்பு ரோஜாவாய்.

மதுமிதாவை கண்டதும் ஓடி வந்து கட்டிப் பிடித்துக் கொண்டாள் நெடுநாள் பிரிவுபோல.

இருவரும் வெயிட்டிங் ஹாலை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள்.

பின்னால் யாரோ வேகமாய் நடந்து வரும் காலடி யோசை கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தனர்.

சந்திரன் தான் வேகமாய் நடந்து வந்து கொண்டிருந்தான்.

"ஹாய் மூன், என்ன வேணும்...?"

— நிர்மலாவிடம் இருந்து வந்தது கேள்வி.

"மதுமிதா கிட்ட பேசணும்."

"பேசேன்"

— என்றாள் மதுமிதா சிந்தனையுடன்.

"தனியா பேசணும்."

— என்றான் சந்திரன் இயல்பில்லாத குரலில்.

அதே நேரம்

மதுமிதாவைத் தேடி கல்லூரிக்கு வந்து கொண் டிருந்தது தங்கவால் குதிரை!




இளமைக்கு உரிய
ஒரு பெரிய வரப்பிரசாதமே
காதல் தான்!

*- இளையராஜா*

சந்திரன் பதில் விசித்திரமாயிருந்தது மதுமிதாவுக்கு. கண்களை நேருக்கு நேர் பார்த்தாள். அவனோ சட்டென்று பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான் அவசரமாய்.

"என்ன மூன்... தனியா எதைப் பற்றி பேசணும்...?"

— நிர்மலா உதடுகளில் கேலியாய் புன்னகை.

"ம்... சும்மாயிரு. பேசலாம் சந்திரன். தமிழ் வகுப்பு முடிந்ததும் பேசலாம்"

- மதுமிதாவின் பதிலில் மௌனமாய் பின் வாங்கினான் சந்திரன்.



இருவரும் சிந்தனையுடன் வெயிட்டிங் ஹாலை நோக்கி நடந்தனர் ஆமையாய். எதிரில் நான்கைந்து இளைஞர்களுடன் சிரித்து பேசியபடி வந்து கொண்டிருந்தான் மதன். இரண்டே வார்த்தைகளில் அவனை குறித்து சொல்ல வேண்டுமென்றால் 'கல்லூரி ரவுடி'. சுரிதார்களும், தாவணிகளும் அவனை கண்டாலே பயந்து ஓடும். சுற்றி சுற்றி வருவார்கள் இளைஞர்கள் அவன் வீசி எறியும் ரொட்டித் துண்டுகளுக்காய். கல்லூரி லெக்சரர்கள் கூட அவனிடம் சற்று ஒதுங்கியே நிற்பார்கள். மொத்தத்தில் மதன் ஒரு முரட்டுக் குதிரை. மதுமிதாவை நெருங்கியிருந்தான் மதன். உதட்டோரம் விஷம் தடவிய புன்னகை.

"என்ன... மது... மிதா. சந்திரன் கிரகணத்தை எப்போ வைச்சுக்கலாம்னு ரகசியமா கேட்டுட்டு போறானா... பக்கத்து வீட்டு ரோமியோவாச்சே..."

- மதுமிதாவின் முகத்துக்கு எதிரே கண்களைச் சுருக்கி, கிசுகிசுப்பாய் கேட்டான்.

"பேச்சு வார்த்தை முடிந்ததும் உனக்கும் அவசியம் சொல்லி அனுப்புறோம்"

- என்றாள் நிர்மலா படபடப்பாய். முகத்தில் கோபம் வெடித்தது.

"பௌர்ணமிகிட்ட கேள்வி கேட்டா அமாவாசை பதில் சொல்லுது... ம்... செடியின் போதை, புகையில போதை, மாத்திரையில போதை, ஊசியில போதை, பாட்டில்ல போதை, ஆனா பேர்ல போதையை வைச்சிருக்கிறது நீ ஒருத்திதாம்மா, மது மிதா."

- மதுமிதாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வேக நடை நடந்தாள் நிர்மலா.

"ஹே நிம்மி குட்டி- ஒரு ஓ போடு"

- ஓ வென சத்தமிட்டு நடனமாடினர் மதனும் அவன் நண்பர்களும்.

மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் திரும்பிப் பார்த்தனர், வியப்புடன். பிசிக்கல் டைரக்டர் கையசைக்க மீண்டும் பயிற்சியை தொடர்ந்தனர்.

"நிர்மலா... பத்து மணி வெயில்ல என்ன விளையாட்டு"

"அடுத்த வாரம் யூனிவர்சிட்டி தடகள போட்டி அதுக்கான பயிற்சி" திரும்பி பார்த்தாள் மதுமிதா. தாண்டி தாண்டி ஓடிக்கொண்டிருந்தனர் விளையாட்டு வீரர்கள். 'நானும் தங்க வால் குதிரையை சந்திப்பேன்... அது நிச்சயம்... சந்திரன் ஏதோ பேச வேண்டும் என்றானே.. அதுவும் தனிமையில்.. என்னவாக இருக்கும்?'

இருவரும் வெயிட்டிங் ஹாலை அடைந்திருந்தார்கள். மாணவிகள் வந்து ஒட்டிக் கொண்டனர். அந்த இடம் இருபது நிமிடம் கலகலத்தது நடிகையின் காதல்.... மாத்ருபூதத்தின் காமம் என்று. வகுப்புகள் தொடங்குவதற்கான கல்லூரி மணியடித்தது.

அடுத்த விநாடியே அந்த இடம் பரபரப்பானது.

கல் வீசப்பட்ட நிழல் மரத்து சிட்டுக் குருவிகளாய் சிறகசைத்தனர் புத்தக சுமையுடன். வானவில் வர்ணமாய் மாணவிகள் நகர்ந்தனர் தங்கள் வகுப்பறைகளை நோக்கி மதுமிதாவும் நிர்மலாவும் 'சி' பிளாக் நோக்கி. நடந்து கொண்டிருந்தனர். தன் கையிலிருந்த பயோ கெமிஸ்ட்ரி புத்தகத்தை நிர்மலா கையில் கொடுத்தாள் மதுமிதா.



"ம்.. புரட்டி முதல் பக்கத்தை பார்."

— 'ஏன்' என்று கேள்வி கேட்டது நிர்மலாவின் கண்கள். விரல்களோ புத்தகத்தின் அட்டையைப் புரட்டி போட்டன. முதல் பக்கத்தில் 'பளிச்'சென்று தெரிந்தது ஸ்டிக்கர்.

"அட... குதிரை, வால் மட்டும் தங்க நிறத்தில் மினுங்குதே... அழகான ஸ்டிக்கர். மது, உனக்கு யார் தந்தது.. எனக்கு ஒண்ணு வாங்கிக் குடேன்"

-நிர்மலாவின் குரலில் உற்சாகம் வழிந்தது. குதிரையை தடவிப் பார்த்தாள். வகுப்பறையை குறி வைத்து தமிழ் பேராசிரியர் நடந்து வந்து கொண்டிருந்தார். மாணவர்களும் மாணவிகளும் விருப்பமில்லாதவர்கள் போல வகுப்பறைக்குள் நுழைந்தனர். இருவரும் உள்ளே நுழைந்து அருகருகே அமர்ந்து கொண்டனர்.

"என் கேள்விக்கு பதிலே சொல்லவில்லை. யார் தந்தது குதிரை ஸ்டிக்கர்?"

முகத்தில் சோர்வை சுமந்து கொண்டு உள்ளே நுழைந்தார் தமிழ் பேராசிரியர்.

"எல்லாருக்கும் வணக்கம். இன்னிக்கி கண்ணகியை பார்க்கப் போறோம்"

"கண்ணகியை பார்க்கணும்னா மியூசியத்துக்கு அல்லவா போகணும்?"

"வேண்டாம் அரசியல். நாம் காப்பிய கண்ணகியை பார்க்கப் போறோம்."

"யார் தந்தது அந்த குதிரை ஸ்டிக்கர்..?"

- இடையில் புகுந்து கேள்வி கேட்டாள் நிர்மலா. அவளுக்குப் பதில் எதுவும் சொல்லாமல் மஞ்சள் நிற

'குட்டி' கவரை அவள் முன்னால் வைத்தாள் மௌன மாய்.

"என்ன இது..?"

— என்று கேட்டாள் வியப்புடன்.

"கவருக்குள் என்ன இருக்கிறது என்று பார்."

மஞ்சள் கவருக்குள் இருந்து வெள்ளைக் காகி தத்தை உருவி வெளியே எடுத்தாள். அந்த காகிதம் பளபளத்தது. நீல எழுத்துக்கள் மினுமினுத்தன. மனதுக் குள் படித்தாள் ஒருமுறை.

மீண்டும் படித்தாள் உதடசைய.

"மதுமிதா.. அட.. ஓராயிரம் கவிதைக்கு உரிய அழகா ஒரே ஒரு வார்த்தைக்கு..? -தங்கவால் குதிரை"

நிமிர்ந்து மதுமிதாவின் முகம் பார்த்தாள்.

'என்ன இதெல்லாம்?'-கேள்வி கேட்டன கண்கள்.

தமிழ் பேராசிரியர் கண்ணகி காலத்து நினைவுகளில் மூழ்கிப் போய் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

"வழக்கில் வெற்றி பெற்று வாழ்க்கையில் தோற்றுப் போன ஒரு பெண்ணின் கதை. கண்ணகி கண்ணீரின் அடையாளச் சின்னம். மென்மையான நல்ல பண்புகள் நிறைந்த பெண் ஒருத்தி வலிய ஆண்மகனின் குறைகளால் அவலப்படுவதே கண்ணகியின் கதை..."

இன்னொரு காகிதத்தை எடுத்து நிர்மலா முன் வைத்தாள் மதுமிதா.

அந்த ஒவியக் குதிரை அவளை மிரட்டியிருக்க வேண்டும். முகம் நிறம் மாறியது. மனதுக்குள் நீல எழுத்துக்கள் சிவப்பு எழுத்துக்களாய் மாறி அச்சுறுத்



தின. 'வேறு வழியில்லை. உன்னை நான் காதலித்துத் தான் ஆக வேண்டும். நீ மட்டுமே என் கண்களுக்கு அழகாக தெரிவதால்'

- நிர்மலாவின் கண்கள் ஒவியக் குதிரையின் வாலில் வந்து நின்றன.

"யாரடி.. இந்த தங்கவால் குதிரை..?"

"தெரியலியே.."

- என்றாள் மதுமிதா கண்களில் கவலை மிதக்க.

"... கண்ணகியின் கணவன் இறந்து விட்டான். அத்தோடு அவள் கண்ணீர் நின்று விடுகிறதா... தொடர்கிறது. கள்வனின் காதல் மனைவி என்று விரல் நீட்டுகிறது நாடு. அதுவும் நாடு விட்டு நாடு. கண்ணகியோ ஒற்றைப் பனை மரம். இதைவிட அவலம் ஏது..?"

மொத்த வகுப்பறையும் காதில் தமிழ் வாங்கிக் கிறங்கிக் கிடக்கிறது மௌனமாய்.

"உன் அறைக்குள் நுழைந்து யார் ஒட்டியிருப் பார்கள்..?"

"தெரியலியே.."

- என்றாள் மீண்டும். ஒவியக் குதிரையை விரல்கள் தடவிக் கொண்டிருந்தன.

"... கடைசியில் கோவலன் கள்வனாய் கொல்லப் பட்டதை சொல்லியே விடுகிறாள்... துடிக்கிறாள்... துவள்கிறாள்.. அரற்றுகிறாள்.. அழுகிறாள்.."

பேராசிரியரின் பேச்சைப் பாதியில் இழுத்து நிறுத்தியது இன்னொரு ஆண் குரல்.

அத்தனை கண்களும் வாசலை நோக்கி திரும்பி யிருந்தன சூரியகாந்தி பூக்களாய். ஆறடி உயரத்தில் அழகாய் ஒரு இளைஞன் நின்று கொண்டிருந்தான். தமிழ் பேராசிரியர் அவன் அருகில்போய் ஏதோ பேசி னார். வகுப்பறை நோக்கித் திரும்பினார்.

"மதுமிதா.. இங்க வா"

- அழைத்தார் கையசைத்து. தயக்கத்துடன் போனாள்.

"உனக்கு கூரியர்ல பார்சல் வந்திருக்குது..."

அந்த இளைஞன் நீட்டிய காகிதத்தில் கையெழுத்து போட்டாள். கையிலிருந்த பையிலிருந்து சின்ன அட்டை பெட்டியொன்றை எடுத்து கொடுத்தான். அட்டைப் பெட்டி அரை அடி உயரத்தில் சதுரமாய் இருந்தது. பார்வைகள் அம்புகளாய் துளைத்தன. அட்டை பெட்டி யுடன் தன் இருக்கையில் போய் அமர்ந்து கொண்டாள்.

"என்னடி இது..?"

- ஆர்வமாய் வந்தது கேள்வி நிர்மலாவிடம் இருந்து.

"தெரியலியே"

— என்றாள் இதயப் படபடப்புடன்.

மீண்டும் பாடத்தை ஆரம்பித்திருந்தார் இளமாறன்.

"கண்ணகி எழுந்து நிற்கிறாள்..."

மதுமிதா எழுந்து நிற்கிறாள்.

"சார்.. தலைவலி..."

பேராசிரியர் கையசைக்க, அட்டைப் பெட்டியுடன் வகுப்பறையை விட்டு வெளியேறுகிறாள்.



"கண்ணகி எழுந்து நிற்கிறாள்"

நிர்மலா எழுந்து நிற்கிறாள்

"சார்.. எனக்கு..."

"தலைவலி தொடர்கிறது.."

- வகுப்பறை ஓவென்று உற்சாக குரல் எழுப்புகிறது.

அனுமதி கிடைத்ததும் அம்புபோல் பாய்ந்து வெளியே வருகிறாள் நிர்மலா. கவலையுடன் பார்த்துக் கொண்டிருந்தான் சந்திரன்.

"கண்ணகியிடமிருந்து கோபமாய் வந்தன வார்த்தைகள். மதுரை நகரில் பெண்களே இல்லையா.. நல்லவர்கள் யாரும் கிடையாதா... தெய்வம் இருக் கிறதா..."

- நிர்மலா வெளியே ஓடிவருவதற்குள், அட்டைப் பெட்டியுடன் பஸ் ஏறியிருந்தாள் மதுமிதா.

பஸ் எந்தவித சத்தமுமின்றி மௌன நிழல் படமாய் ஓடுவது போலிருந்தது. கையிலிருந்த அட்டைப் பெட்டியை பார்த்தாள். நீல வண்ணத்தில் காகிதம் ஒட்டப்பட்டிருந்தது. அட்டைப் பெட்டியின் குறுக்கே கட்டப் பட்டிருந்த வெள்ளை ரிப்பன், வெள்ளை காகிதம் ஒட்டி மதுமிதாவின் முகவரி எழுதப்பட்டிருந்தது குண்டு குண்டான கையெழுத்தில். 'அனுப்பியவர் முகவரி இருக்குமே..' பெட்டியை புரட்டிப் பார்த்தாள். மிகமிக சின்னதாய் அனுப்பியவர் முகவரி கிறுக்கலாய் எழுதப் பட்டிருந்தது. அந்த முகவரி மதுமிதாவின் முகத்தில் புன்னகையை வரவழைத்தது. வாய்விட்டு முகவரியை சொல்லிப் பார்த்தாள்.

"கோல்ட் டெய்ல் ஹார்ஸ், குதிரைக்காரன் தெரு, ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி."

கண்டக்டர் ஆடி அசைந்து அருகில் வந்திருந்தார்.

"என்னம்மா... போன வேகத்திலேயே திரும்பி வந்திட்டே"

"ஜலதோஷம்.. தலைவலி.. அதனால்தான்..."

டிக்கெட்டை கையில் கொடுத்து விட்டு நகர்ந்தார்.

'என்னை விரட்டுவது காதல் தோஷம்... நிர்மலாவிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டு வந்திருக்கலாம்... என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பாள். தமிழ் வகுப்பு முடிந்ததும் சந்திரனை சந்திப்பதாக சொல்லியிருந்தேனே.. எதுவும் சொல்லாமல்..'

பஸ் ப்ரேக்கிட்டு நான்கைந்து பேரை உதிர்த்து விட்டு மீண்டும் புறப்பட்டது.

'இந்த அட்டைப் பெட்டிக்குள் என்ன இருக்கும்?'

அட்டைப் பெட்டி கனமில்லாததாய் இருந்தது. குலுக்கிப் பார்த்தாள். எந்த வித அசைவும் இல்லை. விரல்களால் அழுத்தினாள். காகிதப் பெட்டி வளைந்து உள் வாங்கியது.

'வேண்டாம்.. அட்டைப் பெட்டியை வீட்டில் போய் திறந்து பார்க்கலாம்.'

"என்னம்மா தூங்கிட்டியா.. இறங்கு."

பஸ் ப்ரேக்கிட்டு நின்று கொண்டிருந்தது.

வெட்கத்தில் முகம் சிவக்க, அவசர அவசரமாய் இறங்கிக் கொண்டாள் கையில் பெட்டியுடன்.



வீட்டை நெருங்கியவள் அதிர்ந்தாள்.

வாசலில் அப்பா நின்று கொண்டிருந்தார் மடித்து கட்டிய வேட்டியுடன்.

எதிரில் மதுமிதாவைப் பார்த்ததும் முகத்தில் பதட்டம் வந்து அமர்ந்திருந்தது.

"என்னம்மா மதுக்குட்டி... இதுவரை ஒரு நாளும் காலேஜுக்கு போயிட்டு இடையில் திரும்பி வந்ததில்லை. உடம்புக்கு என்னம்மா செய்து.."

-கழுத்தில் கை வைத்து பார்த்தார் வாஞ்சையுடன்.

"ஒண்ணுமில்லப்பா.. லேசா தலைவலி"

"போ... போயி கொஞ்ச நேரம் படுத்து தூங்கு. எல்லாம் சரியா போயிடும்."

"சரிப்பா."

"என்னம்மா கையில அட்டைப் பெட்டி?"

"அதுவா... வந்துப்பா... எல்லாரும் ஆளுக்கொரு பெட்டி செய்யணும்."

"அட்டை பெட்டி செய்றது ஒரு படிப்பாம்மா.. போ.. போ..."

விட்டால் போதும் என்ற எண்ணத்துடன் வீட்டுக்குள் பாய்ந்தாள் பந்தயக் குதிரையாய். அங்கே அம்மாவை காணவில்லை. 'எங்கே போய் விட்டாள்?'

முதல் காரியமாய் அறைக்குள் நுழைந்து கதவைப் பூட்டினாள்.

புத்தகங்களை படுக்கையில் வீசினாள். அட்டைப் பெட்டியை கையில் எடுத்தாள். கட்டியிருந்த வெள்ளை ரிப்பனைக் கத்தரித்தாள்.

சுற்றியிருந்த நீலத் தாளை வேகமாய் கிழித்தெறிந்தாள்.

இதயம் வேகமாய் துடிக்க-அட்டைப் பெட்டியை திறந்தாள் நிதானமாய்.

அட்டைப் பெட்டி காகித துணுக்குகளால் நிரப்பப் பட்டிருந்தது.

அந்தக் காகிதக் குப்பையை அள்ளி வெளியே போட்டாள்.

உள்ளே குதிரை ஒன்று நின்று கொண்டிருந்தது.

அதன் வால் தங்க நிறத்தில் மினுக்கிற்று.




காதல்...
ஒரு தேவையான தொந்தரவு
திருட்டுத்தனத்தின் நல்வரவு
சுகமான சுமை
சிருங்கார சித்ரவதை

- நடிகர் விவேக்

**கா**கிதப் பெட்டிக்குள் மௌனமாய் நின்று கொண்டிருந்தது, காதல் சொல்ல வந்த குட்டி குதிரை. பளபளப்பாய் இருந்தது அந்தப் பொம்மைக் குதிரை. பால் வெண்மை நிறம். வால் மட்டும் தங்கமாய் மினுக்கிற்று. அழகாய்... அழகாய் இருந்தது. குதிரையை ஆசையாய் கையில் தூக்கி முத்தமிட்டாள் மதுமிதா.

"ஏய் தங்க வால்... உனக்கு இன்னும் பேர் வைக்கலியா...?"

அதன் முதுகைத் தடவிக் கொடுத்தாள் இதயக் காதலுடன்.

அந்தபொம்மைக் குதிரையை புரட்டிப் பார்த்தாள். வயிற்றுப் பகுதியில் அம்புக்குறி இடப்பட்டிருந்தது. அம்புக்குறியை விரலால் நகர்த்தினாள். திறந்து கொண்டது. உள்ளே இரண்டு குட்டி பேட்டரிகள் அமைதியாய் தூங்கிக் கொண்டிருந்தன.

"உன் உயிர் வயிற்றுக்குள் இருக்கிறதா... ஏழு கடல், ஏழு மலை தாண்ட வேண்டாமா..."

அவள் கண்கள் குதிரையை ஓட வைக்கும் விசையை தேடி ஏமாந்தன. தங்க வால் குதிரையை மொசைக் தரையில் நிறுத்தினாள். அதன் அருகில் முழங்கை ஊன்றி படுத்தாள்.

கண் இமைக்காமல் பார்த்தாள்.

"ஏய்... உனக்கு பேசத் தெரியாதா... நீ என்ன ஊமையா..?"

—கேள்வி கேட்டாள் மதுமிதா உதடு சுழித்து.

அந்த மக்கு குதிரையோ பதில் எதுவும் பேசாமல் நின்று கொண்டிருந்தது தரையைப் பார்த்தபடி.

குதிரைக் குட்டியின் தலையை தன் தலையால் மோதினாள் செல்ல கோபத்துடன். அந்த பொம்மைக் குதிரையோ சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. தங்க வால் குதிரையின் மூக்கோடு மூக்கு உரசினாள் குழந்தையின் குதூகலத்துடன்.

"ஏய்... நீ ரொம்ப அழகா இருக்கே..."



என்றாள் ஒரு கண்ணை மூடி திறந்து

"ஏண்டா ஒளிச்சி ஒளிச்சி விளையாட்றே- கண்ணாமூச்சி ஆட்டம் காட்னது போதாதா... நீ ஆம்பளைக் குட்டிதான்... என்கிட்ட நேரே வந்து முகத்துக்கு முகமாய் பார்த்து ஐ லவ் யூ சொல்ல வேண்டியதுதானே... புத்தகத்துக்குள்ள ஒளிச்சிகிட்டு வர்றே... அட்டைப் பெட்டிக்குள்ள ஒளிச்சிகிட்டு வர்றே.. உனக்கு தைரியமே கிடையாதா... உனக்கு எதுக்குடா இவ்வளவு நீளமாய் தங்கத்தில வால்..?"

செல்லமாய் கொஞ்சலாய் கொஞ்சி கொஞ்சி பேசியவள் அந்த பொம்மைக் குதிரையின் தங்க வாலை பிடித்து இழுத்தாள் பின்னோக்கி. அடுத்த வினாடி குதிரை ஓட ஆரம்பித்தது. அதன் ஓட்டம் மதுமிதாவை சந்தோஷத்தில் குதிக்கச் செய்தது.

"குட்டி... உனக்கு கொஞ்சம் மானம், ரோஷம் இருக்கத்தான் செய்யுது. கோபத்தில ஓட ஆரம்பிச்சிட்டியா... ம்... ஓடு... ஓடு..."

பொம்மைக் குதிரையின் பின்னால் தவழ்ந்தாள் சின்னக் குழந்தையாட்டம்.

"ஏய் மதுமிதா!"

அம்மாவின் குரலில் அதிர்ந்து அவசரமாய் திரும்பினாள்.

தோட்டத்து சன்னலில் அம்மா நின்று கொண்டிருந்தாள்.

"உனக்கு என்ன ஆச்சுது பொம்மைகிட்ட பேசிகிட்டிருக்கே..?"

"போங்கம்மா.."

— என்றாள் வெட்கத்தில் முகம் சிவந்து.

"எங்க போறது.. முதல்ல கதவை திற.."

மதுமிதா தரையிலிருந்து எழுந்து போய் கதவைத் திறந்தாள்.

உள்ளே நுழைந்த அம்மாவின் கண்கள் ஓடிக் கொண்டிருந்த குதிரையின் மீதே இருந்தன. பொம்மைக் குதிரை தடக் தடக்கென்று ஒரே இடத்தில் வட்டமடித்துக் கொண்டிருந்தது.

"பொம்மை வாங்கிற வயசா உனக்கு.. எங்கேயிருந்து பிடிச்சே இந்த கழுதையை..?"

"கழுதை இல்லம்மா குதிரை."

"குதிரைதான். பதில் சொல்லு கழுதை."

"கழுதை பிடித்து வந்த குதிரை. இந்த தலைப்பில ஒரு சினிமா எடுக்கலாம். யம்மா... நீயும் அப்பாவும் தயாரிக்கிறீங்களா.."

மதுமிதாவின் காது அம்மாவின் கைக்குப் போயிருந்தது.

"ஏதுடி இந்த பொம்மை?"

"மெட்ராசிலயிருந்து ரோசி அனுப்பி வைச்சிருக்கா."

"என்ன பிள்ளைங்களோ!"

- குனிந்து குதிரையை கையில் எடுத்தாள் அம்மா. அழும் குழந்தைகள் கையை, காலை அசைப்பது போல நான்கு கால்களையும் அசைத்தது வேக வேகமாய். மதுமிதா பொம்மையின் வாலை உடம்போடு அழுத்த, அந்த விநாடியே அசைவற்று போனது. பொம்மையை மதுமிதா கையில் வைத்து விட்டு வாசலை நோக்கி நடந்தவள் ஏதோ நினைத்துக் கொண்டவள் போல சட்டென்று நின்றாள். திரும்பிப் பார்த்தாள். கண்களில் சந்தேகம்.



காலேஜுக்கு போயிட்டு இடையில ஏன் வந்தே..?"

"தலைவலிம்மா."

"ஒரு வாய் காபி குடிச்சா எல்லாம் சரியா போயிடும்"

- தனக்குத்தானே பேசிக் கொண்டு சமையலறையை நோக்கி நடந்தாள் அம்மா.

தங்க வால் குதிரைக்கு முத்தம் ஒன்று தந்தாள், மதுமிதா.

அட்டைப் பெட்டிக்குள் அடைத்து, அலமாரியில் வைத்துப் பூட்டினாள்.

"என் ரகசிய காதலனே... ராத்தியில் சந்திப் போம்."

- என்றாள் முணுமுணுப்பாய். அதில் காதல் இருந்தது.

"என்னடி சுவரை பார்த்து பேசிக்கிட்டிருக்கே... தோட்டத்திலே குருவியைப் பார்த்து பேசுறே... கொஞ்சம் முன்னால பொம்மைகிட்ட... இப்ப என்னடான்னா..ம்.."

- காபியுடன் அம்மா வந்தாள். உதட்டோரம் புன்னகை ஒட்டிக் கொண்டிருந்தது. மதுமிதா ஓடிப் போய் படுக்கையில் விழுந்தாள் வெட்கத்துடன்.

"உன்னை பார்த்தா தலை வலி வந்த மாதிரி தெரியலியே.."

"காபியை வைச்சிட்டு போம்மா"

- என்றாள் மதுமிதா படுக்கையில் முகத்தை மறைத்தபடி.

குப்புற படுத்திருந்தவளின் முதுகில் பாசமாய் ஒரு அடி அடித்து விட்டு வெளியேறினாள் அம்மா.

மாலை ஆறு மணி.

தென்மேற்கு பருவ காற்று குளிர் சுமந்து வீசிக் கொண்டிருந்தது.

முகம் கழுவி, பவுடர் ஒற்றி வாசலுக்கு வந்திருந்தாள் மதுமிதா.

கதிரவனின் மஞ்சள் ஒளிபட்டு மஞ்சள் தேவதை யாய் தெரிந்தாள்.

எதிர்பாராமல் எதிரில் வந்து நின்றான் சந்திரன். கண்களில் தேடல் இருந்தது. ஏதோ சொல்ல வாய் திறந்தான்.

பேச்சுக்கு தடை போடுவது போல குறுக்கே வந்தது குரல் ஒன்று.

"என்ன சந்திரன்.. இந்தப் பக்கம்..?"

- மதுமிதாவின் முதுகுக்குப் பின்னால் வந்து கொண்டிருந்தார் பரமசிவம்.



"அது வந்து.. பயோகெமிஸ்ட்ரி புக் வேணும்"

அவருடைய வருகை சந்திரனை நிலை குலையச் செய்திருந்தது. வார்த்தைகள் தடுமாறின. முகம் நிறம் மாறியிருந்தது. மதுமிதாவிடமிருந்தோ மின்னலாய் பதில் வந்தது.

"பயோ கெமிஸ்ட்ரி என்கிட்ட இல்லை.. நிர்மலா விடம் இருக்குது."

தலையசைத்து விட்டுப் பதட்டமாய் பின்வாங்கி னான் சந்திரன்.

"எதுக்கும்மா பொய் சொன்னே..?"

- அப்பாவிடம் இருந்து கேள்வி வந்தது கண்களை நேருக்கு நேர் பார்த்து.

"எதுக்காக நாம புக் கொடுக்கணும்? காசு கொடுத்து புதுசு வாங்க வேண்டியதுதானே.."

- என்றாள் மதுமிதா குரலில் எந்த வித உணர்ச்சியும் காட்டாமல்.

"அதில்லைம்மா.. தாய் தகப்பன் இல்லா புள்ளை.. மாமன் சோறு போட்றான்... புக் வாங்க காசு கொடுத் தானோ என்னவோ.."

- வீட்டுக்கு முன்னால் போடப்பட்டிருந்த கீற்றுக் கொட்டகையை நோக்கி நடந்தார் அப்பா.

அதே நேரம்.

வேகமாய் வீட்டு முன்னால் வந்து நின்றது கறுப்பு அம்பாசிடர் கார் ஒன்று. அதிலிருந்து இறங்கி, வேகமாய் ஓடி வந்தான் கறுப்பு இளைஞன் ஒருவன் அப்பாவை

நோக்கி. அவன் முகத்தில் பதட்டம் இருந்தது. வியர்வையில் நனைந்து போயிருந்தான்.

"என்ன முருகேசு-"

- பரமசிவத்தையும் அந்தப் பதட்டம் தொற்றிக் கொண்டது.

அவரை நெருங்கி காதில் ஏதோ கிசுகிசுப்பாய் சொன்னான்.

"என்னது- அப்பாவை மக வெட்டிட்டாளா-?"

- பரமசிவத்தின் வாய் அதிர்ச்சியில் திறந்து கொண்டது.

அந்த கறுப்பு இளைஞன் தலையை மட்டும் ஆட்டி வைத்தான்.

அப்பொழுது தான் கவனித்தாள் அந்த இளைஞன் கட்சி கரை போட்ட வேஷ்டி கட்டியிருப்பதை. பரமசிவம் வேகமாய் வீட்டுக்குள் நுழைந்தார். அடுத்த ஐந்தாவது நிமிடம் வெள்ளை வேஷ்டி, வெள்ளை சட்டையில் வெளியே வந்து காரில் ஏறிக்கொள்ள கோபமாய் புறப்பட்டது.

"அப்பாவை மகள் அரிவாளால் வெட்டி விட்டாளா... என்ன காரணமாய் இருக்கும்... இப்படி கூட நடக்குமா என்ன- விசித்திரமாய் இருக்கிறதே-"

- திரும்பி வீட்டுக்குள் நடந்தாள் மதுமிதா சிந்தனைகளுடன்.

தூரத்திலிருந்து அவள் நடந்து போவதை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான் சந்திரன்.



நிலவு வானத்துக்கு வந்திருந்தது தங்க முலாம் பூசிய தங்கத்தகடாய். மினுக்கும் நட்சத்திரங்கள் நிலவை பார்த்து கண் சிமிட்டிக் கொண்டிருந்தன காதலுடன். ஈரப்பதம் சுமந்த தென்மேற்கு பருவக் காற்று மதுமிதா வின் தாவணியை அசைத்தது. மொட்டை மாடி கைப்பிடிச்சுவரை பிடித்தபடி நின்று கொண்டிருந்தாள் மதுமிதா. அவள் சிந்தனையோ நான்கு திசைக்கும் சுழன்று கொண்டிருந்தது. 'அப்பா ஏன் இன்னும் வரவில்லை? மகளால் வெட்டப்பட்ட அந்த அப்பா இறந்து போயிருப்பாரா- ஏன் இந்த வேதனை- சந்திரன் எதற்காக வீடு தேடி வந்தான்... என்னிடம் தனியாக ஏதோ பேச வேண்டும் என்றானே அதற்காகவா... எதற்காக. அதுவும் குறிப்பாக பயோகெமிஸ்ட்ரி புத்தகத்தை கேட்டான். நான் என்ன சொல்வேன் என்று அறிந்து கொள்வதற்காகவா- அவன் தான் தங்க வால் குதிரையா- இருக்காது- அப்பா எப்படி நான் பொய் சொல்கிறேன் என்று கண்டுபிடித்தார்-'

- கன்னத்தில் பொட்டாய் மழைத்துளி ஒன்று விழுந்திருந்தது.

அண்ணாந்து வானம் பார்த்தாள் மதுமிதா.

கீழ் உதட்டைத் தொட்டுப் பார்த்தது இன்னொரு மழைத்துளி.

ஆசையாய் ருசித்துப் பார்த்தது நுனி நாக்கு.

'மழைத்துளிக்கு சுவை கிடையாதா- எதுவும் உணர முடியவில்லையே- ஒரு துளி மழை என்பதால் சுவை அறிய முடியவில்லையா... ம்... காதலுக்கு சுவை உண்டா- கரும்பு இனிப்பு, வேப்பம்பூ கசப்பு, காதலின் சுவை மட்டும்

ஆளுக்கு ஆள் வேறுபடுகிறதே அது ஏன்... காதல் கசப்பா... இனிப்பா...?'

மழை பொட்டு பொட்டாய் விழ ஆரம்பித்திருந்தது சற்று வேகமாய்.

'என்னை காதல் தொட்டு விட்டதா... முகம் தெரியாத யாரையோ காதலிக்க ஆரம்பித்து விட்டேனா... எனக்கு என்ன பைத்தியம் பிடித்து விட்டதா... தங்க வால் குதிரை என்னை பைத்தியமாய் அடித்து விட்டதா... எனக்கு கவிதை எழுதியவனை பார்க்க என் மனம் துடிக்கிறதே... எங்கேயோ ஒளிந்திருக்கும் என் காதலனே நேரில் வா...'

சாரல் மழை வேகமாய் விசிறத் தொடங்க, காற்றும் தன் வேகத்தை அதிகப்படுத்தியிருந்தது. பொட்டு பொட்டாய் மழைத்துளி பட்டு தாவணி பாதி நனைந்திருந்தது.

ஏய் மதுமிதா, மொட்டை மாடியில என்னடி செய்றே...?"

- அம்மாவின் குரலில் நிஜமாகவே கோபம் இருந்தது.

மௌனமாய் படிகளில் இறங்கிக் கீழே வந்தாள் மதுமிதா.

கண்களில் கோபத்துடன் எதிரில் வந்து நின்றாள் அம்மா.

"மழையில நனைஞ்சி காய்ச்சல் வந்து படுத்திட்டா, பத்து நாள் காலேஜுக்கு போக வேண்டாம்னு திட்டம் போட்றியா..."

மதுமிதாவை இழுத்துப் பிடித்து, சேலைத் தலைப்பால் தலையைத் துவட்டினாள் அம்மா.



"விடும்மா... நா என்ன சின்னக் குழந்தையா...?"

"குழந்தை தான். என்றைக்கும் நீ எனக்கு சின்ன குழந்தை தான். போயி துணியை மாத்து."

மனதில் பொங்கிய பாசத்துடன் தன் அறைக்குள் நுழைந்தவள் —

அப்படியே திகைத்துப் போய் நின்று விட்டாள்.

அதிர்ச்சி கண்களைத் தாக்கியிருந்தது.

அவள் பார்வை தொட்ட இடத்தில்.......




ஒரு ஆணும் பெண்ணும் முதன் முதலாய் தொட்டுக் கொள்ளத் துடிக்கும் உணர்ச்சிகளுக்கு முன்னோடி தான் இந்தக் காதல் என்னும் வார்த்தை. பதின்மூன்று வயது வரை 'தேமே' என்று சோம்பிக் கிடக்கும் ஹார்மோன்கள், அதற்குப் பிறகு வன்முறையில் ஈடுபட்டு, கலாட்டா செய்யப் போக, ஒரு டீன் ஏஜ் ஆண்மகனுக்கு எதிர் வீட்டு வேலைக்காரப்பெண் சுவாரஸ்யமாய் தெரிகிற வைபவத்துக்குப் பெயர்தான் காதல்.

*- எழுத்தாளர் ராஜேஷ்குமார்*

பார்வை தொட்ட இடத்தில் மதுமிதாவின் கட்டில் கிடந்தது. அதிர்ச்சி வாங்கிய கண்களில் சந்தோஷம் மிதந்தது. அந்த கட்டில் தேக்கு மரத்தால் செய்யப்பட்டது. கட்டில் கால்கள் அழகிய வேலைப்பாடுகளுடன் சிரத்தையெடுத்துச் செய்யப்பட்டிருந்தன. மதுமிதாவின் தாத்தா காலத்து கட்டிலாய் இருக்க வேண்டும்.



அந்த காலத்து கட்டிலில் இந்தக் காலத்து சுக மெத்தை பொருத்தப்பட்டிருந்தது. அதன் மேல் மெத்தை விரிப்பாய் நீல நிறத்தில் குதிரை ஒன்று ஓடிக் கொண்டிருந்தது. அந்த ஓட்டத்தில் சந்தோஷம் தெரிந்தது. யாரையும் சுமந்து செல்லாத சுதந்திரத்தில் பிறந்த சந்தோஷம். அவசர அவசரமாய் மதுமிதாவின் கண்கள் குதிரையின் வாலை நோக்கி நகர்ந்தன. வால் தங்க நிறத்தில் பெயிண்டிங் செய்யப்பட்டிருந்தது.

'அட... தங்க வால் குதிரை. படுக்கை அறைக்கும் வந்து விட்டாயா..?"

அருகில் போய் பார்த்தாள். மெத்தை விரிப்பு வெள்ளையும், நீலமும், மஞ்சளும் கலந்து மிக நேர்த்தியாக பெயிண்டிங் செய்யப்பட்டிருந்தது. தங்கவால் குதிரை ஓடுகிற அழகை இன்று முழுவதும் நின்றே பார்த்து ரசிக்கலாம் போலிருந்தது. கலா ரசனையுள்ள ஒரு தேர்ந்த பெயிண்டரால் மட்டுமே இதை உருவாக்கியிருக்க முடியும்... வானமும் நீலம், குதிரையும் நீலம், இரண்டையும் அழகாய் வேறுபடுத்தியிருந்தார். குதிரை ஓடுகிற இடமோ இன்னும் அழகு. எதோ ஒரு நதியின் கரையிலே குதிரை ஓடிக் கொண்டிருந்தது. அந்த நதியில் நீச்சலடிக்கும் மீன்கள்... தங்க மீன்கள். நதியில் மிதக்கும் தங்கத்தாமரைகள்... எத்தனை அழகான மெத்தை விரிப்பு- நடுநாயகமாய் என் காதல் தங்கவால் குதிரை...'

அடுத்த இமை மூடு பொழுதே மதுமிதாவின் முகம் கோபத்தில் சிவந்தது.

'இந்த குதிரையை யார் உள்ளே விட்டது... என் அனுமதியில்லாமல். அதுவும் என் படுக்கையில் யார் இந்த மெத்தை விரிப்பை விரித்தது- யார்- அம்மா...'

"அம்மா!"

அடுத்த வினாடி அம்மா வந்து முன்னால் நின்றாள்.

"எதுக்குடி இந்த கத்து கத்தறே...?"

"இதை யார் விரித்தது...?"

- மெத்தை விரிப்பைச் சுட்டிக் காட்டி கேள்வி கேட்டாள் பொங்கும் எரிச்சலுடன்.

"வேற யார் வந்து விரிப்பா...? நான் தான் விரிச்சேன். இது உனக்கு இல்லையா...? மதுமிதா அக்காக்கிட்ட கொடுத்திடுங்கன்னு ஒரு சின்ன பொண்ணு ஒரு பார்சலை கொண்டு தந்திச்சி... என்னது இருக்குன்னு பிரிச்சி பார்த்தேன். அழகான மெத்தை விரிப்பு. பெயிண்டிங் வேலை பிரமாதம். அதுவும் இந்த குதிரை ரொம்ப அழகு. உடனே விரிக்கணும்னு தோணிச்சி. விரிச்சிட்டேன். மெத்தை விரிப்பு உனக்கில்லையா... வேறு யாருடைய மெத்தை விரிப்பையோ வாங்கி பெயிண்ட் பண்ண குடுத்திருந்தியா...?"

- அம்மா வாய் மூடாமல் பேசிக் கொண்டிருந்தாள் நான் ஸ்டாப் கொண்டாட்டமாய்.

மதுமிதா அவசர அவசரமாய் தலையசைத்து வைத்தாள்.

'யாரோ நம்மோடு விளையாடுகிறார்கள்.'

'மதுமிதா பாரு... குதிரையோட வாலை தங்க நிறத்தில பெயிண்ட் பண்ணியிருக்குது."

"காதல் விளையாட்டு"

— என்றாள் முணுமுணுப்பாய்.



"என்னடி வாய்க்குள்ளேயே பேசிக்கிறே- ஒண்ணு உனக்கு ஒழுங்கா பேசத் தெரியல்ல... இல்லை எனக்கு சரியா காது கேட்கல. எதாவது ஒண்ணு."

- பதிலுக்கு முணுமுணுத்தபடி அம்மா அறையை விட்டு வெளியேறினாள். அவசரமாய் கதவை பூட்டிவிட்டு படுக்கையை நெருங்கினாள் மதுமிதா. மெத்தை விரிப்பிலிருந்த தங்க வால் குதிரை தன்னை நோக்கி சிரிப்பது போலிருந்தது அவளுக்கு. விளக்கை அணைத்து விட்டு படுக்கையில் விழுந்தாள். இதயம் குலுங்கிற்று.

'ராத்திரி பகல் என்று பாராமல் அப்பா ஏன் இப்படி அலைகிறார்? யாரை யார் வெட்டினால் இவருக்கு என்ன... வந்ததும் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்... அந்த அப்பாவை ஏன் மகள் வெட்டினாள் என்று- அம்மா ஏன் அப்பாவிடம் எதுவுமே கேட்பதில்லை?"

புரண்டு புரண்டு படுத்தாள். இன்று ஏனோ உறக்கம் வர மறுத்தது.

எழுந்து மொட்டை மாடிக்கு போகலாம் என்றது மனது.

'அம்மா கொன்றே போட்டு விடுவாள்.'

அந்த ஓவியக் குதிரை படுக்கையிலிருந்து தன்னை புரட்டிப் போட முயற்சிப்பது போலிருந்தது.

'காதல் என்றால் என்ன என்று கேட்ட சந்திரனிடம் நாளைக்கு காதல் என்றால் என்னவென்று கேட்க வேண்டும்... எதற்காக வீடு தேடி வந்து பயோகெமிஸ்ட்ரிபுக் கேட்க வந்தாய் என்று கேட்க வேண்டும். நாளை நிர்மலாவிடம் மனதில் இருப்பதை கொட்டி விட வேண்டும். தங்க வால் குதிரைக்கு கடிவாளம் போட நிச்சயம் அவள் உதவி தேவைப்படும்...'

தலைக்கு வைத்திருந்த தலையணையைத் தூக்கிக் காலடியில் போட்டாள். உடம்பை ஒரு சுழற்று சுழற்றினாள். தலை இருந்த இடத்துக்கு கால்கள் இடம் மாறியிருந்தன.

'இனியாவது உறக்கம் வருமா..?'

கொசு பறந்து செல்வது கூட காதில் தெளிவாய் விழுந்தது.

தோட்டத்து மரத்தில் ஏதோ ஒரு பறவையின் சிறகசைப்பு. சுவர் பூச்சிகளின் சின்ன சத்தம் கூட உறங்க விடாமல் இம்சைப்படுத்துகிறது. சுவர் பல்லி ஒன்று சப்தமிட்டது. வெளியில் தெரு நாய் ஒன்று குரைத்துக் கொண்டே ஓடுவது பயமுறுத்தியது. காலை அசைத்தாள். கொலுசு சிணுங்கிற்று உறக்கம் துரத்த.

மனதுக்குள் வரிசையாய் நகர்ந்தன ஒவ்வொரு நிகழ்வுகளும்.

'பயோகெமிஸ்ட்ரி புத்தகத்தில் ஒட்டப்பட்டிருந்த ஸ்டிக்கர்.. மஞ்சள் நிற 'குட்டி' கவர்.. வெள்ளைக் காகிதம்.. நீல எழுத்துக்கள்.. மதுமிதா.. அட... ஓராயிரம் கவிதைக்கு உரிய அழகா ஒரே ஒரு வார்த்தைக்கு? தங்கவால் குதிரை..'

- புரண்டு படுத்தாள். இதயமும் ஒரு முறை புரண்டது.

'ட்ரெஸிங் டேபிள் கண்ணாடியில் ஒட்டப்பட்டிருந்த ஓவியக் குதிரை.. வேறு வழியில்லை உன்னை நான் காதலித்து தான் ஆக வேண்டும்... நீ மட்டுமே என் கண்களுக்கு அழகாக தெரிவதால்... கூரியரில் வந்த அட்டைப் பெட்டி... ஓடுகின்ற பொம்மைக் குதிரை... வீடு தேடி வந்திருக்கும் மெத்தை விரிப்பு... நீல வானம்... தங்கவால் குதிரை..



-இதயத்துக்குள் நடனமாடி குதித்தது தங்க வால் குதிரை. இதயம் வலித்தது காதல் வேதனையில். 'தங்கவால் குதிரை... தங்கவால் குதிரை' என்று உதடுகள் முணுமுணுத்தன.

- இடது காலால் யாரையோ ஒரு முறை உதைத்தாள். கொலுசு கோபப்பட்டது. எந்த நிமிடத்தில் எந்த வினாடியில் தூங்கப் போனாள் என்று தெரியாமலே தூங்கிப் போனாள்.

தகதகத்தது தங்க நிலவு. வானத்தில் அங்கும் இங்கும் அலைந்தன தங்க முலாம் பூசிய மேகங்கள்... நறுமணம் சுமந்த காற்று காதோரம் விழுந்து கிடந்த முடிகற்றையை அசைத்துச் சென்றது... ஏதோ பெயர் தெரியாத நதிக்கரையில் நின்று கொண்டிருந்தாள் மதுமிதா, மஞ்சள் தேவதையாய், மஞ்சள் நிறத்தில், மல்லிகை வடிவத்தில் தலையில் சரம் சரமாய் மலர்கள்.. அவள் கண்கள் யாரையோ தேடுவது போலிருந்தது. அந்த நதி ஓடிக் கொண்டிருந்தது. ஆனால் நதியில் தண்ணீர் இல்லை. பூக்கள்... மஞ்சள் நிறத்தில் பூக்கள்.. பூக்களே நதியாய் உருமாறி ஓடுவது போல ஓடிக் கொண்டிருந்தது. அந்த நதியின் பெயரே மஞ்சள் நதியாய் இருக்குமோ என்னவோ... மெல்ல நதியோரமாய் நடக்க ஆரம்பித்தாள்.

குளிர்காற்று முகத்தில் மோதி இம்சைப்படுத்தியது. மஞ்சளாய் நகர்கின்ற நதியை இமைக்காமல் பார்த்துக் கொண்டே நடந்தாள். மண்ணுக்கு வலித்து விடக் கூடாதே என்பது போல் நடந்தாள். தங்க நிலவு கண் திறந்து அவளை சித்ரவதை செய்ய முயற்சித்தது. அவளோ நடந்து கொண்டிருந்தாள் மௌனமாய். திடீரென்று நடந்து கொண்டிருந்தவளை யாரோ பின்னாலிருந்து இழுப்பது

போல் உணர்ந்தாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். யாரும் இல்லை. டக்டக் டக்டக்… தூரத்தில் குளம்போசை கேட்டது தாள லயத்துடன். அது– அது– குதிரையின் குளம்போசை வந்த வழியை திரும்பிப் பார்த்தாள். குளம்பொலி அவள் பார்வை தேடிய திசையிலிருந்து தான் வந்து கொண்டிருந்தது. குளம்பொலி மட்டும் காற்றில் மிதந்து வருகிறது. குதிரை எங்கே… அவள் சிந்தித்த அதே விநாடி நதிக்கரையில் குதிரை தெரிந்தது. ஓடி வருகிற அழகு குதிரை… எத்தனை அழகு… இப்படி ஒரு கம்பீர குதிரை இதுவரை அவள் சந்தித்ததே இல்லை. மதுமிதா வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கும் போதே அந்த குதிரை அவள் நிற்குமிடத்தை நெருங்கி விட்டது. ‘நீல வண்ணத்தில் குதிரை இருக்குமா?’ மதுமிதா என்ற மஞ்சள் தேவதையை அந்த குதிரை கவனித்ததாக தெரியவில்லை. அவளை இடித்துத் தள்ளுவது போல் அருகில் வந்து விட்டது. சட்டென்று விலகி வழி விட்டாள். அவளை சற்றும் பொருட்படுத்தாமல் அவளை கடந்து நதியின் கரையில் ஓடியது அந்த நீலக் குதிரை மின்னல் வேகத்தில். மதுமிதாவை குதிரை கடந்து செல்லும் கடைசி விநாடியில் தான் கவனித்தாள். அந்த நீலக் குதிரையின் வால் தங்க இழைகளாய் காற்றில் விசிறி சென்றது. ஒரு சில தங்க முடிகள் முகத்தில் பட்டுச் சென்றது போலவும் உணர்ந்தாள். அதிர்ச்சியும் ஆச்சரியமும் அவளை அசைத்திருந்தது. காதல் பொங்க கத்தினாள் “தங்கவால்” - யாரோ பின்னங்காலைப் பிடித்து இழுத்து நிறுத்தியது போல அந்த குதிரை ஓட்டத்தை நிறுத்தியது. முன்னங்கால் தூக்கிக் கனைத்தது உதடு விரித்து.

“ஏய் தங்க வால் இங்க வா”

— அழைத்தாள் மதுமிதா சிணுங்கலுடன்.



“வரமாட்டேன்”

— என்றது அந்தத் தங்கவால் குதிரை.

மதுமிதா அதிர்ந்து போனாள். ‘குதிரை பேசுமா… இது எந்த ஊர் குதிரை…’ அவள் மனதை படித்தது போல அந்த குதிரை தொடர்ந்து பேச ஆரம்பித்தது. ‘நான் பேசும் குதிரை. அதுவும் காதல் தேசத்து குதிரை… வா மதுக்குட்டி… நாம் காதலிக்கலாம்… காதல் மரத்து பறவைகளாய் வானில் பறக்கலாம்…”

‘என்னது குதிரையை காதலிப்பதா!’

காதலுடன் அவளை நோக்கி ஓடி வந்தது நீல நிறக் குதிரை.

மதுமிதா பயத்துடன் திரும்பி ஓடத் தொடங்கினாள்.

“ஏய் மதுக்குட்டி நில்… என் தங்க வால் அறுத்து உன் உடல் முழுவதையும் தங்கத்தால் அலங்கரிக்கிறேன்… நில் மதுமிதா.”

ஓடுகின்றவளை துரத்த தொடங்கியது அந்த தங்க வால் குதிரை. ஓடுகிறாள்… ஓடுகிறாள்… நதிக்கரையில் கால் வலிக்க ஓடுகிறாள்… விடாமல் துரத்துகிறது குதிரை.

கால் தடுமாறி —

நதிக்கரையிலிருந்து உருண்டு நதியில் போய் விழுகிறாள்.

தொடர்ந்து நதியில் குதித்தது தங்க வால் குதிரை.

மதுமிதாவையும், தங்க வால் குதிரையையும் மஞ்சள் பூக்கள் ஓடிவந்து சூழ்ந்து கொண்டன. மதுமிதாவை.

மஞ்சள் பூக்கள் நெருங்க, கழுத்து இறுகியது. மூச்சு விட முடியாமல் திணறினாள்.

விழித்துக் கொண்டாள் மதுமிதா. 'கனவிலும் துரத்துகிறதே தங்கவால் குதிரை!'

உடம்பு வியர்வையில் தெப்பமாய் நனைந்து போயிருந்தது.

இதயம் வேகமாய் அடித்துக் கொண்டது. சுவர் கடிகாரம் நள்ளிரவு பன்னிரண்டு என்றது.

அதே நேரம் —

கல்லூரி விடுதி அறையொன்றில் வார்த்தைகளை தேடி தேடி மதுமிதாவுக்கு காதல் கடிதம் எழுதி கொண்டிருந்தான் கண்ணாடி அணிந்த இளைஞன் ஒருவன்.




மனிதன் சுதந்திரத்தை
விரும்புகிறான்
காதலோ சிறைச்சாலை
ஆனாலும்...
உயிர்கள் எல்லாமே
இந்தச் சிறைச்சாலைக்குள்
அடைபடவே
ஆசைப்படுகின்றன.

*- கவிஞர் அப்துல் ரகுமான்*

விழித்துக் கொண்ட மதுமிதா வியந்து போனாள்.

தங்க வால் குதிரை கனவிலும் விரட்டி வருவது விசித்திரமாகவும் இருந்தது. நைட்டி வியர்வையில் நனைந்து போயிருந்தது சாரல் மழையில் சிக்கிக் கொண்டது போல. தலைக்கு மேல் சுழன்று கொண்டிருந்த ஃபேன் சத்தமில்லாமல் காற்றை அள்ளி அந்த

அறை எங்கும் வீசிக் கொண்டு தான் இருந்தது. கடிகாரத்தின் பெரிய முள்ளும் சின்ன முள்ளும் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தன பயத்தில். இதயம் நிதானம் இழந்திருந்தது.

'ஏன் இந்த கனவு வந்தது... நானும் குதிரையும் ஆற்றில் விழுந்து விட்டோமே..'

மனதுக்குள் பயம் எட்டிப் பார்த்தது.

'பயம் என்பது மனக் குழப்பத்தின் குழந்தை' - யாரோ சொன்னது நினைவுக்கு வந்தது.

'எனக்குள் குழப்பம் வந்து விட்டது.. காதல் செய்த குழப்பம்..'

- புரண்டு புரண்டு படுத்தாள். மீண்டும் உறக்கம் வர மறுத்தது.

ஒரு முடிவுக்கு வந்தவளாய் தலையணையைத் தூக்கித் தரையில் வீசினாள்.

படுக்கையிலிருந்து எழுந்து, தரையில் விழுந்து படுத்துக் கொண்டாள்.

அடுத்த சில நிமிடங்களில் தூங்கிப் போனாள் கனவுகளின்றி.

சூரிய வெயில் முகத்தைத் தொட்ட பிறகுதான் எழுந்திருந்தாள்.

அவளுக்கு வெட்கமாய் இருந்தது கனவுக்குதிரைக்கு பயந்து தரையில் படுத்து உறங்கியது.

அவசர அவசரமாய் தோட்டத்துக்குக் குளிக்கப் போனாள் மதுமிதா.



கிணற்று தொட்டியில் சந்திரன் குளித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

வேலியோரத்துக்குப் போய் மெலிதான குரலில் அழைத்தாள்.

"சந்திரன்!"

திரும்பி பார்த்தவன் கூச்சத்தில் நெளிந்தான்.

"சந்திரன்... நீ என்கிட்ட தனியா பேசணும்னு சொன்னே.. அதுக்கு முன்னால நான் உன்கிட்ட தனியா பேசணும்.. எங்கே வைச்சி பேசலாம்.. சொல்லு."

"மதியம் நான் சாப்பிட்ற இடத்துக்கு வா."

உதட்டோர புன்னகையுடன் பாத்ரூமை நோக்கி நடந்தாள். 'என்னவாயிருக்கும்?' தலையிலிருந்து நீர் சொட்ட சொட்ட சிந்தனையுடன் நின்று கொண்டிருந்தான் சந்திரன். அன்று பார்த்த அதே கண்கள். இன்றும் கவனித்துக் கொண்டிருந்தன சந்தேகத்துடன்.

குளித்து முடித்து, மார்புக்கு குறுக்கே டர்க்கி டவலுடன் ட்ரெஸிங் டேபிள் முன்னால் போய் நின்றாள் மதுமிதா. கண்ணாடியில் காகிதத்தின் பிசிறுகள் இன்னும் மிச்சமிருந்தன. மின்னல் வேகத்தில் தலை துவட்டி, உலர் துணியால் கூந்தலைச் சுருட்டி முடிச்சிட்டாள்.

'இன்று.. மஞ்சள் சுரிதார்.. ம்.. நேரமாகி விட்டது.. பீரோ சாவி எங்கே..'

- அங்கும் இங்கும் தேடி கடைசியில் அலமாரியின் கீழ் அடுக்கில் கண்டெடுத்தாள்.

அடுத்த விநாடியே சோர்வு வந்து அவளை பிடித்துக் கொண்டது. மயக்கம் வரும் போலிருந்தது.

கையிலிருந்த கீ செயினை கண்களுக்கு எதிரே உயர்த்திப் பிடித்தாள்.

அந்த கீ செயினில் தொங்கிக் கொண்டிருந்தது மூன்று செ.மீ. உயர குதிரை. குட்டிக் குதிரை. காற்றில் அங்கும் இங்கும் ஊஞ்சலாட்டம் ஆடியது. அந்தக் கண்ணாடிக் குதிரையின் வால் மட்டும் தங்கமாய் மினுக்கிற்று.

'எனக்கு பைத்தியம் பிடிக்க வைத்து விட வேண்டும் என்றே முடிவு கட்டி விட்டாய்.. வா.. என் பின்னால் வா.. துரத்து.. காதல் தொலைந்து போகும் வரை துரத்து.. தங்க வால் குதிரையே வா..'

பெருமூச்சு ஒன்று அவள் மார்பை தாலாட்டியது.

இறுக்கமான முகத்துடன் நடந்து பீரோவைத் திறந்தாள்.

கண்ணாடிக் குதிரை அங்கும் இங்குமாக குதித்தது.

டர்க்கி டவல் துறந்து சிவப்பு புள்ளிகள் சுமந்த மஞ்சள் சுரிதாருக்கு மாறினாள்.

இடது தோளிலிருந்து சிவப்புத் துணி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது நீளமாய்.

'நேற்று இரவு கீ செயினில் தொங்கிக் கொண்டிருந்தது குருவி. இன்று காலை தொங்கிக் கொண்டிருப்பதோ குதிரை.. இது என்ன மாயஜால படமா.. என்ன நடக்கிறது இந்த வீட்டில்..'

சுவர்க் கடிகாரம் சப்தம் எழுப்பி 'நேரம் ஆகி விட்டது' என்று பயமுறுத்தியது.



'என் காதல் குதிரையே.. கொஞ்ச நேரம் இருட்டில் இரு.. இரவு பேசிக் கொள்வோம்.'

கண்ணாடிக் குதிரையுடன் கீ செயினைத் தன் கைப்பைக்குள் போட்டு மூடினாள்.

அம்மாவை ஏமாற்றி ஒண்ணே கால் இட்லியுடன் காலை உணவை முடித்துக் கொண்டு, புத்தகங்களை சுமந்து கொண்டு வாசலுக்கு வந்தாள். கறுப்பு அம்பாசிடர் கார் வந்து நின்றது.

சோர்வுடன் இறங்கி நடந்து வந்தார் பரமசிவம்.

எதிரில் வந்த மதுமிதாவிடம் ஒரு வார்த்தை பேசாமல் உள்ளே சென்று விட்டார். 'அப்பாவுக்கு என்ன ஆயிற்று.. இதுநாள் வரை என்னிடம் பேசாமல் சென்றதில்லையே..'

'மகளால் வெட்டப்பட்ட அந்த மனிதர் இறந்து போயிருப்பாரோ.. வந்ததும் பேசிக் கொள்ளலாம்.'

பஸ் நிறுத்தத்தை நோக்கி வேகமாய் நடக்க ஆரம்பித்தாள் மதுமிதா.

கல்லூரி முன்னால் அந்த பஸ் அரை வட்டம் அடித்து நிற்க, வண்ண வண்ண உடைகளில் மாணவர்களும், மாணவிகளும் உற்சாகமாய் இறங்கினார்கள். கலைந்த தலைமுடியை சரி செய்தபடி மதுமிதா இறங்கினாள். யூகலிப்டஸ் மரநிழலில் காத்து நிற்கும் நிர்மலாவைக் காணவில்லை.

லேடீஸ் வெயிட்டிங் ஹாலை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

மாணவர்களைச் சுமந்து கொண்டு இரு சக்கர வாகனங்கள் பறந்து கொண்டிருந்தன.

சூரியன் முகத்தில் கோபம் தெரிந்தது.

விசில் சத்தம் அவள் கவனத்தை திசை திருப்பியது.

விளையாட்டு மைதானத்தில் தடைகளை தாண்டி தாண்டி பயிற்சி செய்து கொண்டிருந்தனர் சில மாணவர் கள். வாயில் விசிலுடன் பிசிக்கல் டைரக்டர்.

நடந்து கொண்டிருந்த மதுமிதாவை உரசுவதுபோல அந்த மோட்டார் சைக்கிள் வந்து நின்றது. அதன் மேல் கண்ணாடி அணிந்த இளைஞன் ஒருவன் அமர்ந்திருந் தான். முகத்தில் பதட்டம் ஒட்டியிருந்தது. மோட்டார் சைக்கிள் சத்தத்தில் திரும்பிப் பார்த்தாள்.

'ஜுவாலஜி புரொபசர்!'

அவள் கண்கள் வியப்புடன் அவனை உற்றுப் பார்த்தன.

"மதுமிதா... உன்கிட்ட தனியா பேசணும்..."

- குரல் பேச முடியாமல் திணறியது. கண்ணாடிக்கு பின்னால் வியர்த்திருந்தான்.

'சந்திரன் கேட்ட அதே கேள்வி!'

நடுங்கும் அவன் விரல்களைக் கவனித்தாள்.

விரல்களின் பிடியில் மடித்து வைக்கப்பட்ட காகிதம்.

"சொல்லுங்க சார்"-என்றாள் அவன் கண்களை நேருக்கு நேர் பார்த்து.

அவனுடைய பார்வை அவசரமாய் தரையை தடவியது.



"தனியா பேசணும்னு நினைச்சேன். இதை என்னால பேச முடியாது. இதில தெளிவாய் எழுதியிருக்கேன். நாளைக்கு பதில் சொல் போதும்"

- என்றவன் ஒரு விநாடி கூட தாமதிக்காமல் காகிதத்தை அவள் கையில் திணித்தான். அடுத்த நிமிடத் தின் ஆரம்பத்தில் மோட்டார் சைக்கிள் புகை கக்கி முன்னோக்கிச் சென்றிருந்தது. கையில் திணிக்கப்பட் டிருந்த காகிதத்தைக் கொஞ்ச நேரம் இமைக்காமல் பார்த்தாள்.

'ஜுவாலஜி புரொபசருக்கு என்ன ஆயிற்று- இது என்ன லவ் லெட்டரா...'

- அந்த நினைப்பே உள்ளூர நடுக்கத்தை ஏற்படுத்தியது.

'படித்து பார்க்கலாமா... இப்பொழுது வேண்டாம்'

- மடிக்கப்பட்ட காகிதத்தை புத்தகமொன்றில் செருகி வைத்தாள். கைப்பைக்குள் திணித்தாள்.

அதே நேரம் —

வழிமறிப்பது போல முன்னால் வந்து நின்றது இன்னொரு மோட்டார் சைக்கிள்.

பின் இருக்கையிலிருந்து எட்டிப் பார்த்தான் மதன். அதே விஷம் தடவிய புன்னகை.

"என்ன மது... மிதா... 'விலங்கியல்' காதல் விலங்கு பற்றி கேள்வி தூண்டில் வீசினானா... தவளையை உயிரோட கிழிச்சி இதயம் துடிக்கிறதை ரசிக்கிறவன், இதயத்தை கிழிச்சி காதல் இருக்குதான்னு பார்க்கிறானா... மது... மிதா... என்ன கதை...?"

- ஏற்ற இறக்கத்துடன் ஒரு தேர்ந்த வில்லன் போல பேசினான் உதடு சுளித்து.

"காதல் கதை தான். கதை, திரைக்கதை, வசனம், டைரக்டர் மதன். வருங்காலத்தில் நம்ம கல்லூரி பெருமைப்பட போகுது. நிச்சயம் நீ சினிமா டைரக்டரா வருவே."

"முதல் படத்துக்கு தலைப்பு சொல்லட்டுமா..?"

"ம்..."

"மதுமிதா மன்னித்து விடு!"

கல்லூரி வாசலை நோக்கி சீறிக் கொண்டு கிளம்பியது மோட்டார் சைக்கிள். உதடுகளில் புன்னகை நெளிய வெயிட்டிங் ஹாலை நோக்கி நடந்தாள் மது மிதா.

வெயிட்டிங் ஹால் கலகலத்துக் கொண்டிருந்தது.

மாணவிகள் கொத்து கொத்தாய் அமர்ந்து எது எதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

சிலர் புத்தகப் பூச்சிகளாய் அமர்ந்திருக்க, பலர் வண்ணத்து பூச்சியாய் சுற்றி வந்தார்கள். மதுமிதாவின் கண்கள் ஒரு சுற்று சுற்றி வந்தன நிர்மலாவைத் தேடி.

'இன்று கட் அடித்து விட்டாளா...அவளிடம் நிறைய பேச வேண்டியதிருக்கிறதே..' - தனிமை இடம் தேடி ஒதுக்குப் புறமாய் சென்று அமர்ந்தாள்.

கைப்பை திறந்து அந்த மடிக்கப்பட்ட காகிதத்தை வெளியில் எடுத்தாள். மடிப்பு கலைத்துக் காகிதம் விரித்தாள். நீல எழுத்துக்கள் காதல் சொன்னது.



'மதுமிதா.. அன்பே மதுமிதா.. உன் முகம் பார்த்த பின்னால் தான் காதல் பொய் இல்லையென்று அறிந்து கொண்டேன். உன் கண்களை சந்தித்த நிமிடம் தான் காதலின் அர்த்தம் தெரிந்து கொண்டேன். மதுமிதா.. கண்ணே மதுமிதா.. ஏழு பௌர்ணமி காத்திருக்கிறேன்.. என் காதலை உன்னிடம் சொல்வதற்கு- ஒன்றை மட்டும் மறந்து விடாதே. என் காதலை மறுத்துவிடாதே.

என்றும் உன் காதலன்

**கார்த்திகேயன்'**

ஒரு முறைக்கு இரண்டு முறை படித்து விட்டுக் கைப்பைக்குள் வீசி எறிந்தாள் காகிதத்தை. 'இருந்து இருந்து இவனுக்கு காதல் என் மீதா வர வேண்டும்... எப்படி பதில் சொல்வேன்? தனியாய் பார்த்து சொல்லி விட வேண்டியது தான்... உங்கள் காதலை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று. இந்தக் கடிதமே கடைசியாய் இருக்கட்டும் என்று..'

"என்ன மதுமிதா... தனியா உட்கார்ந்து நகத்தை பார்த்துக்கிட்டிருக்கே.. தங்கவால் குதிரை துரத்துதா.."

நிமிர்ந்து பார்த்தாள். நிர்மலா நின்று கொண்டிருந் தாள்.

"போடி.... குதிரை துரத்தினா எனக்கு சந்தோஷம் தான். கழுதைங்களும் துரத்த ஆரம்பிச்சிடிச்சே.."

வகுப்புகள் துவங்கும் மணி ஒலித்தது.

மதுமிதா எழுந்து கொண்டாள்.

இருவரும் வகுப்பறையை நோக்கி நடக்க ஆரம் பித்தனர் நிதானமாய்.

CONNEMARA PUBLIC LIBRARY
13 NOV 2010

அன்று வகுப்பறையில் நிர்மலாவிடம் எது குறித்தும் பேசவில்லை. பேசும் மனநிலையிலும் மதுமிதா இல்லை. காலை நேர வகுப்புகள் எப்பொழுது முடியும் என்றே காத்திருந்தாள். வகுப்புகள் முடிந்ததும் நிர்மலாவிடம் சொல்லி விட்டு அந்த பூவரசு மரத்தை நோக்கி நடந்தாள். அந்த பூவரசு மரம், கொஞ்சம் விலகி தனியாய் நின்று கொண்டிருந்தது. தலையில் மஞ்சள் பூக்களுடன் இளமைச் செழிப்புடன் குளுகுளுத்தது. காலடியில் இறந்து போன மலர்கள் கவனிப்பாரின்றி.

அந்த மரத்தின் நிழலில் தான் சந்திரன் மதிய உணவு அருந்துவது வழக்கம்.

அன்று ஏனோ சந்திரனைக் காணவில்லை.

'வரட்டும்.'

மரத்து நிழலில் அமர்ந்தாள்.

மாணவிகள் வெயிட்டிங் ஹாலை நோக்கி நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். கைப்பை திறந்து கார்த்திகேயன் தந்த காதல் கடிதத்தை வெளியில் எடுத்தாள். மீண்டும் ஒரு முறை கடித வரிகளில் கண்களை ஓட விட்டாள்.

இறுதியில் விலங்கியல் பேராசிரியர் கார்த்திகேயன் மீது பரிதாப உணர்வே மிஞ்சி நின்றது.

'என்னால் உங்களை காதலிக்க முடியாது... நிச்சயமாய் முடியாது'

- பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது வெப்பமாய்.

நிமிர்ந்து அமர்ந்தாள்.



மரத்தை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தான் சந்திரன் கையில் டிபன் பாக்சுடன்.

அவசரமாய் கையிலிருந்த காகிதத்தை மடித்து புத்தகத்துக்குள் செருகிக் கொண்டாள்.

அருகில் வந்து அமர்ந்தான் புன்னகையுடன்.

"நேற்று எதற்காக வீட்டுக்கு வந்தாய்..?"

"உன்னிடம் பேச வேண்டும என்று தான் வந்தேன். உன் அப்பாவை பார்த்ததும் பயந்து பொய் சொல்லி விட்டேன்."

"பயமா?.."

"பயந்தான்."

"சந்திரன்... என்னிடம் என்ன பேச வந்தாய்..?"

"முதலில் நீ சொல் மதுமிதா."

"நான்... நான் காதலிக்க ஆரம்பித்து விட்டேன்"

— என்றாள் மதுமிதா சங்கடத்துடன்.

சந்திரன் முகத்தில் சந்தோஷம் பூத்திருந்தது.

வெயிட்டிங் ஹால் வாசலில் நின்று கொண்டிருந்த நிர்மலாவின் பார்வை அவர்களைத் தொட்டுக் கொண் டிருந்தது ஆர்வமாய்.

பூவரசு மரத்து நிழலை நிமிடத்துக்கு இரண்டு முறை வட்டமடித்து திரும்பிச் சென்றன சற்று தூரத்தில் நண்பர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்த மதனின் கண்கள்.



# 11

காதல் என்பது சங்கீதம்
ஆனால் ஓசையில்லாதது
காதல் என்பது ஓவியம்
ஆனால் வர்ணமில்லாதது
காதல் என்பது சிற்பம்
ஆனால் வடிவமில்லாதது
காதல் என்பது இன்பம்
ஆனால் அமானுஷ்யமானது

- யாரோ

தூரத்தில் நின்று கொண்டிருக்கும் மதனின் பார்வை தன்னை வட்டமிடுவதையோ, வெயிட்டிங் ஹால் வாசலில் நின்று நிர்மலா இமைக்காமல் பார்த்துக் கொண்டிருப்பதையோ மதுமிதா கவனிக்கவில்லை. அவள் கண்கள் சந்திரனின் சந்தோஷ முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தன.



"என்ன சந்திரன்.. பதிலே பேசாமல் அமர்ந்திருக்கிறாய்..?"

"ம்.. சொல்"

"நான் காதலிக்க ஆரம்பித்து விட்டேன்"

— என்றாள் மீண்டும் மதுமிதா வெட்கத்துடன்.

"உனக்கு வெட்கப்படக் கூடத் தெரியுமா.. யார் அந்த முட்டாள்..?"

'நீதான் அந்த முட்டாள்' என்று சொல்லி விட மாட்டாளா என்று சந்திரனின் இதயம் ஏங்கியது.

ஆனால் மதுமிதாவின் பதிலோ வேறு விதமாய் வந்து விழுந்தது.

"யாரை.. யாரை என்று எப்படிச் சொல்வேன் சந்திரன்..?"

"என்ன. முகம் தெரியாதவனை காதலிக்கிறாயா..?"

"அப்படித் தான் வைத்துக் கொள்ளேன்."

"என்ன மதுமிதா விளையாடுகிறாயா.. இதைத் தான் என்னிடம் தனியாய்ச் சொல்ல வேண்டும் என்றாயா.. மொட்டையாய் காதலிக்கிறேன் என்றால் என்ன அர்த்தம்..?"

- என்று கேட்டான் சந்திரன் முகத்தில் எந்த வித உணர்ச்சியையும் வெளிப்படுத்தாமல்.

"உன்னிடம் சொல்வதற்குத் தான் ஓடி வந்தேன்.. யாரைக் காதலிக்கிறேன் என்று சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். நிச்சயம் ஒருநாள் சொல்வேன்

யாரை காதலிக்கிறேன் என்று. நீதான் என் காதலை ஜெயிக்க வைக்க வேண்டும்."

அவளுக்கு எந்தவிதப் பதிலும் சொல்லாமல் மௌனமாயிருந்தான். இதயம் வேகமாகியிருந்தது.

"என்மேல் கோபமா சந்திரன்... என் காதல் குறித்து இதற்கு மேல் ஒரு வரி பேசினாலும் என்னை பைத்தியம் என்று சொல்லி விடுவாய்... காதல் என்றால் என்னவென்று உன்னிடம் திருப்பி கேட்க வேண்டும் போலிருக்கிறது. பார்த்தாயா காதல் சக்கரம் சுழல்வதை..." பேசிக் கொண்டேயிருந்தவள் ஏதோ திடீரென்று நினைத்துக் கொண்டவள் போல —

"சந்திரன், என்னிடம் ஏதோ தனியாய் பேச வேண்டும் என்றாயே..."

— என்று நினைவுப்படுத்தினாள் கண்களில் ஆர்வம் மிதக்க.

அவனோ என்ன பேசுவது என்று தெரியாதவன் போல அமர்ந்திருந்தான் மௌனமாய்.

'நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று சொல்ல வேண்டும் என்று துடித்தேன். அதற்குள் நீயே ஓடி வந்து நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று சொல்லப் போகிறாய் என்று நினைத்தேன். யாரையோ காதலிக் கிறேன் என்கிறாய்... நீ தான் கொடி பிடிக்க வேண்டும் என்கிறாய்...'

"என்ன சந்திரன்... கண்ணை திறந்து கொண்டே தூங்க ஆரம்பித்து விட்டாயா...?"

"ம்... ஒன்றுமில்லை, மதுமிதா சொல்."



"நான் என்ன சொல்ல வேண்டும்... நீதான் சொல்ல வேண்டும். ஏதோ தனியாய் பேச வேண்டும் என்று சொன்னாய்... உடனே சொல், நேரமாகிறது."

-அவளுடைய குரலும் சேர்ந்து அவசரப்படுத்திற்று.

'உடனே எதைச் சொல்வது... நான் உன்னைக் காதலிக்கிறேன் என்றா... இனி உன் முகம் பார்த்து என்னால் சொல்ல முடியாது... காதலை கருவறையிலேயே கொன்று விட்டாயே...'

- அவசரமாய் பொய் தேடி நிதானமாய் சொன்னான்.

"எனக்கு கொஞ்சம் பணம் தேவைப்பட்டது."

"கொஞ்சம் என்றால்..."

"ஐநூறு ரூபாய்."

-கைப்பை துழாவி ஐந்து நூறு ரூபாய் தாள்களை வெளியில் எடுத்தாள். பணத்தோடு கை கோர்த்துக் கொண்டு வெளியே வந்து விழுந்தது கீ செயின்.

தரையில் விழுந்து கிடந்த கீ செயினை வியப்புடன் கையில் எடுத்து பார்த்தான் சந்திரன். தொங்கிக் கொண் டிருந்த கண்ணாடிக் குதிரை பளபளத்தது. வால் தங்கமாய் மினுக்கிற்று.

"மதுமிதா... எங்கே பிடித்தாய் இந்த தங்கவால் குதிரையை...?"

"காதல் தேசத்தில்."

"உனக்கு ஏதோ ஆகிவிட்டது."

"காதல் வந்து விட்டது என்று சொன்னேன் அல்லவா... ரூபாயை பிடி..."

- ரூபாய் தாள்களை சந்திரன் கையில் திணித்து விட்டு எழுந்து கொண்டாள் மதுமிதா. கையிலிருந்த புத்தகத்திலிருந்து நழுவி தரையில் விழுந்தது மடிக்கப் பட்ட காகிதம். போகிற அவசரத்தில் காகிதம் விழுந் ததை மதுமிதா கவனிக்கவில்லை. சோர்ந்து போய் அமர்ந்திருந்த சந்திரனும் அந்த காதல் காகிதத்தை பார்க்க தவறிவிட்டான். மஞ்சள் பூமரத்தின் நிழலி லிருந்து மஞ்சள் தேவதையாய் மதுமிதா நடந்து செல்வதையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண் டிருந்தான். உதடுகள் அசைந்தன மௌனமாய். விட மாட்டேன்.. மதுமிதாவை காதலிக்க விடமாட்டேன்.. நிச்சயம் காதலிக்க விடமாட்டேன்... மதுமிதாவை இன்னொருவன் காதலிக்க விடமாட்டேன்..'

சாப்பிடலாம் என்ற எண்ணத்துடன் மதிய உணவு பாத்திரத்தை திறந்தான். சோற்று பருக்கைகள் எல்லாம் சரளைக் கற்களாய் உருமாறி விட்டது போல் உணர்ந் தான். ஒரு வாய் சோற்றை அள்ளி வாயருகே கொண்டு போனான். மனமோ சாப்பிட மறுத்தது. பூவரசு மரத் தடியில் சாப்பாட்டை கொட்டி விட்டு எழுந்தான். மரத் திலிருந்த இரண்டு சிட்டுக் குருவிகள் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தன.

திரும்பி நடந்தவன் கண்களில் அந்த காகிதம் பட்டது.

மடிக்கப்பட்ட காகிதம்.

'இதென்ன காகிதம்... பூக்கள் மட்டுமே விழுந்து கிடக்கிற இடத்தில் இந்த காகித குப்பை எப்படி வந்தது.. குப்பை காகிதமாக தெரியவில்லையே... அழகாய் மடிக்கப்பட்ட காகிதம்..'



குனிந்து காகிதத்தை கையில் எடுத்தான். காகிதத் தின் மடிப்பு கலைத்தான். நீல எழுத்துக்கள் முகத்தில் அறைந்தது. வரி வரியாய் காதல் சொல்லிற்று.

'மதுமிதா.. அன்பே மதுமிதா..'

கோபத்தில் உதடு துடித்தது. கண்கள் சிவந்தன.

மீண்டும் படிக்க ஆரம்பித்தான் இதய வேகத் துடிப்புடன்.

'மதுமிதா.. அன்பே மதுமிதா.. உன் முகம் பார்த்த பின்னால் தான் காதல் பொய் இல்லையென்று அறிந்து கொண்டேன். உன் கண்களை சந்தித்த நிமிடம் தான் காதலின் அர்த்தம் தெரிந்து கொண்டேன். மதுமிதா.. கண்ணே மதுமிதா..'

- வாசிப்பை நிறுத்தி விட்டு வானம் பார்த்தான். மூச்சு திணறுவது போலிருந்தது. விட்ட இடத்திலிருந்து கண்கள் தொடர்ந்தன எரிச்சலுடன்.

'ஏழு பௌர்ணமி காத்திருக்கிறேன். என் காதலை உன்னிடம் சொல்வதற்கு. ஒன்றை மட்டும் மறந்து விடாதே. என் காதலை மறுத்து விடாதே. என்றும் உன் காதலன் கார்த்திகேயன்'

காகிதத்தைக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டு அசையாமல் நின்றிருந்தான் கண்களை கண்ணீர் நனைத்தது. நீல எழுத்துக்கள் மங்கலாய் தெரிந்தன. கண்ணீரை துடைத்தபடி நிமிர்ந்தான். நடந்து சென்று கொண்டிருந்த மதுமிதாவின் முதுகு தெரிந்தது. வெயிட் டிங் ஹால் வாசலில் நின்று கொண்டிருந்த நிர்மலாவின் பார்வை ஆணி அடித்தது போல் அசையாமல் பதிந் திருந்தது சந்திரன் மீது.

'இனி பார்த்தது போதும்' — பூவரசு மரத்து நிழலிலிருந்து மீண்டன மதனின் கண்கள்.

தாவி ஏறினான் மோட்டார் சைக்கிள் மீது. அது அரை வட்டம் அடித்து கல்லூரி வாசலை நோக்கி சீறிப் பாய்ந்தது. நண்பர்கள் திகைத்துப் போய் நின்றனர்.

சந்திரனோ கையிலிருந்த காகிதத்தை மீண்டும் ஒரு முறை படித்தான் எழுத்து எழுத்தாய்...

'நீதான்.. நீதான் அந்த காதலனா.. கல்லூரிக்கு காதல் பாடம் சொல்லிக் கொடுக்கவா வந்தாய்... கண்ணாடி அணிந்த கோட்டானா பச்சைக் கிளியை காதலிப்பது... கண்டது தின்னும் காட்டெருமையா புள்ளி மானிடம் நேசம் வைப்பது... விடமாட்டேன்... உன்னை காதலிக்க விடமாட்டேன்.. மதுமிதா.. பணம் தான் உன்னை காதலிக்க வைத்து விட்டதா... ஆயிரக்கணக்கில் அவன் வாங்கும் சம்பளம் தான் உன்னை வீழ்த்தி விட்டதா... பேராசிரியர் மனைவி என்றால் சமூகத்தில் மதிப்பு கிடைக்கும் என்று கனவு கோட்டை கட்டி வைத்திருக்கிறாயா... உன் காதல் கோட்டையில் கொடியேற்ற நான் உதவி செய்ய வேண்டுமா.. உன் காதல் கோட்டையை மண்ணோடு மண் ஆக்குவது தான் என் முதல் வேலை.'

கையிலிருந்த காகிதத்தைச் சுருட்டித் தரையில் எறிந்தான் முழுப்பலத்தையும் திரட்டி.

காகிதத்தைக் காலால் மிதித்தான். தரையோடு தரையாய் வைத்து தேய்த்தான் முகத்தில் திருப்திபடர. திரும்பி நடந்தவன், எதோ நினைத்துக் கொண்டவன் போல நின்றான். கண்களைத் திருப்பி, மண்ணில் கிடந்த காகிதத்தைப் பார்த்தான்.

அந்தக் காகிதமோ சிதைந்து, உடலெங்கும் ரணப் பட்டுக் கிடந்தது.



சந்திரனின் கண்களுக்கு மதுமிதாவின் காதலே குற்றுயிரும் குலையுயிருமாய் கிடப்பது போல் பட்டது. உதட்டோரம் புன்னகை நெளிந்தது.

'தொலைந்ததைத் தேடி மதுமிதா வந்து விட்டால்'

- அவசரமாய் குனிந்து அந்தக் காகிதத்தைக் கையில் எடுத்தான். சுருட்டி, சட்டைப் பைக்குள் திணித்தான். எதுவுமே நடக்காதது போல் மௌனமாய் கல்லூரியை நோக்கி நடந்தான்.

மதுமிதா வெயிட்டிங் ஹாலில் கால் மிதித்ததுமே நிர்மலா கேட்ட முதல் கேள்வி இதுதான்.

"மூன் உன்னை காதலிக்கிறானா..?"

"இல்லையே.."

"அப்படியானால் நீ அவனை காதலிக்கிறாயா..?"

"அதுவும் இல்லை."

"பின் எதற்காக உன்னிடம் தனியாக பேச வேண்டும் என்றான்..?"

"புத்தகம் வாங்க ஐநூறு ரூபாய் வேண்டுமாம்."

"நம்பும்படியாய் இல்லை."

"நிர்மலா, நீ நம்பித் தான் ஆக வேண்டும். என்னிடம் பொய் கிடையாது."

"நான் என்ன விலைக்கா கேட்டேன்..? சந்திரன் முகத்தில் பணத் தேவைக்கான முக பாவனை இல்லை. அவனுக்கு அவசரமாய் காதல் தேவைப்படுகிறது."

"உளறாதே!"

"காதலிப்பவர்களுக்கு மற்றவர்கள் பேசுவது உளறலாகத்தான் தெரியும்."

"எனக்கு இருக்கிற தொந்தரவு போதாதென்று நீ வேறு தொந்தரவு செய்கிறாய்… நானே… நானே…"

— அதற்கு மேல் பேச முடியாமல் மதுமிதாவின் குரல் தடுமாறியது. கண்களிலிருந்து கண்ணீர் மளமளவென்று வழிந்தது.

"நான்… நான்… என்ன சொல்லிவிட்டேன் என்று…"

— பதறிப் போனாள் நிர்மலா. அவளுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

"சாரி மது… சாரி மது…"

நான்கைந்து பெண்கள் உள்ளே வர, அவசரமாய் கண்ணைத் துடைத்துக் கொண்டாள் மதுமிதா.

"அன்று பாதியில் சொல்லி விட்டு விட்டேன். சில தினங்களாய் எனக்கு நடப்பதை வரி விடாமல் சொல் கிறேன். முழுவதும் கேட்டு விட்டு பேசு."

சில தினங்களாய் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வு களையும் வரிசை மாறாமல் கதை சொல்லும் நேர்த்தி யுடன் நிர்மலாவுக்குச் சொல்லத் தொடங்கினாள் மதுமிதா நிதானமாய்.

'பயோகெமிஸ்ட்ரி புத்தகத்தில் ஒட்டப்பட்டிருந்த ஸ்டிக்கர்… மஞ்சள் நிற 'குட்டி' கவர்… கவிதை… ட்ரெஸிங் டேபிள் கண்ணாடியில் ஒட்டப்பட்டிருந்த ஓவியக் குதிரை… காதல் வரிகள்… கூரியரில் வந்த அட்டைப் பெட்டி… ஓடுகின்ற பொம்மைக் குதிரை… வீடுதேடி வந்திருக்கும் மெத்தை விரிப்பு… அதில் தங்க வால் குதிரை… கீ செயின் கண்ணாடிக் குதிரை…'

- வரிசையாய் சொல்லிக் கொண்டு வந்தவள் பேச்சை நிறுத்தி மௌனமானாள். ஒரு நிமிடம் கண்களை மூடி



தியானம் செய்து போல் அமர்ந்திருந்தாள். சுவாசம் நிதானப்பட்டது.

"உனக்கு என்ன ஆயிற்று மதுமிதா…?"

"காதலிக்கிறேன். தங்கவால் குதிரையை காதலிக் கிறேன்."

"நான் என்ன செய்ய வேண்டும்…?"

"என்னை துரத்துகிற தங்கவால் குதிரையை நாம் துரத்த வேண்டும். குதிரைக்குள் ஒளிந்திருக்கும் என் காதலனை கண்டுபிடிக்க வேண்டும்."

"சந்திரன்…?"

"அவனுடைய உதவியும் நமக்கு தேவைப்படும்."

"நான் கடைசி வரை உன்னோடு இருப்பேன் மதுமிதா"

விலங்கியல் விரிவுரையாளர் கார்த்திகேயன் வழியில் மடக்கி காதல் கடிதம் தந்ததை நிர்மலாவிடம் சொல்லலாமா என்று ஒரு கணம் யோசித்தாள். 'இப் பொழுது வேண்டாம்' என்றது உள்மனம். வாய் வரை வந்ததை அவசரமாய் விழுங்கி வைத்தாள்.

"என்ன மதுமிதா யோசிக்கிறாய்…?"

"ஒன்றுமில்லை"

— என்றாள் அவசர அவசரமாய்.

"வா… வகுப்புக்கு போவோம்."

"இன்னும் நேரமிருக்கிறதே."

"ஆரிகேமி கண்காட்சியை பார்த்துவிட்டு அப்படியே வகுப்புக்கு போய் விடலாம்."

"ஆரிகேமியா..?"

"ஆரிகேமிதான் ஜப்பானிய காகித கலை. ஆயிரம் வருடங்கள் பழமையானது. சுருக்கமாக சொல்வதனால் காகித சிற்பங்களின் கண்காட்சி."

"ம்... வா... போகலாம்."

இருவரும் எழுந்து கொண்டனர்.

அவர்கள் கண்காட்சிக்குப் போவது அறிந்து நான்கைந்து பேர் கூட்டணி அமைத்துக் கொண்டனர்.

ஆரிகேமி கண்காட்சி நடக்கும் கட்டிடத்தை நோக்கி நடந்தனர் வண்ணத்துப் பூச்சிகளாய். அந்தச் சிறிய கட்டிடத்துக்குள் காத்திருந்தது திமிறும் வாலிபக் குதிரை ஒன்று. மதுமிதா கூட்டணியை கண்களால் தடவியபடி கட்டிடத்துக்கு முன்னால் நின்றிருந்தான் மதன். மதுமிதாவைக் கண்டதும் எதிர் திசையில் போர்க் குதிரை வேகத்துடன் நடந்தான் இளைஞன் ஒருவன். சிவப்பாய்-உயரமாய்-அழகாய் இருந்தான்.



காமம் என்பது
உடற்புணர்ச்சி
காதல் என்பது
உள்ளப் புணர்ச்சி

*- பேராசிரியர் பா. வளன் அரசு*

'ஆரிகேமி' கண்காட்சி என்று எழுதியிருந்த துணி பேனர் காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது. வாசலில் நின்று கொண்டிருந்த மதனின் பார்வை மதுமிதாவின் முகத்தையே குறி வைத்திருந்தது. மதுமிதாவின் கூட்டணி வாசலை நெருங்கியதும் வாய் திறந்தான்.

"மது...மிதா... நீயும் சந்திரனும், ஒரு அஞ்சி கிலோ கடலை உடைச்சிருப்பீங்களா..?"

"தெரிஞ்சிக்கணும்னா பூவரசு மரத்தடியில போயி கடலை தோலை பொறுக்கிப் பாரு"

- பதில் நிர்மலாவிடமிருந்து வந்தது. மதனின் முகம் கோபத்தில் சிவந்தது. அதைச் சிறிதும் பொருட் படுத்தாமல் மதுமிதாவின் கையை பிடித்து இழுத்துக் கொண்டு உள்ளே நுழைந்தாள். சுவரோரமாய் வரிசை யாய் டேபிள்கள் அடுக்கப்பட்டிருந்தன.

டேபிள் தோறும் அழகழகாய் காகித சிற்பங்கள். தரை இறங்கி நிற்கும் ராணுவ விமானம், தலையில் விசிறியுடன் ஹெலிகாப்டர்கள், ஓடும் விலங்குகள், பறக்கும் பறவைகள், கட்டிடங்கள் என்று தனித்தனியாய் டேபிள்களில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

ஒரு டேபிளில் சினிமா ஷூட்டிங் நடக்கும் சூழல் சித்தரிக்கப்பட்டிருந்தது, காகித சிற்பங்களாய். மாணவி கள் வியந்து வியந்து பாராட்டினர் ஆரிகேமி என்ற அந்த காகிதக் கலையை. ஓரிடத்தில் மட்டும் இருபது முப்பது மாணவிகள் கும்பலாய் நின்று கொண்டிருந்தார்கள்.

அந்த இடத்தை நோக்கி நகர்ந்தாள் மதுமிதா.

இரண்டு மாணவிகளை விலக்கி எட்டிப் பார்த் தாள். கணித பேராசிரியர் நின்று கொண்டிருந்தார். அவர் அருகில் பத்து வயது சிறுமி நின்று கொண்டிருந்தாள்.

"ஆரிகேமி என்ற இந்த ஜப்பானியக் கலை ஆயிரம் வருடங்கள் பழமையானது. இதை வெறுமனே காகிதக் கலை என்பதை விட காகித சிற்பக் கலை என்பதே பொருந் தும். இங்கே காட்சிக்கு வைச்சிருக்கிறது. ஒரு டீம் வொர்க்ன்னு நினைச்சிருப்பீங்க... உண்மையிலேயே இதையெல்லாம் வடிவமைத்தது இந்த பத்து வயது சிறுமிதான்..."



பேராசிரியர் சொன்ன செய்தி மிகுந்த ஆச்சரி யத்தை கொடுத்தது. அத்தனை கண்களும் அந்த சிறுமியை மொய்த்துக் கொண்டன. மதுமிதாவின் கண்கள் சிறுமி யின் முன்னாலிருந்த டேபிளை நோக்கி நகர்ந்தது. டேபிளில் திமிறும் போர்க்குதிரை ஒன்று நின்று கொண் டிருந்தது. உயிருள்ள குட்டிக் குதிரை போல இருந்தது அந்த காகித குதிரை. உடம்பு முழுவதும் வெள்ளை வெளேர் நிறத்தில் இருந்தது. கண்கள் பின்னால் தாவியது. குதிரையின் வாலும் வெண்மையாகவே இருந்தது. அந்த குதிரையை விலைக்கு வாங்கி விட வேண்டும் என்ற எண்ணம் மதுமிதாவுக்கு வந்திருந்தது.

"நிர்மலா... அந்த குதிரையை வாங்க வேண்டும்."

"அது தங்க வால் குதிரை இல்லையடி... வெறும் வெள்ளை வால் குதிரை."

"ஏய் கழுதை. குதிரையின் விலையை கேள்,"

"கேட்கிறேன் இளவரசி. குதிரை என்ன விலை..?"

திமிறும் போர்க் குதிரையைச் சுட்டிக் காட்டிக் கேட்டாள் நிர்மலா.

அந்த சிறுமி ஏறிட்டுப் பார்த்துப் புன்னகையுடன் பதில் சொன்னாள்.

"முந்நூறு ரூபாய். ஏற்கனவே இந்த குதிரைக்கு ஒருவர் பணம் தந்து விட்டார்."

"அந்த மாணவர் பெயரை குறித்து வைத்திருக்கி றீர்களா?"

- பதட்டமாய் கேள்வி வந்தது மதுமிதாவிட மிருந்து,

"பணத்தை தந்து விட்டு வகுப்புகள் முடிந்ததும் வந்து குதிரையை பெற்றுக் கொள்வதாகச் சொல்லி விட்டுப் போய்விட்டார். பெயரைக் கேட்டேன். சொல்ல மறுத்து விட்டார்"

"அவன்தான்... அவன்தான்... அவனேதான்"

— மதுமிதாவின் உதடுகள் முணுமுணுத்தன.

"அவன் பெயர் உனக்கெதற்கு...?"

— கேள்வி வந்தது நிர்மலாவிடமிருநது.

"முட்டாள்... இந்த காகித குதிரையை வாங்கியவன் தான் தங்கவால் குதிரை. நெருங்கி விட்டோம். தொட்டு விடும் தூரம் தான்... பெயர் மட்டும் தெரிந்தால்..."

"பெயர் எதற்கு... அந்த மாணவர் எப்படி இருந் தார்...?"

— அந்தச் சிறுமியைத் தனியே அழைத்துக் கேட்டாள் நிர்மலா.

"சிவப்பாய்... உயரமாய்... அழகாய் இருந்தார்."

"அஜீத் மாதிரின்னு சொல்லு."

"ஏய் நிர்மலா... காலேஜ்ல ஐம்பது அஜீத் இருப்பான். ஒவ்வொரு ஆளா நீ தான் தங்கவால் குதிரையான்னு போயி கேட்க முடியுமா... வேற ஐடியா சொல்லு."

இருவரும் மெல்ல நழுவி கட்டிடத்தை விட்டு வெளியே வந்தார்கள்.

"மதுமிதா... எப்படியும் குதிரையை வாங்கிறதுக்கு அவன் இங்க வந்துதான் ஆகணும். வாசல்ல காத்திருப் போம். வந்ததும் ஒரே அமுக்கா அமுக்கிடுவோம்"



"என்னை பார்த்தா நிச்சயம் வரமாட்டான், இரண்டு பேரும் தூரத்திலயிருந்தே கண்காணிப்போம். சிவப்பாய், உயரமாய், அழகா யார் இந்த அரங்கத்துக்குள்ள நுழைந்தாலும் ஓடிப்போய் பிடிச்சிடுவோம்."

அந்த இடத்திலிருந்து கிட்டத்தட்ட இருநூறு அடி தூரத்திலிருந்த யூகலிப்டஸ் மரத்தில் சரிந்து நின்று கொண்டிருந்த சிவப்பு இளைஞன் தனக்குள் சிரித்துக் கொண்டான். அவன் கண்கள் மதுமிதாவின் வாயசைப்பு, கையசைப்பை ரசித்துக் கொண்டிருந்தன.

மதிய வகுப்புகள் தொடங்குவதற்கான மணி ஒலித்தது.

மதுமிதாவும் நிர்மலாவும் அரைமனதுடன் வகுப் பறையை நோக்கி நடக்க ஆரம்பித்தனர்.

அன்று வழக்கத்துக்கு மாறாய் வகுப்பறை அமைதி யாய் இருந்தது.

உள்ளே நுழைந்த ஜுவாலஜி புரொபசர் கண்ணாடி கார்த்திகேயன் உற்சாகமாய் இருந்தான். மதுமிதா வும், நிர்மலாவும் இடம் மாறி அமர்ந்திருந்தது அவனுக்கு வியப்பாய் இருந்தது.

"என்ன மதுமிதா... புதுசா முன் வரிசையில வந்து உட்கார்ந்திருக்கே...?"

"பின்னாலயிருந்தா உங்க அழகு முகத்தை தெளிவா பார்க்க முடியல்ல சார். அதனால முன்னால வந்துட் டோம் சார்"

- நிர்மலா பதில் சொன்னாள் பவ்யமாய் எழுந்து.

மதுமிதாவே தன்னிடம் பேசியது போல் சந்தோஷப் பட்டான் கார்த்திகேயன்.

“இன்று மகிழ்ச்சியின் நாள். இன்று நான் பாடம் நடத்தப் போவதில்லை. படம் வரையச் சொல்லப் போகிறேன். சந்தோஷம் தானே..”

மாணவர்கள் உற்சாகமாய் ‘ஓ’ போட்டனர்.

‘இரு.. இரு.. உன் மகிழ்ச்சியை மண்ணோடு மண் ஆக்குகிறேன்”

- சந்திரனின் முகம் நிறம் மாறிப் போயிருந்தது. உதடுகள் துடித்தன கோபத்தில். நிர்மலா, மதுமிதாவின் கண்கள் ‘ஆரிகேமி’ கண்காட்சி நடக்கும் கட்டிடத்தின் முகப்பு வாயிலையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தன அந்த சிவப்பு இளைஞன் வரவுக்காய்.

“மதுமிதா.. வேப்பமரத்தை பார்த்துக்கிட்டிருந்தா எப்பிடி... நான் சொன்னது உன் காதில விழுந்ததா இல்லையா.. உனக்கு சம்மதம் தானே..?”

- மூக்கு கண்ணாடிக்கு பின்னாலிருந்து காதலுடன் பார்த்தன கார்த்திகேயன் கண்கள்.

“எனக்கு சம்மதமில்லை”

- மதுமிதாவிடமிருந்து பதில் வந்தது அனிச்சை செயலாய்.

பேராசிரியர் கார்த்திகேயன் முகம் அதிர்ச்சி வாங்கியிருந்தது.

“வரையறோம் சார். மதுமிதா உங்ககிட்ட விளையாட்றா”



- மதுமிதாவின் தொடையில் கிள்ளி வைத்தாள் நிர்மலா.

‘மதுமிதா என்னோடு விளையாடுகிறாள்’ வார்த்தைகள் தந்த சந்தோஷத்தில் படம் வரையும் காகிதங்களை வரிசை பிறழாமல் விநியோகம் செய்தான்.

“உங்களிடம் தந்திருக்கும் காகிதங்களில் யாரும் பெயர் எழுதக் கூடாது. எண்கள் குறித்திருக்கிறேன். இன்னொரு கல்லூரி பேராசிரியர் தான் மார்க் போடப் போகிறார். எதாவது ஒரு விலங்கு படத்தை வரையலாம்.

ஜுவாலஜி புரொபசரின் வேண்டுகோளுக்கு இணங்க மாணவர்களும், மாணவிகளும் காகிதங்களில் புறாக்களை பறக்க விட்டனர். புலிகளை உறும விட்டனர். நீர் யானைகளை நீந்த விட்டனர். வானவில் வர்ணங்களில் பறவைகளும், மிருகங்களும் மினுக்கின. மதுமிதாவும் நிர்மலாவும் மீன் படம் வரைந்தனர். பார்வை மட்டும் ஒற்றைக்கால் ஊன்றி காத்திருக்கும் கொக்காய் கண்காட்சி வாசலில் தவம் கிடந்தது.

“ஆச்சர்யமாயிருக்குது. மதன் அதிசயமாக வகுப்புக்கு வந்திருக்கே... பேப்பரை பார்த்து வரை. என் முகத்தைப் பார்த்து பார்த்து என்ன வரையறே..?”

- மூக்குக் கண்ணாடியை நடுவிரலால் தூக்கிக் கொண்டு கேள்வி கேட்டான் கார்த்திகேயன்.

பவ்யமாய் எழுந்து, மெலிதான குரலில் பதில் சொன்னான்.

“குரங்கு ஓவியம் சார்.”

வகுப்பறை மொத்தமும் ஓவென்று கூச்சலிட்டு சிரித்தது.

திடுக்கிட்டு திரும்பிப் பார்த்த மதுமிதாவுக்கு வியப்பாய் இருந்தது. 'ஏன் சிரிக்கிறார்கள்?' கார்த்திகேயன் முகம் கோபத்தில் சிவந்து போயிற்று. அவசரமாய் மறைத்துக் கொண்டான்.

"உங்களுக்கு நான் தந்திருந்த நேரம் முடிஞ்சி போச்சி. வரைந்தது போதும். எல்லோரும் கொண்டு வாங்க... ம்... சீக்கிரம்..."

- வரைந்த ஓவியங்களை மாணவர்களும், மாணவிகளும் தனித்தனியாய் கொண்டு போய் கொடுத்தனர். மதுமிதா வரைந்ததை பிடுங்கி, தனது ஓவியத்துடன் கொண்டு போய் கொடுத்தாள் நிர்மலா. காகிதத்தை அடுக்கிக் கொண்டே பேச ஆரம்பித்தான் கார்த்திகேயன்.

"இன்னொரு சந்தோஷ செய்தி... நாளை மறுநாள் நாம் டூர் போகப் போகிறோம்."

"எங்கே சார்...?" "எதுக்கு சார் திடீர்னு டூர்...?"

"மினி டூர். கல்வி சுற்றுலா.. கூந்தகுளம் பறவைகள் சரணாலயத்துக்கு நாம போறோம். மதிய உணவு வடை பாயாசத்துடன் சாப்பாடு கூந்தகுளத்தில்."

"சம்மதம்னு சொல்றவங்க சாருக்கு ஒரு 'ஓ' போடுங்க"

- ஓவென்று மகிழ்ச்சியில் சப்தம் எழுப்பினர் மாணவர்கள்.

வகுப்பு நேரம் முடிந்ததற்கான மணி ஒலித்தது.

மதுமிதா அமைதியாயிருப்பதைக் கண்டு அருகில் சென்றான் கார்த்திகேயன்.

"நீ பதிலே சொல்லல."



"வர இஷ்டமில்லைன்னு அர்த்தம்."

- முகத்தில் அடித்தாற்போல் பதில் சொல்லி விட்டு புத்தகங்களுடன் வெளியேறினாள் மதுமிதா. விழுந்தடித்துக் கொண்டு பின்னால் ஓடினாள் நிர்மலா.

ஒரு வேப்பமரத்தடியில் நின்று கண்காட்சி வாசலை கண்காணித்தார்கள்.

"மதுமிதா!"

-அழைப்பில் திரும்பினாள்.

கையில் காகித அடுக்குடன் ஜுவாலஜி புரொபசர் கார்த்திகேயன். கண்களில் வருத்தம் தெரிந்தது.

"எதுக்கு சார் தொந்தரவு பண்றீங்க...?"

- என்றவள் பார்வையில் அவன் கையிலிருந்த காகிதம் பட்டது. அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஓவிய காகிதங்களில் வெளியே தெரிந்த முதல் காகிதம் மதுமிதாவுக்கு அதிர்ச்சி தந்தது. இன்ப அதிர்ச்சி. விரல்கள் மெலிதாக நடுங்கியது. வாய் குழறியது.

"அ... அதை... கொடுங்க சார்"

- பிடுங்காத குறையாக முதல் காகிதத்தை கையில் வாங்கினாள்.

அந்த ஓவியத்தில் 'பதினான்கு' என்ற எண் குறிக்கப்பட்டிருந்தது. அந்த ஓவியம்... அந்த ஓவியம்... ஓடுகிற குதிரை... நீல வண்ணத்து குதிரை... வால் மட்டும் தங்க நிறமாய்...

"இதை வரைஞ்சது யாரு சார்..."

"சொல்லக் கூடாது மதுமிதா."

"ப்ளீஸ்... சொல்லுங்க சார்."

- குரல் கெஞ்சியது.

மறுத்தான் குறுக்கே தலையசைத்து.

"மதுமிதாவுக்கு சொல்ல மாட்டீங்களா.. குதிரையை வரைஞ்சது யாரு சார்..?"

- இந்த முறை குரல் கொஞ்சியது.

கார்த்திகேயன் இதயம் அவசரமாய் குளிரியது.

மனம் இரங்கியது.

"சொல்வேன். கண்டிப்பா சொல்வேன். ஆனால் இந்த நேரம் இல்லை. கூந்தகுளம் வா... அங்க வைச்சி சொல்றேன்... ம் சரியா..."

- காகிதத்தை பிடுங்கிக் கொண்டு உற்சாகமாய் நடந்தான் கார்த்திகேயன்.

'மதுமிதா... ஏய்... மதுமிதா காதல் கும்மாளமா போடுகிறாய்.. இரு.. இரு.. உன்னை அழவைக்கிறேன்.'

- கோபத்தில் முஷ்டி மடக்கி, சாய்ந்து நின்ற வேப்பமரத்தைக் குத்தினான் சந்திரன்.

ஒரே நேர்கோட்டில் கார்த்திகேயன். மதுமிதா, சந்திரன் மூவரையும் பார்த்துக் கொண்டு நின்ற மதனின் உதடுகளில் புன்னகையொன்று நெளிந்தது பாம்பாய்.

யாரையும் கவனிக்காமல் 'ஆரிகேமி' கண்காட்சி வாசலை நோக்கி ஓடினார்கள் நிர்மலாவும், மதுமிதாவும். அவர்கள் முகத்தில் இரைதேடும் வௌவாலின் வேகம்.

"நெருங்கி விட்டோம். நம் வகுப்பில் தான் இருக்கிறான்."



"நிச்சயம் கூந்தகுளம் வருவான். மடக்கி விடலாம்."

"மதுமிதாவுக்கு காதலன் கிடைத்து விட்டான். அழகான பெயர் தங்கவால் குதிரை."

"நீ சரியென்று சொல். உனக்கும் ஒரு காதலனை கொண்டு வந்து விடலாம். மஞ்சள்வால் கழுதை!"

அதற்குள் கண்காட்சி அரங்கத்துக்குள் நுழைந்திருந்தார்கள். அந்தச் சிறுமியும், சில மாணவிகளும் மட்டுமே நின்று கொண்டிருந்தார்கள். குறிப்பிட்ட டேபிளை நோக்கி வேக நடை நடந்தார்கள்.

அங்கே —

குதிரையைக் காணவில்லை!

அந்தக் காகிதக் குதிரை இருந்த இடம் வெறுமையாய் இருந்தது.




காதலென்ற
மூன்றெழுத்து - பல
கவிதைக்குத்
தலையெழுத்து
ஊளைச் சதைக்குள்ளே
உவமைகள் தேடும்
ஒப்பற்ற மனங்களுக்கோ
உயிர் எழுத்து

*- கவிஞர் பிறைசூடன்*

காகித குதிரையை காணாமல் திகைத்துப் போனார்கள் மதுமிதாவும் நிர்மலாவும். அது நின்று கொண்டிருந்த இடம் வெறுமையாய் இருந்தது. இதயங்கள் வேகமாகியிருந்தன.

'எங்கே போயிற்று காகித குதிரை.. அந்த குதிரையை வாங்க அவன் வரவே யில்லையே..'



எதிரில் அந்தச் சிறுமி புன்னகையுடன் நின்று கொண்டிருந்தாள்.

அவள் கையில் வெள்ளை நிறத்தில் கவர் ஒன்று இருந்தது.

"குதிரையை... குதிரையை யார் வாங்கிப் போனார்கள்..?"

- மதுமிதாவிடமிருந்து பதட்டமாய் வந்தது கேள்வி.

"கறுப்பாய், குள்ளமாய், ஒருவர் வந்து வாங்கிப் போனார்.."

"சிவப்பாய்.. உயரமாய்.. குதிரையை அழகான பெண் ஒருத்தி தேடி வருவாள். அவளிடம் இந்த கடிதத்தை கொடுத்து விடு என்று என்னிடம் தந்தார்கள்"

— அந்த சிறுமி கையிலிருந்த வெள்ளை கவரை மதுமிதா கையில் கொடுத்தாள். அவசரமாய் அந்த இடத்திலேயே கவரைக் கிழித்துக் காகிதத்தை உருவினாள். மடிக்கப்பட்டிருந்த காகிதத்தின் உறக்கம் தெளித்தாள்.

நீல எழுத்துக்கள் கேலியாய் சிரிப்பது போலிருந்தது.

'என் குஞ்சு குட்டி மதுமிதா.. ஏன் ஓடுகிறாய்.. ஆடுகிறாய்... துடிக்கிறாய்... நாம் சந்திக்கும் நேரம் நெருங்கி விட்டது... இனி நாம் சந்தித்துதான் ஆக வேண்டும். உடனே புறப்பட்டு வா.. உன் வீட்டில்.. உன் அறையில்.. உனக்காக காத்திருக்கிறேன்.

- தங்க வால் குதிரை'

அவள் கையிலிருந்த காகிதத்தை வாங்கிப் படித்தாள் நிர்மலா.

"என்னடி... உனக்கு முன்னால உன் வீட்ல போய் இருப்பேன்று எழுதியிருக்கான். இவன் போற போக்கைப் பார்த்தா எதுவும் செய்வான்னுதான் தோணுது."

"செய்வான்... செய்வான்... வாலை ஒட்ட நறுக்கிட்றேன்."

"தங்க வாலைத்தானே..?"

"பேசாமல் வா.. எனக்கு பயமாய் இருக்கிறது"

- நிர்மலா கையிலிருந்த காகிதத்தை பிடுங்கிக் கொண்டு பஸ் ஸ்டாப்பை நோக்கி நடந்தாள் மதுமிதா வேக குதிரையாய். பின்னால் ஓடினாள் நிர்மலா.

**வா**சலில் கால் வைத்ததும் நாற்காலியில் அமர்ந் திருந்த அப்பா தெரிந்தார். எதிரில் இரண்டு பேர் நின்று கொண்டிருந்தனர். இருவரில் ஒருவர் நேற்று கறுப்பு அம்பாசிடரில் வந்து அப்பாவை அழைத்துச் சென்ற கறுப்பு இளைஞன். இன்னொருவருக்கு ஐம்பது வயது இருக்கும். கையில் கட்டு போடப்பட்டிருந்தது.

அப்பாவின் வாயிலிருந்து வார்த்தைகள் கோப மாய் வந்து விழுந்து கொண்டிருந்தன. அந்த வார்த்தை களோ மதுமிதாவின் இதயத்தை சுட்டன.

"- என்னய்யா காதல்.. எழவு காதல்.. கதை எழுதுற கூறுகெட்ட பயல்க எழுதுறதை வாசிச்சிட்டு இந்த ஆக்கங்கெட்ட மூதிகள் காதல் காதல்னு அலையுது.. நான் சொல்றேன், காதலுக்கு ஒரே ஒரு அர்த்தம் தான்... காதல்னா கோட்டிக்காரத்தனம்"

"ஐயா..."



"என்னய்யா ஐயா.. பெத்த தகப்பனை அரிவாளை எடுத்து வெட்டியிருக்கா... அவளை கழுத்தை நெரிச்சி கொல்றதை விட்டுவிட்டு, அவளை காதலிச்ச பையனுக்கே கல்யாணம் பண்ணி வைக்கப் போறேன்னு கூசாம என்கிட்ட வந்து சொல்லுதீரு.."

- அப்பாவின் வாயிலிருந்து வார்த்தைகள் வெடித்துச் சிதற, எதிரில் நின்று கொண்டிருந்த கையில் கட்டுப் போட்டிருந்த மனிதரோ தலை குனிந்து மௌனமாய்..

மதுமிதா விடுவிடுவென்று நடந்து வீட்டுக்குள் நுழைந்தாள்.

காபி டம்ளர்களுடன் எதிரில் வந்தாள் அம்மா.

"என்ன மதுக்குட்டி... முகமெல்லாம் வாடிக்கிடக் குது..?"

- பதில் எதுவும் பேசாமல் ஹாலில் கிடந்த சோபாவில் போய் அமர்ந்தாள்.

"காதல் என்ன காதல்.. கத்திரிக்காய்.. நாலு போடு போட்டா.."

அப்பாவின் குரல் பாதியில் அறுந்தது. ஏதோ பேசுகிற மாதிரி கேட்டது. எனக்கு முன்னால் வந்து காத்திருப்பேன் என்று சொன்னானே இந்த தங்கவால் குதிரை. என் வீட்டில்.. அதுவும் என் அறையில்.. அத்தனை தைரியமா உனக்கு.. இங்கே வந்து பார் என் அப்பாவை.. காதல் என்று வாய் திறந்தாலே கொன்று போட்டு விடுவார் போலிருக்கிறது... ஏ முட்டாள் குதிரையே... உன்னால் காதலிக்க ஆரம்பித்து விட்டேன்.

முகம் தெரியாமலே காதல் வலையில் விழுந்து விட்டேன். வலை கிழித்து வெளியில் வர என்

இதயத்துக்கு பலம் இல்லை- வருவேன் என்ற நீ சீக்கிரமே வந்து விடு.'

அம்மா திரும்பி வந்தாள் காலி டம்ளர்களுடன். முகத்தில் அமைதி தெரிந்தது.

வெளியே அப்பா கோபமாய் துண்டை உதறுவது கேட்டது. அப்பா துண்டை உதறினால் கோபமாய் இருக்கிறார் என்று அர்த்தம். எக்கேடும் கெட்டுப்போ என்றும் அர்த்தம்.

"என்ன ஹால்ல உட்கார்ந்திட்டே- உன் ரூம்புக்கு போகலியா-"

"பூட்டிக்கிடக்குதும்மா"

— சிணுங்கினாள் மதுமிதா.

அடுத்த இரண்டாவது நிமிடம் சுடச்சுட மதுமிதா வுக்கு காபி கொண்டு வந்தாள் அம்மா.

"வெளியே என்னம்மா நடக்குது- அப்பா காதல் கீதல்னு சத்தம் போட்றாரு. அப்பா உனக்குத் தெரியாம யாரையாவது காதலிக்க ஆரம்பிச்சிட்டாரா?"

"கழுதை- குட்டி கழுதை"

- மதுமிதாவின் காதை பிடித்து திருகினாள் அம்மா.

"ஆ- வலிக்குதும்மா-"

"அப்பா நேத்து ராத்திரி முழுசும் வராம இருந்தது இவங்க கதைக்குத்தான். அப்பாவை மகள் வெட்டின கதை. அப்பா- அதுதான் வெட்டுப்பட்ட அந்த தகப்பனார் நம்ம கட்சிக்காரரர். நீ வரும்போது பார்த்திருப்பியே... கையில கட்டு போட்டுக்கிட்டு நின்னுகிட்டிருந்தாரே



அவர்தான். அவரோட மகள் யாரோ ஒரு பையனை காதலிக்கிறாளாம். திட்டினதுக்கு தகப்பனை அரிவாளால வெட்டிட்டாளாம். வெட்டுப்பட்ட தகப்பன் தன் மகளை அவ காதலனுக்கே கல்யாணம் செய்து வைச்சிடலாம்னு முடிவுக்கு வந்திட்டார்- என்ன இருந்தாலும் பொண்ணு இல்லியா-"

"அப்பாவுக்கு அது பிடிக்கல, அப்பிடித்தானே-"

"உங்க அப்பாவுக்குத்தான் காதலே பிடிக்காதே-"

"என்ன... தாயும் மகளும் என்னை கெடுத்து பேசுறீங்களா-"

-அப்பாவின் குரலில் இருவரும் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தார்கள் பயத்துடன். இருவரையும் கடந்து தோட்டத்து வாசலை நோக்கி நடந்தார் பரமசிவம் புன்னகையுடன்.

"அம்மா- அந்த பொண்ணு காதலுக்காக அப்பாவை வெட்னது தப்புதானே?"

"வெட்னது சரிதான்."

"என்னம்மா அப்பிடிச் சொல்றே-?"

"அந்த அப்பா பேசின வார்த்தை அப்பிடி-"

"என்னம்மா பேசினாரு-?"

"உனக்கு படுத்துக்கிறதுக்கு ஆம்பிளை வேணும்னா என்கிட்ட சொல்ல வேண்டியதுதானே- எதுக்கு காதல்னு கேட்டாராம்- ஆமா- உனக்கெதுக்கு இந்த கதை- போயி முகத்தை கழுவிட்டு, பேசாம உட்கார்ந்து பாடத்தை படி, ம்- இந்தா சாவி."

மதுமிதா சோர்வுடன் எழுந்து போய் அறையைத் திறந்தாள்.

கண்களைத் தாக்கியது அதிர்ச்சி.

படுக்கையின் மேல் நின்று கொண்டிருந்தது குதிரை.

காகிதக் குதிரை.

கல்லூரியில் ஆரிகேமி கண்காட்சியில் பார்த்த அதே வெள்ளைக் குதிரை.

வால் மட்டும் தங்கமாய் நிற மாற்றம் செய்யப் பட்டிருந்தது.

ஆம். இந்த நிமிடம் தங்கவால் குதிரை.

அந்த திருட்டு மாயக் குதிரை தன்னை நோக்கி கனைப்பது காதில் விழுந்தது.

மயக்கம் வரும் போலிருந்தது.

பாதித் திறந்திருந்த கதவைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

ஓடிப்போய் அந்தக் குதிரையின் காலை முறித்து விட வேண்டும் என்று ஆத்திரம் வந்தது.

“மதுமிதா.. நேத்து மெத்தை விரிப்பு கொண்டு வந்த சின்ன பொண்ணு.. இன்னைக்கும் வந்திச்சி... உன்கிட்ட தரச்சொல்லி பொம்மைக் குதிரை ஒண்ணு தந்துட்டு போச்சு... உன் கட்டில்ல வைச்சிருக்கேன்... பாத்தியா... என்னடி பதிலைக் காணோம்..?”

“பார்த்தேன்.. பார்த்தேன்”

—என்றாள் முணுமுணுப்பாய்.



“மதுமிதா இந்த குதிரைக்கும் பாரு.. வால் தங்க நிறம் தான்”

- அம்மா சமையலறையில் இருந்து பேசிக் கொண்டிருந்தாள்.

மதுமிதா படுக்கையில் போய் விழுந்தாள்.

அதிர்ச்சியில் காகிதக் குதிரை துள்ளிக் குதித்துக் குப்புற விழுந்தது.

‘என் காதல் குதிரையே.. உன்னை மண் கவ்வ வைக்க வேண்டும்... உன் மீசையிலும் மண் ஒட்ட வேண்டும்.. உன் தங்கவால் என் கைக்குள் இருக்க வேண்டும்..’

புரண்டு புரண்டு படுத்தாள். மனதுக்குள் சந்தோஷம் வந்திருந்தது.

தங்கவால் குதிரை துரத்தி துரத்திக் காதலித்தது.

முகம் கழுவ தோட்டத்துக்கு போனாள். அங்கேயும் வந்தது. சமையலறைக்குள் நுழைந்து அம்மாவுக்கு உதவினாள். விடாமல் அங்கேயும் வந்தது. குளிர்காற்றுக்கு ஆசைப்பட்டு மொட்டை மாடிக்குப் போனாள். அங்கேயும் துரத்தி வந்தது விடாமல்.

உண்ணும் உணவில்.. உடுத்தும் ஆடையில்.. உறங்கும் படுக்கையில்... எங்கும்.. எதிலும்.. தங்கவால் குதிரைகள்.

பிறர் கண்களுக்குத் தெரியாமல் மதுமிதாவை துரத்தியது அந்தக் காதல் குதிரை.

‘நீ என் வகுப்பு தோழன். உயரமாய், அழகாய், சிவப்பாய், இருக்கிறாயாம்... நிச்சயம் உன்னை கண்டுபிடிப் பேன்... தங்கவால் குதிரை ஓவியம் வரைந்த உன்னை

விலங்கியல் விரிவுரையாளர் கூந்தகுளத்தில் காட்டிக் கொடுப்பார். நீ தப்ப முடியாது.. உன்னை பிடித்து காதல் சிறையில் பூட்டி வைப்பேன்.'

இரவு வந்தது. தங்கவால் குதிரையோடு போட்டி போட்டுக் கொண்டு உறக்கம் வந்தது. அதை தொடர்ந்து கனவும் வந்தது. கனவில்... துண்டை உதறிக் கொண்டு அப்பா வந்தார். 'காதல் கோட்டிக்காரத்தனம்... காதல் கோட்டிக்காரத்தனம்' என்று உரக்க சத்தமிட்டார். தங்கவால் குதிரையோ கனைத்து சிரித்தது. வாய்விட்டு பேசவும் செய்தது. 'ஆகா... காதல் எத்தனை அழகான கோட்டிக்காரத்தனம்!' மதுமிதா தூங்கினாள். ஒரு அழகு தேவதை போலத் தூங்கினாள். தூக்கத்தில் கனவு மிதக்க மிதக்க..

அடுத்த நாள் விடிந்த போது எழுந்திருக்கக் கூடாது என்ற திட்டத்துடனே படுத்திருந்தாள். அம்மா வந்து நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். வயிற்று வலி என்று பொய் சொன்னாள். அப்பா வந்து கவலையுடன் கேட்டார். தலைவலி என்றாள் அவசரமாய்.

அன்று கல்லூரிக்குப் போகக் கூடாது என்ற முடிவுடன் இருந்தாள்.

பக்கத்து வீட்டு சந்திரனோ 'யாரை நீ காதலிக்கிறாய் என்னிடம் சொல்' என்று கேட்டு விட வேண்டும் என்ற முடிவோடு கல்லூரிக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தான். மதுமிதா யாரைக் காதலிக்கிறாள் என்பதை இன்று எப்படியும் கண்டுபிடித்து விட வேண்டும் என்ற ஆர்வத்தில் கல்லூரிக்கு முன்னதாக வந்து காத்திருந்தான் மதன்.



கண்களில் கவலையுடன் கார்த்திகேயன் சுற்றித் திரிந்தார் மதுமிதாவைக் காணாததால்.

மதுமிதாவை சுமந்து வரும் பஸ்ஸுக்காக வழி மேல் விழி வைத்து கால் வலிக்க யூகலிப்டஸ் மரத்தடியில் நின்றிருந்தான் உயர-சிவப்பு-அழகு இளைஞன் — 'தங்கவால் குதிரை' என்று புனை பெயர் சூட்டிக் கொண்டிருக்கும் காதல் பறவை.

மதுமிதாவோ காலை மணி ஒன்பதைக் கடந்தும் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தாள் கள்ளத்தனத்துடன். உதடுகளில் புன்னகை.

'தினமும் உன்னை நான் தேடி தேடி அலைய வேண்டும்.. நீ அதை பார்த்து ரசிப்பாய்.. அப்படித் தானே.. இன்று என் முறை.. தினமும் ரகசியமாய் எங்கிருந்தாவது என்னை பார்த்துக் கொண்டு தானே.. இருக்கிறாய். இன்று என்னை பார்க்க உன் விழி ஏங்க வேண்டும்.. எங்கே.. எங்கே என்று தேடி சோர்ந்து போகட்டும்.. தங்கவால் குதிரை.. இன்று ஒரு நாளாவது மதுமிதா முகம் பார்க்காமல் பட்டினி கிட..'

தலையணையைத் தூக்கிச் சுவரில் வீசினாள். அம்மா ஓடிவந்தாள் சத்தம் கேட்டு.

அன்று வழக்கத்தை விட அழகாய் இருந்தாள் மதுமிதா.

இலவச இணைப்பு போல நிர்மலா.

மூன்று வேன்கள், மூன்று வண்ணத்தில் வரிசையாக நின்றன.

கல்லூரிப் பெயர் சொல்லும் துணி பேனர்கள் வேன்களின் முதுகில் படபடத்துக் கொண்டிருந்தன.

'தங்கவால் குதிரை யாராயிருக்கும்'

- முகங்களில் விலாசம் தேடிக் கொண்டிருந்தன மதுமிதாவின் கண்கள்.

நிர்மலாவின் கண்கள் அழகான இளைஞர்களுக்கு பின்னால் ஓடி ஓடி களைத்துப் போயிருந்தன.

விலங்கியல் விரிவுரையாளன் கார்த்திகேயன் மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தான்.

"ம்... எல்லோரும் வந்தாச்சா... போகலாமா...?"

- வேன் டிரைவர் ஒருவனிடமிருந்து கேள்வி வந்தது.

'இன்னும் தங்கவால் குதிரை வரவில்லை'

- என்று கத்த வேண்டும் போலிருந்தது மதுமிதாவுக்கு.

மாணவர்களும் மாணவிகளும் உற்சாகமாய் வேன்களில் ஏறிக் கொண்டார்கள். அரை மனதுடன் நிர்மலாவும் மதுமிதாவும் ஏறிக் கொண்டனர். வேனில் அவர்கள் முதுகுக்கு முன்னால் ஏறி அமர்ந்தான் டிரைவர் ஆசனத்தில் அந்த அழகு இளைஞன். சிவப்பாய்-உயரமாய் இருந்தான்!




கவிஞர்களின்-
கூடாரம். சுவைஞர்களின்
போதை வஸ்து.
இளைஞர்களின்-
உயிர் சுவாசம்.
கலைஞர்களின்-
கைவாள்.
வலைஞர்களின்-
ஏலோ ஐலசா...
அறிஞர்களின்-
இரவு உளறல்.
ஒரே வார்த்தையில்
காதல்.

- யாரோ

கூந்தகுளம் பறவைகள் சரணாலயத்தை மாணவர்கள், மாணவிகளை சுமந்து சென்ற மூன்று வேன்களும்

தொட்ட போது சூரியன் சூடாகியிருந்தான். வேன்களி லிருந்து உற்சாகமாய் குதித்து இறங்கிய இளைஞர்கள் அதே வேகத்தில் குளத்தங்கரையில் ஓடிப்போய் ஏறி னார்கள். மாணவிகளும் பின் தொடர்ந்தனர். அவர் களிடம் சந்தோஷ கூச்சல். அந்த சத்தத்தை கேட்டு குளத்தங்கரை மரங்களிலிருந்து சில பறவைகள் சிற கசைத்து பறந்து சென்றன. மதுமிதாவும் நிர்மலாவும் இறங்கிய இடத்திலேயே நின்று கொண்டிருந்தனர் அசையாமல்.

இருவருடைய கண்களும், குளத்தங்கரையில் நின்று கொண்டிருந்த மாணவர்களில் தங்கவால் குதிரை யாராயிருக்கும் என்ற ஆராய்ச்சியில் மூழ்கி கிடந்தன. அவர்கள் முதுகுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த வேனின் டிரைவர் இருக்கையில் அமர்ந்திருந்த சிவப்பு இளைஞன் முகத்தில் குறும்புப் புன்னகை. மதுமிதாவைத் தேடி ஏமாந்த கார்த்திகேயன் கண்கள் திரும்பின.

“என்ன.. மதுமிதா.. அங்கேயே நின்னுக்கிட்டிருந்தா எப்பிடி.. மேல வாங்க..”

அழைப்பை மறுக்க முடியாமல் குளத்தங்கரையில் ஏறினார்கள் மதுமிதாவும், நிர்மலாவும். குளத்து நீரின் குளுமை சுமந்த காற்று முகத்தை வருடியது. பறவை களின் சத்தம் சங்கீதம் போலக் காதுகளில் விழுந்தது. அண்ணாந்து பார்த்தாள் மதுமிதா. ராணுவ விமானங் களின் அணிவகுப்பு போல பறவைகள் பறந்து சென்றன. ஒரு ஒற்றைப் பறவை இறக்கைகளை அசைக்காமல் உடலிலோ கால்களிலோ எந்தவித அசைவுமின்றி மெல்ல கீழிறங்கி, ஒரு மரத்தில் கீழிறங்கியது. அந்தக் காட்சி ஏதோ ஒரு கட்சியின் வர்ணக் கொடி காற்றில் மிதந்து,





தவழ்ந்து மரத்தில் வந்து ஒட்டிக் கொண்டது போலிருந் தது. மரங்களில் வரிசை; வரிசையாய் கூடுகள். நாம் பாடப்புத்தகங்களில் மட்டுமே பார்த்த பறவைகள் வித விதமாய்.. செங்கால்நாரை, கூலக்கடா, ஃபிளாமிங்கோ, கரண்டிவாயன், அரிவாள் மூக்கன் என்று- தன் கூடு குஞ்சு களை சுட்டெரிக்கும் வெயிலிலிருந்து காப்பதற்காக, பறவைகள் மேற்கு திசை நோக்கி உட்கார்ந்து கொண்டு இரண்டு இறக்கைகளையும் விரித்து நிழல் தந்து கொண் டிருந்தன. அந்த காட்சியழகு இருபது, முப்பது பறவைகள் ஒன்று போல் அமர்ந்து தவமிருப்பது போல் பட்டது மதுமிதாவுக்கு. குளத்தின் உள்பகுதியில் நிறைய முள் மரங்களே கண்ணில் பட்டன. குளத்து நீர் கொஞ்சம் வற்றியே காணப்பட்டது. தண்ணீர் பறவைகள் தங்கள் இஷ்டம் போல அங்கும் இங்கும் ‘தளுக்... தளுக்’ என தண்ணீரில் சப்தம் எழுப்பிக் கொண்டு திரிந்தன. “க்விஹாக்... க்விஹாக்” என்று வினோத மொழியில் தங்களுக்குள் பேசியும் கொண்டன. மதுமிதாவின் மனம் அமைதியானது. ஜுவாலஜி விரிவுரையாளன் கார்த்தி கேயன் கரையிலிருந்து இறங்கி, குளத்துக்குள் சற்றே மூக்கை நீட்டிக் கொண்டிருக்கும் நிழல் கொட்டகைக்குள் சென்றான்.

“எல்லாரும் வாங்க..”

- அந்த அழைப்பை ஏற்று, எல்லாரும் நிழல் கொட்டகைக்குக் கீழ் வந்தனர்.

மதுமிதாவின் அருகே போய் நின்று கொண்டு உற்சாகமாய் பேச ஆரம்பித்தான் கார்த்திகேயன்.

“கூந்தகுளத்திற்கு வந்திருக்கும் இந்த பறவைகள் நைஜீரியா, சைபீரியா, சுவிட்சர்லாந்து, பிலிப்பைன்ஸ்,

ஆஸ்திரேலியா, ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து வரும் வெளிநாட்டுப் பறவையாய் திரும்பிச் செல்கிறது. இந்த பறவைகள் விமானங்களை விட வேகமாய் பறக்கும் சக்தி கொண்டவை. பொதுவாக கூந்தன்குளத்திற்கு வரும் இந்த பறவைகள் தை அமாவாசைக்கு வந்து ஆடி அமாவாசைக்கு திரும்பி விடும்."

"எதுக்காக சார் வெளிநாட்டிலயிருந்து இந்த பறவைகள் கூந்தகுளத்திற்கு வரணும்...?"

— நிர்மலாவிடம் இருந்து கேள்வி வந்தது.

"நல்ல கேள்வி தான். இந்த பறவைகளின் நாடுகள் குளிர்பிரதேசம். அங்கே தன் முட்டைகளை அடை காத்து குஞ்சு பொரிக்க முடியாது. அதனால் இங்கு வந்து கூடு கட்டி முட்டையிட்டு அடை காத்து குஞ்சு பொரித்து அவை பறக்க ஆரம்பித்ததும், தன் குஞ்சுகளை அழைத்துக் கொண்டு தன் நாட்டை நோக்கி பறக்க ஆரம்பித்து விடும். மைக்ரேஷன் எனப்படும் இடம் பெயர்தல்..."

-மதுமிதாவை பின்பக்கமாய் நெருங்க ஆரம்பித்தான் அந்த சிவப்பு இளைஞன். மூச்சிரைக்க ஓடி வந்து, அவர்கள் முன்னால் நின்றார் ஒரு நடுத்தர வயதுக்காரரர்.

"வணக்கம் சார்..." என்றார் சந்தோஷப் புன்னகையுடன்.

"வணக்கம். இவர் பேரு பால்பாண்டி. வனத்துறை ஊழியர். இவர் நூறு புத்தகங்களுக்கு சமம். அவ்வளவு விஷயங்கள் இவரிடம் இருக்குது. இங்கு வரும் பறவைகளின் பெயர்களை சொல்லுங்கள் பால்பாண்டி, மாணவர்கள் தெரிந்து கொள்ளட்டும்"



- மதுமிதாவை தொட்டு விடும் தூரத்துக்கு வந்திருந்தான் அந்த சிவப்பு இளைஞன். வன ஊழியர் வாயிலிருந்து ஆர்வமாய் வந்து வழிந்தன வார்த்தைகள்.

"கூளைக்கடா, செங்கால் நாரை, அரிவாள் மூக்கன், நீர்க்காகம், பாம்புதாரா, நீலப்பச்சை கோழி, நத்தைக் கொத்தி நாரை, வக்கரா, பட்டைதலை வாத்து-"

சட்டென்று கார்த்திகேயன் அருகில் சென்று காதில் கிசுகிசுத்தாள் மதுமிதா.

"சொல்லுங்க சார்- குதிரை படத்தை வரைஞ்சது யாரு-?"

"அவனும் ஒரு குதிரைதான். சாயங்காலம் சொல்றேன்."

எரிச்சலுடன் அவன் கையிலிருந்த பைனாகுலரை பிடுங்கிக் கொண்டு முன்னால் நடந்தாள். அந்த சிவப்பு இளைஞனோ வெற்றிப் புன்னகையுடன் பின்னோக்கி நகர்ந்தான் நிதானமாய். பைனாகுலர் வழியாக பிளமிங்கோ பறவைகள், கழுத்தை மட்டும் தண்ணீர் மட்டத்திற்கு மேல் இரண்டடி உயரத்திற்கு தூக்கி வைத்துக் கொண்டு உலா வரும் அழகை ரசிக்க ஆரம்பித்திருந்தாள் மதுமிதா. பின்னால் வந்து ஒட்டிக் கொண்டு நின்ற நிர்மலாவுக்கு வியப்பாயிருந்தது. அந்த வினாடிதான் அவள் கண்ணில் பட்டது. மதுமிதா அணிந்திருந்த சுரிதாரின் இடது தோளிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த சிவப்பு துணியில் பளிச்சிட்ட வெள்ளைக் குதிரை. வால் மட்டும் தங்கமாய்-வெளிநாட்டு ஸ்டிக்கர்.

"வேனில் ஏறும்போது நான் இதை கவனிக்கவில்லையே-"

- சிவப்புத் துணியில் மிதந்த குதிரையைத் தொட்டுப் பார்த்தாள் நிர்மலா.

"என்னடி... பின்னாலயிருந்து கழுதை மாதிரி உரசுறே..?"

- பின்னால் திரும்பிப் பார்த்த மதுமிதா திகைத்துப் போனாள். பார்வைக்குள் சிக்கிய தங்கவால்குதிரை அவளை வியப்பின் உச்சத்துக்கே அழைத்துப் போய் விட்டது.

"எப்படி... எப்படி இது நடந்தது நிர்மலா...? கூந்தகுளத்துக்கு வரும்வரை என்னுடைய ட்ரெஸில் குதிரை இல்லை. இப்பொழுது தான் ஒட்டியிருக்க வேண்டும்..."

- இருவருடைய கண்களும் கூட்டத்தை தடவியது சந்தேகத்துடன்.

கூட்டமோ வன ஊழியரின் குரலுக்குக் கட்டுப் பட்டது போல கிறங்கிக் கிடந்தது.

"...வறட்சியான காலங்களில் இரை தேட தன் குஞ்சுகளுக்காய் தாய் பறவைகள் கிழக்க திருச்செந்தூர், தெக்க கன்னியாகுமரி வரைக்கும் பறந்து போகும்..."

இருவரும் மெல்ல நகர்ந்து குளத்தங்கரையின் உச்சத்துக்கு வந்தனர்.

"கொழுத்த குதிரை தான். பட்டப்பகலில் காதலியின் பின்பக்கத்தில் ஒட்டி விட்டுப் போகிறான் என்றால் சமர்த்தன்தான். எனக்கும் அவனை உடனே பார்க்க வேண்டும் போலிருக்கிறது. நீ சம்மதித்தால் அவனை காதலிக்கவும் ஆசை"



-என்றாள் நிர்மலா வெட்கம் வருவது போல் நடித்துக் கொண்டே. அந்த நிமிடம் தான் அவளுக்கு நினைவுக்கு வந்தது சந்திரன் கூந்தகுளம் வரவில்லையென்பது.

"மதுமிதா, சந்திரன் ஏன் வரவில்லை?"

"ஆமாம்... ஆமாம்... நானும் இப்பொழுதுதான் கவனிக்கிறேன். சந்திரன் ஏன் வரவில்லை..?"

"நான் உன்னிடம் கேட்கிறேன். நீ என்னிடம் கேள்."

அவர்கள் பேசிக் கொண்டிருக்கும் பொழுது, அந்த வில் வண்டி வந்து நின்றது.

**ம**ல்லாந்து படுத்திருந்தான் சந்திரன்.

தலைக்கு மேல் ஃபேன் சுழன்று கொண்டிருந்தது சத்தமில்லாமல்.

கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து காதுகளை நனைத்திருந்தது.

'மதுமிதா நீ என்னை ஏமாற்றிவிட்டாய்... சிரித்து சிரித்து என்னை நம்ப வைத்தாய்... கடைசியில் கழுத்தை அறுத்து விட்டாய்... இந்த நிமிடம் கூந்தகுளத்தில் அந்த வாத்தியார் பயலுடன் கொஞ்சி கொண்டிருப்பாய்... உன் கொஞ்சலை நிறுத்தியாக வேண்டும்... நீ அழ வேண்டும். என்னைச் சிரிக்க விடாத நீ அழ வேண்டும்...'

- ஓங்கிப் படுக்கையில் குத்தினான். படுக்கை அதிர்ந்தது.

'காதல் என்றால் என்ன என்று என்னிடமே கேட்கிறாயா... அந்த வாத்தியார் பயலுக்கு தெரியுமா... இதயத்தின் பாஷை காதல் என்று அந்த கோட்டானுக்கு தெரியுமா...'

கோபத்தில் அருகிலிருந்த தண்ணீர் டம்ளரை தூக்கி சுவரில் வீசினான். டம்ளர் நெளிந்து தரையில் விழுந்தது. தண்ணீர் நாலு பக்கமும் சிதறி தூவானம் தெளித்தது.

வாசலில் நிழலாடியது, திரும்பிப் பார்த்தான். அத்தை நின்று கொண்டிருப்பது கண்ணீருக்கிடையில் மங்கலாய் தெரிந்தது.

அவசரமாய் எழுந்து அமர்ந்தான். கண்ணீரைத் துடைத்துக் கொண்டான் வேக வேகமாய். அவனை நோக்கி நடந்து வந்தாள் அத்தை. காலில் இடறியது நெளிந்து கிடந்த டம்ளர். குனிந்து கையில் எடுத்துக் கொண்டாள். படுக்கையை நெருங்கி வந்தவள், தலையைத் தடவினாள் வாஞ்சையுடன்.

"அழுகிறாயா சந்திரன்...?"

அந்தக் கேள்விக்குப் பதிலாய் கண்ணீர் பொங்கி வந்தது.

"எதற்காக அழுகிறாய்...?"

"மதுமிதா என்னை ஏமாற்றி விட்டாள்."

"அவள் உன்னை காதலிக்கவில்லையா...?"

"காதலிக்கிறாள் என்று தான் நினைத்துக் கொண்டிருந்தேன். என்னிடமே வந்து சொல்கிறாள் இன்னொருவனை காதலிக்கிறாளாம்."

"யார் அவன்..."

"காலேஜ் புரொபசர்."

"பணத்தோடு சேரவே பணம் ஆசைப்படுகிறது. நீங்கள் இருவரும் காதலிக்கிறீர்கள் என்று தான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன். கதை வேறாய் இருந்திருக்கிறது. ம்... எப்படியும் போகட்டும்... அவளுக்காக நீ ஏன் அழுகிறாய்...?"



"என்னால்... என்னால் முடியவில்லை."

"முடிந்ததை செய்."

"முடிந்ததையா...?"

"உன்னால அவளை அழ வைக்க முடியும். அழ வை"

— அத்தையின் குரலில் விஷம் விரவிக் கிடந்தது.

"எப்படி அழ வைப்பது...?"

"அவள் காதலை அப்பனிடம் சொல். அவன் முரடன், மூர்க்கன். நீ சொன்ன அடுத்த நிமிடமே அவள் குரல் வளையை முறித்து விடுவான். ம்... போ"

- ஏவினாள் சாத்தான் கை வில்லாய். சந்திரன் எழுந்து நின்றான் விஷ அம்பாய்.

**வே**ன்கள் நிறுத்தப்பட்டிருந்த இடத்துக்கு அருகில் வந்து நின்றது ஒரு வில் வண்டி. அந்த வண்டியிலிருந்து இறங்கினார்கள் கூந்தகுளம் பஞ்சாயத்து தலைவி கீதாவும், அவருடைய கணவர் ராஜேந்திரனும். கல்லூரியிலிருந்து வந்திருந்த மாணவர்களை இன்முகம் காட்டி வரவேற்றனர். மாணவர்களுக்கு பனை ஓலை பட்டைகளில் நுங்கு தரப்பட்டது. அதன் பின்னர் கூந்தகுளம் பஞ்சாயத்து தலைவி பறவைகள் சரணாலயத்தின் வளர்ச்சிப் பணிகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கம் அளித்தார். கல்லூரி மாணவர்களுக்கு மதிய உணவு

பண்ணையார் ஏற்பாடு செய்திருந்தார். ஆலமரங்களின் நிழலில் செவ்வாழை இலை போட்டு கொட்டாரம் சம்பா சோறும், வெண்டைக்காய் சாம்பாரும், சிறு பயறு பாயாசமும் பரிமாறப் பட்டது. பண்ணையாரின் உபசரிப்பில் மாணவர்களும், மாணவிகளும் மகிழ்ந்து போனார்கள்.

சாப்பிட்டு விட்டு வாயை துடைத்தபடி நின்று கொண்டிருந்த கார்த்திகேயனை நெருங்கினாள், மதுமிதா தயக்கத்துடன். அவளை கண்டதும் அவன் முகம் மலர்ந்தது.

"என்ன மதுமிதா... என் கடிதத்துக்கு பதிலே இல்லை."

"முதலில் எனக்கு பதில் சொல்லுங்கள். குதிரை படத்தை வரைந்தது யார்...?"

"எதற்காக தெரிந்து கொள்ள துடிக்கிறாய்...?"

- கார்த்திகேயனிடமிருந்து வந்த கேள்வியில் சந்தேகம் இருந்தது.

"எங்கள் வீட்டு வரவேற்பறையில் பெரிய குதிரை படம் வரைய வேண்டும். படம் வரைந்தது யாரென்று சொல்லுங்கள் சார்."

- குரல் கெஞ்சியது கொஞ்சலுடன்.

கார்த்திகேயனின் காதல் மனம் மீண்டும் இளகியது.

"சொல்கிறேன்... சொல்கிறேன்... என் காதலுக்கு பதில் எப்போது...?"

"நாளை நான். இன்று நீங்கள்."



"மதுமிதாவுக்காகச் சொல்கிறேன். குதிரை படம் வரைந்ததும் ஒரு குதிரைதான். பந்தயக் குதிரை, தடை தாண்டும் ஓட்டத்தில் முதல் பரிசு பெற்றவன். பெயர் டேவிட். போதுமா..."

- கார்த்திகேயனின் குரல் நெளிந்து வளைந்து காதல் சொன்னது.

"இது போதும்"

- மதுமிதாவின் குரலிலோ அன்று பிறந்த கன்றுக் குட்டியின் துள்ளல் இருந்தது.

அவள் ஓட்டத்திலோ மான்குட்டியின் துள்ளல் தெரிந்தது.

கார்த்திகேயனுக்கு மதுமிதாவின் ஓட்டம் வியப்பாய் இருந்தது.

மதுமிதாவின் கண்கள் நான்கு திசைக்கும் தேடியது டேவிட்டை

அங்கும் இங்கும் தேடி கடைசியில்...

டேவிட் அலட்சியமாய் நின்று கொண்டிருப்பது கண்ணில் விழுந்தது. குளத்தின் உள்பகுதியை நோக்கி நீட்டிக் கொண்டு நின்ற சிமெண்ட் திண்டில் நின்று கொண்டு பறவைகளை ரசித்துக் கொண்டிருந்த டேவிட்டை கண்டதும் மதுமிதாவுக்கு சந்தோஷம் வருவதற்கு பதிலாய் ஏனோ கோபம் வந்தது.

வேக வேகமாய் டேவிட்டை நெருங்கினாள் மதுமிதா கோபத்துடன்.

காலடி சத்தத்தில் திரும்பினான் டேவிட்.

"நீதான்... நீ தான் தங்கவால் குதிரையா...?"

- கோபத்தில் டேவிட்டின் நெஞ்சில் கை வைத்து தள்ளினாள் மதுமிதா. குளத்து தண்ணீருக்குள் மல்லாந்து விழுந்தான் டேவிட்.




காதல்ங்கிறது -
முற்றுப்புள்ளி இல்லாத வாக்கியம்.
காதல்ங்கிற விபத்து ஏற்பட்டால் இன்ப வலி.
ஏற்படாவிட்டால்
ஏக்க வலி.
வாலிபம் விரும்பி ஏற்கும் 'வசந்த' வலிதானே
காதல்.

*- என். ராஜேஸ்வரி*

மதுமிதாவின் கோபம் கரைந்து போயிருந்தது அந்த வினாடியே.

குளத்துத் தண்ணீருக்குள் மல்லாந்து விழுந்த டேவிட், சில விநாடிகள் நீருக்குள் அமிழ்ந்து, அதே வேகத்தில் நீர்மட்டத்துக்கு மேல் வந்தான். அவனுடைய முகத்தில் சிரிப்பு இருந்தது. குறும்புச் சிரிப்பு.

"இத்தனையும் செய்துவிட்டு இன்னும் சிரிக்கவா செய்கிறாய்.. வெளியே வா. உன் வாலை ஒட்ட நறுக்கு கிறேன். உனக்கு காதல் விளையாட்டாய் போயிற்று. முட்டாள் குதிரையே வெளியே வா"

- விரலசைத்து அழைத்தாள் மதுமிதா, ஒரு காதல் யுத்தத்துக்குத் தயாரானவள் போல.

டேவிட் குளத்துக்குள் விழுந்த சத்தமும், தண்ணீர் சிதறடித்த காட்சியும் கரையோர மரத்து பறவைகளை பயமுறுத்தியிருக்க வேண்டும். அடுத்த விநாடியே சிற கசைத்து பறந்தன. அதற்குள் எங்கிருந்தோ ஓடி வந்திருந் தாள் நிர்மலா, மூச்சிரைக்க. கரையில் நின்று கொண் டிருந்த மதுமிதாவையும் தண்ணீருக்குள் நிலை நீச்சல் அடித்துக் கொண்டிருக்கும் டேவிட்டையும் மாறி மாறி பார்த்தாள். மூளை அவசர அவசரமாய் கணக்குப் போட்டது. உடனே சிரித்துக் கொண்டது.

"ஏய்.. இவன்தான் தங்கவால் குதிரையா? அழகான வாலிப குதிரைதான். எதற்காக குளத்துக்குள் தள்ளி விட்டாய்? காதல் குதிரைக்கு ஜலதோஷம் பிடிக்காதா? வால் நனைந்து போகாதா?"

"பேசாமல் இரு."

மதுமிதாவின் குரல் அதட்டியது. மனமோ சிந்தனை களால் திணறியது, அலையில் சிக்கிய தாமரையாய்.

'டேவிட்டை ஏன் குளத்தில் தள்ளிவிட்டாய்' என்று கேட்டால் என்ன பதில் சொல்வேன்.. குளத்தில் தள்ளி விட்டது காதல் விளையாட்டு என்று சொல்லமுடியுமா? நான் வாய்பொத்தி மௌனமாய் இருந்தாலும் கரைக்கு வரும் டேவிட் சொல்லாமல் இருக்க வேண்டுமே..'



"டேவிட்"

— அழைத்து சொல்லிவிட வாய் திறந்தாள் மதுமிதா.

குளத்தங்கரையில் தடதடத்து முன்னால் வந்து நின்றான் மதன்.

"என்ன நடந்தது?"

கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் திணறினாள் மதுமிதா.

"டேவிட் குளத்துக்குள் விழுந்துவிட்டான்"

- அவசரமாய் பதில் சொன்னாள் நிர்மலா.

அதைவிட அவசரமாய் அடுத்த கேள்வி வந்தது.

"எப்படி விழுந்தான்?"

"அது.. வந்து.."

மதுமிதா வார்த்தைகளை தேடுவதற்குள் மாணவர் களும் மாணவிகளும் வந்து சூழ்ந்து கொண்டனர். டேவிட் தண்ணீரில் விழுந்த சத்தமும், பறவைகளின் பயக்கூச்சலும் அவர்களை இழுத்து வந்திருந்தது.

"எப்படி விழுந்தான்?" - ஒரே கேள்வி எல்லா திசைகளிலிருந்தும் வந்தது.

டேவிட் தேர்ந்த நீச்சல் வீரன் போல நீச்சலில் கொட்டகையை சுற்றி வந்து குதிரை போல சிமெண்ட் திண்டில் தாவி ஏறினான். உடைகள் தெப்பமாய் நனைந்து போயிருந்தன. தலையிலிருந்தும், உடைகளிலிருந்தும் தண்ணீர் சொட்டிக் கொண்டிருந்தது.

"எப்படி விழுந்தாய் டேவிட்?"

கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னால் போய் நின்று கேட்டாள் நிர்மலா.

கண்களில் கெஞ்சல் இருந்தது.

எல்லாருடைய பார்வையும் டேவிட்டின் மீதே இருந்தது.

அவன் சுட்டுவிரல் நீண்டது மதுமிதாவின் நெஞ்சை குறிவைத்து.

மதுமிதாவின் வீட்டு வாசலில் கால் மிதித்த சந்திரனுக்குத் தயக்கம் வந்திருந்தது.

'எப்படிச் சொல்வது.. நீ ஏன் வந்து சொல்கிறாய் என்று கேட்டால்?'

கண்கள் கீற்றுக் கொட்டகையைப் பார்த்தன. நாற்காலிகள் வெறுமையாய் கிடந்தன.

நிதானமாய் நடந்து வீட்டை நெருங்கினான். யாரும் உள்ளே இருப்பதாகத் தெரியவில்லை.

"அண்ணாச்சி" என்றழைத்தான் சத்தமாய்.

"என்ன சந்திரன்.. என்ன வேண்டும்?"

பின்னாலிருந்து கேள்வி கேட்டது முரட்டுக் குரல்.

திரும்பிப் பார்த்தான் சந்திரன். தென்னை மரத்தில் சரிந்து நின்று கொண்டிருந்தார் மதுமிதாவின் அப்பா பரமசிவம். முகத்தில் ஒருவித கடுமை தெரிந்தது. கண் களில் கேள்வி இன்னும் மீதமிருந்தது. அருகில் போனான் அவசரமாய். பேச்சு மட்டும் வரவில்லை.

"என்ன விஷயம்?"



"ஓ... ஒன்றுமில்லை... உங்களை பார்க்கத்தான் வந்தேன்."

"வா."

கீற்றுக் கொட்டகையை நோக்கி நடந்தார் பரமசிவம். பலி ஆடாய் பின்னால் நடந்தான். இதயத் துக்குள்ளோ பலி அரிவாள்.

நாற்காலியை இழுத்துப் போட்டு மல்லாந்து அமர்ந்தார்.

"ம்.. உட்காரு"

சந்திரன் சேரின் விளிம்பில் அமர்ந்தான் சங்கடமாய்.

"ம்.. சொல்லுப்பா என்ன விஷயம்?"

"மதுமிதாவை பத்திதான்."

"மதுமிதாவுக்கு என்ன?"

பரமசிவத்தின் குரல் நிறம் மாறியிருந்தது.

"மதுமிதா கொஞ்ச நாளா சரியில்லை."

"என்ன சரியில்லை?"

"மதுமிதா காதலிக்க ஆரம்பிச்சிருக்கா."

அடுத்த விநாடியே கன்னத்தில் அறை வாங்கினான் சந்திரன்.

சத்தம் கேட்டு வெளியே வந்து எட்டிப் பார்த்தாள் மதுமிதாவின் அம்மா.

டேவிட் விரல் நீட்டி சுட்டிக் காட்டியதும் திகைத்து போனாள் மதுமிதா. அடுத்து என்ன செய்து என்று

தெரியாமல் நிர்மலாவின் முகத்தை பார்த்தாள். அதற்குள் டேவிட் பேசவும் செய்தான்.

"நான் குளத்துக்குள் விழுந்தது மதுமிதாவாலதான்"

அத்தனை கண்களும் மதுமிதாவை நோக்கித் திரும்பியிருந்தன.

"நான்... நான்..." பதில் சொல்ல முடியாமல் திணறினாள் மதுமிதா.

"நீதான்... நீதான் காரணம். சிமெண்ட் திண்டில் ஏறி நின்று பறவைகளை ரசித்துக் கொண்டிருந்தேன். மதுமிதா குளத்தங்கரையிலிருந்து குதித்து ஓடிவந்த சத்தத்தில் திடுக்கிட்டு திரும்பியவன் கால் வழுக்கி குளத்துக்குள் விழுந்து விட்டேன். பெண்கள் வழுக்கி விழுந்ததைத்தான் கதைகளில் படித்திருக்கிறோம். வழுக்கி விழுந்த முதல் ஆள் நானாகத்தான் இருக்கும்."

சுற்றி நின்ற கூட்டம் 'ஓ' போட்டது உற்சாகமாக.

'அப்பாடா!' நிம்மதிப் பெருமூச்சு வந்தது அவளிட மிருந்து

தூரத்தில் நின்று கவனித்துக் கொண்டிருந்த கார்த்திகேயன் முகம் கோபத்தில் சிவந்து போயிருந்தது. குதிரை படம் வரைந்தது டேவிட் என்பதை அவன் சொன்ன விநாடியே அவசர அவசரமாய் துள்ளிக் குதித்து ஓடியதால் சந்தேகமடைந்த கார்த்திகேயன் பின் தொடர்ந்து வந்தான். டேவிட்டை தேடி கண்டுபிடித்து குளத்துக்குள் மதுமிதா தள்ளிவிட்டதையும் சற்று தூரத்தில் இருந்து பார்த்தவன் குழப்பமடைந்தான். 'எதற்காக தள்ளி விட்டாள்?' குதிரை படம் வரைந்தால் ஏன் தள்ளிவிட வேண்டும் எதற்காக மதுமிதா கோபப்பட



வேண்டும்? மனதுக்குள் ஆயிரம் கேள்விகள். பதில் எதுவும் கிடைக்காமல் திகைத்துப் போய் நின்றவனை, குளத்தி லிருந்து எழுந்து வந்த டேவிட் சொன்ன பதில் இன்னும் குழப்பத்தை அதிகப்படுத்தியது. கார்த்திகேயன் எதுவும் பேசாமல் குழப்பத்துடன் வேனை நோக்கி நடந்தான் திரும்பி.

டேவிட்டின் ஈரத்தலையை துவட்டிவிட வேண்டும் போலிருந்தது மதுமிதாவுக்கு. இருந்தும் ஒரு வார்த்தை பேசாமல் எதிர்திசை நோக்கி நடந்தாள் மதுமிதா.

மீதி நேரம் உற்சாகமில்லாமல் நகர்ந்த விலங் கியல் பேராசிரியர் கார்த்திகேயனுக்கு மதுமிதாவும் டேவிட்டும் ஒருவரை ஒருவர் கண்களால் விழுங்கிக் கொண்டே வளைய வந்தனர். மதன் முதன் முறையாய் குழப்பத்தின் பிடியில் சிக்கியிருந்தான். சந்திரன்-கார்த்திகேயன்-டேவிட் மனது அவிழ்ந்து அவிழ்ந்து முடிச்சுப் போட்டது. மிக அருகில் காதில் விழுந்து கொண்டிருந்த வனத்துறை ஊழியரின் வார்த்தைகள் கூட காதில் விழவில்லை.

"பெலிகன் பறவைக்கு நம்ம ஊர் பெயர் கூழைக்கிடா. ஐம்பது, நூறாய் இரை தேடி வெளியே போகும். எடை ஏழெட்டு கிலோ இருக்கும். கூடு சிறி தாகவே கட்டும். கூழைக்கிடாவுக்கும் செங்கால் நாரைக் கும் குஞ்சாயிருக்கும் போது குரல் நன்றாயிருக்கும். பெரிதானால் சத்தமே வராது. குஞ்சுகள் ஓடி வருவது குழந்தைகள் ஓடி வருவது போல..."

மதுமிதா மெல்ல நழுவி சற்று தள்ளியிருந்த பூவரசு மரத்து நிழலுக்குச் சென்றாள். அங்கேயும் இரண்டு மாணவிகள் பேசிக் கொண்டிருந்தார்கள் வாய்மூடாமல்.

"அதோ தெரியுது பாரு. அதுதான் மாப்பிள்ளை பண்ணையார் வீடு. அஜீத் நடிச்ச 'நீ வருவாய் என' படத்திலேயும் ஜோதிகா நடிச்ச 'டும் டும் டும்' படத்திலேயும் இந்த வீடு வருது."

கூட்டத்தை விட்டு விலகி விலகிப் போனாலும் மதுமிதாவுக்கும் டேவிட்டுக்கும் தனிமையாய் சந்தித்து பேச ஒரு இடம் கிடைக்கவில்லை. மனம்விட்டு நான்கு வார்த்தைகளாவது பேசிவிட வேண்டுமென்று இரண்டு காதல் இதயங்களும் துடித்தன. மாலை மயங்கும் வரை இருவரும் நெருங்கி ஒரு வார்த்தை கூட பேசமுடியவில்லை. சூரியன் மேற்கு தொடர்ச்சி மலை சரிவில் ஓய்வு எடுக்க இடம் தேடிக் கொண்டிருந்தான். இரை தேடச் சென்ற பறவைகள் தங்கள் கூடுகளுக்குத் திரும்பியிருந்தன. எங்கும் பறவைகளின் சத்தம். சிறகுகளின் விசிறல் ஒலி.

கூந்தகுளத்தைப் பிரிய மனமில்லாமல் தங்கள் வாகனங்களை நோக்கி நடந்தனர் மாணவர்களும், மாணவிகளும். மதுமிதா வெற்று சிந்தனையுடன் வேனை நோக்கி நடந்தாள். எங்கிருந்தோ மின்னல் வேகத்தில் வந்து, மதுமிதாவின் வலதுகையில் மடிக்கப்பட்ட காகிதம் ஒன்றை திணித்துவிட்டுப் போனான் டேவிட். கைக்குள் இருந்த காகிதத்தை விரித்துப் படிக்கலாமா என்று யோசிப்பதற்குள் காத்திகேயன் அருகில் வந்திருந்தான். சட்டென்று கிறுக்கப்பட்ட காகிதம் ஒன்றை சுருட்டி இடது கையில் வைத்தான். அடுத்த விநாடியே காணாமல் போனான். இரண்டு கைகளிலும் இரண்டு காகிதங்களுடன் நின்று கொண்டிருந்தாள் விழிகளில் சங்கடத்துடன். அதற்குள் பின்னாலிருந்து முதுகில் கை வைத்துத் தள்ளினாள் நிர்மலா.



"ம்.. வண்டியில ஏறு. நேரமாகுது."

இறுக்கி மூடிய விரல்களுடன் சிரமமாய் வேனில் ஏறிக் கொண்டாள் மதுமிதா. காகிதம் கனத்துக் கிடக்குமா... இரண்டு சிறிய காகிதங்கள் கனத்துக் கிடக்குமா...

அன்று மதுமிதாவுக்கு கைக்குள் பொத்தி வைத்திருந்த இரண்டு காகிதங்களும் கனத்துக் கிடந்தன.

கிணற்று சுற்றுச்சுவரில் ஏறி அமர்ந்திருந்தான் சந்திரன்.

கண்கள் வானம் பார்த்துக் கொண்டிருந்தன. விரல்கள் கன்னத்தைத் தடவிக் கொண்டிருந்தன.

'கிழவன் காதல் என்றதும் எகிறிக் குதிப்பான் என்று நினைத்தேன். என்னையே அடித்து விட்டானே. மதுமிதா காதலிக்க மாட்டாளாம். அவன் ரத்தமாம். இந்நாள் வரை என்னை ஏமாற்றிய உன் மகளை அழ வைத்து பார்க்க வேண்டும் என்று மட்டுமே சதா நினைத்துக் கொண்டிருந்தேன். உன்னையும் சேர்த்து அவமானப்படுத்த வேண்டும்.'

சுவரிலிருந்து குதித்து இறங்கினான். விடுவிடுவென்று நடந்து வீட்டுக்குள் நுழைந்தான். சட்டையை எடுத்து போட்டுக் கொண்டான். நூறு ரூபாய் தாள் ஒன்றை எடுத்து பைக்குள் வைத்தான். கலைந்த முடியை விரல்களால் சரிப்படுத்தினான். கண்ணாடியில் முகம் பார்த்தான். கன்னம் சற்று வீங்கியிருந்தது. விரல்கள் பட்ட இடம் சிவந்திருந்தது.

'ஓடிவந்து என்ன சத்தம் என்று கேட்ட மதுமிதாவின் அம்மாவிடம் பொய் சொல்கிறாய். கொசு அடித்த

சத்தமாம். கொசு மிதித்தால் எப்படி வலிக்கும் என்று உனக்கு காட்டுகிறேன். நீ யானையாயிருக்கலாம். உனக்கு பள்ளம் வெட்டுகிறேன்'

வீட்டுக்கு வெளியே வந்தான். காம்பவுண்ட் சுவரில் சரித்து வைக்கப் பட்டிருந்தது சைக்கிள். மதுமிதா வீட்டை நிமிர்ந்து பார்த்தான். வெளிச்சத்தில் மினுக்கிற்று. கடைத்தெருவை நோக்கி சைக்கிளை உருட்டிக் கொண்டு நடக்க ஆரம்பித்தான். எதிரில் மதுமிதா வந்தாள் தோளில் பையுடன்.

சந்திரனைக் கண்டதும் வழிமறித்தாள்.

"ஏன் சந்திரன் நீ வரல்ல?"

அந்த கேள்விக்கு அவனால் உடனே பதில் சொல்ல முடியவில்லை.

"என்ன பதிலைக் காணோம்?"

"கடுமையான வயிற்று வலி."

"இன்னைக்கு மாதிரி சந்தோஷமா நான் ஒரு நாளும் இருந்ததில்லை. செம ஜாலி. நாளைக்கு உன் கிட்ட பேசவேண்டியதிருக்குது. ம்... நீ வந்திருக்கணும். வர்றேன்."

பதில் எதிர்பார்க்காமல் தன் வீட்டை நோக்கி நடந்தாள் மதுமிதா.

'வந்திருக்கணுமா? எதுக்கு.. வாத்தியாரோடே நீ விளையாட்ற காதல் விளையாட்ட பார்க்கவா?'

சைக்கிளில் ஏறி பெடலை மிதித்தான் கோபமாய்.

வானத்துக்குத் துண்டு நிலவு வந்திருந்தது.



நட்சத்திரங்கள் கண்சிமிட்டிக் கொண்டிருந்தன அர்த்தமில்லாமல்.

மதுமிதாவின் கையில் இரண்டு காகிதம் இருந்தது. மொட்டை மாடியில் காற்று அதிகமாய் மோதியது. மெர்க்குரி வெளிச்சத்தில் காகிதம் ஒன்றை விரித்துப் பார்த்தாள். காற்று காகிதம் அசைத்தது. இரண்டும் கெட்டான் வர்ணத்தில் எழுத்துக்கள். அவசர அவசர மாய் எழுதப்பட்டிருக்க வேண்டும். எழுத்துக்கள் கோணல்மாணலாய் இருந்தன. வார்த்தைகளில் கோபம் இருந்தது.

"மதுமிதா நீ என்ன முட்டாளா.. இன்று நீ நடந்து கொண்டது கொஞ்சமும் சரியில்லை. எனக்கு உண்மை தெரிந்தாக வேண்டும். நாளை பதினொரு மணிக்கு என் அறைக்கு வா. நான் உனக்காக காத்திருப்பேன்"- கார்த்திகேயன்"

மதுமிதாவின் உதடுகளைப் புன்னகை அசைத்தது.

'டேவிட்டை நான் குளத்தில் தள்ளிவிட்டதை எங்கிருந்தோ பார்த்திருக்கிறான். அந்த கோபத்தில் தான் கடிதம் எழுதியிருக்கிறான். காதல் பொறாமை. நாளைக்கு முதல் காரியமாக கார்த்திகேயனை பார்த்து சொல்லிவிட வேண்டும்'

சட்டென்று அள்ளி வீசியது போல வந்த காற்று அவள் கையிலிருந்த காகிதத்தைப் பிடுங்கியது. அதை எட்டிப் பிடிக்க முயல்வதற்குள் விசிறப்பட்டு காற்றில் மிதந்தது.

'ஐயோ.. கீழே விழப்போகிறதே..'

மனம் பதைபதைத்தது. குனிந்து பார்த்தாள். அந்த காகிதம் சிட்டுக் குருவியின் பூஞ்சிறகு போல காற்றில் மிதந்தது. அவள் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே மெல்ல அசைந்து அசைந்து தரை இறங்கியது.

வாசலில் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

திடுக்கிட்டுப் பார்வையைத் திருப்பினாள்.

காரிலிருந்து பரமசிவம் இறங்கினார் தோளில் துண்டுடன்.

'என்ன செய்வது... நடந்து வரும் வழியில் அந்த முட்டாளின் கடிதம் கிடக்கிறதே. அப்பா கையில் சிக்கினால் என்ன ஆகும். கொன்றே போட்டு விடுவார்...'

தரையில் கிடந்த காகிதம் தன்னை பார்த்து சிரிப்பது போலிருந்தது மதுமிதாவுக்கு. மாடியிலிருந்து குதித்து கடிதத்தை எடுத்துவிடலாம் என்ற எண்ணம் வந்தது.

வீட்டை நோக்கி நடந்து வர ஆரம்பித்தார் பரமசிவம்.

அவர் கண்களில் தரையில் கிடந்த காகிதம் பட்டது!




காதல் என்பது மனித உள்ளங்களில்
பூகம்பம் ஏற்படுத்தும்
மகத்தான சக்தி
என்று நான் உணர்ந்திருந்த போதிலும்
சுவாரஸ்யமான கதை எழுத உதவி செய்யும்
நூறு அம்சங்களில் காதலும் ஒன்று என்று தான்
நினைக்கிறேன்.

*- எழுத்தாளர் ரா.கி. ரங்கராஜன்*

அந்த நிமிடம் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துப் போய் நின்று கொண்டிருந்தாள் மதுமிதா மொட்டை மாடியில். பரமசிவத்தின் கண்கள் தரை யில் கிடந்த காகிதத்தின் மீதே பதிந்து கிடந்தன. வேஷ்டியின் விசிறல்கள் காகிதத்தை நோக்கி நகர்ந்து வந்தன. கால்கள் அந்தக் கடிதத்தை நெருங்கியிருந்தன. ஏதோ நினைத்துக் கொண்டவர் போல திடீரென்று நிமிர்ந்து பார்த்தார். மதுமிதாவின் கண்களும் அவ

குடைய கண்களும் தொட்டுக் கொண்டன. ஒரு வார்த்தை பேசாமல் அடுத்த அடி எடுத்து வைத்தார். அதற்குள் வலது காலில் சிக்கிக் கொண்டது காகிதம். அதற்குள் அடுத்த விநாடியே கால் நகர்ந்தது. மீண்ட காகிதம் மதுமிதாவைப் பார்த்துச் சிரித்தது செருப்பு மண்ணுடன்.

'நல்ல வேளை பிழைத்தேன். வேறு யாரும் பார்ப்பதற்குள் தூக்கி விட வேண்டும்'

— வேகமாய் தடதடத்து படிகளில் இறங்கினாள்.

அப்பாவைக் காணவில்லை தோட்டத்துக்கு போயிருப்பார்.

அவசரமாய் வாசலுக்கு ஓடினாள்.

அதிர்ச்சி காத்திருந்தது.

அந்த காகிதத்தைக் காணவில்லை!

'மேலேயிருந்து கீழே வருவதற்குள் எப்படி காணாமல் போய் விட்டது- முப்பது வினாடிக்குள் எங்கே மாயமாய் போய் விட்டது. அதற்குள் யாராவது எடுத்து சென்று விட்டார்களா... காகிதம்தானே... காற்று அடித்து சென்று விட்டதா... அப்படித் தெரியவில்லையே...'

சுற்றும் முற்றும் கண்கள் தேடின.

"என்னம்ம தேட்றே...?"

— குரலில் திடுக்கிட்டுத் திரும்பினாள்.

எதிரில் நின்று கொண்டிருந்தார் பரமசிவம்.

கண்கள் அதே கேள்வியைத் திரும்ப கேட்டன.

"ஒ- ஒண்ணுமில்லப்பா..."



"ஒண்ணுமில்லாம இருந்தா சரிதான்."

- தோளில் துண்டுடன் தெருவை நோக்கி நடந்தார்.

திகைத்துப் போய் நின்று கொண்டிருந்தாள் மதுமிதா.

'எங்கோ வெளியே கிளம்பி விட்டார். அந்த கடிதம் அப்பா கையில் கிடைத்திருக்குமோ... அவரிடம் சிக்கியிருந்தால் தாம் தூமென்று குதிக்க மாட்டாரா... எங்கேதான் போயிற்று...'

- தொலைந்த காகிதத்தைத் தேட, மேலும் பத்து நிமிடங்களை தொலைத்திருந்தாள்.

"மதுமிதா வீட்டுக்கு முன்னால கிடக்கிற நிலத்தை எதுக்காக ராத்திரி அளக்கிற...?"

- அம்மாவின் குரலில் முகம் திருப்பினாள்.

வாசலில் சிரிப்புடன் அம்மா நின்று கொண்டிருந்தாள்.

கடிதத்தைத் தொலைத்த கோபத்தில் இருந்தாள் மதுமிதா.

"யம்மா... உனக்கு கொழுப்பு கொஞ்சம் அதிகம் தான்."

"எதைடி விழுந்து விழுந்து தேட்றே...?"

"உனக்கெதுக்கு அந்த கேள்வி...?"

"இதைத்தான் தேட்றியோன்னு கேட்டேன்"

- அம்மா கையில் கசங்கிய வெள்ளைக் காகிதம் இருந்தது.

நாலே தாவலில் அம்மாவை நெருங்கி காகிதத்தை பிடுங்கியிருந்தாள் மதுமிதா.

அதே இரவில் பஸ்ஸுக்காக காத்து நின்றான் சந்திரன்.

இரவு பத்து மணிக்குள் கல்லூரி போய் விட வேண்டும் என்ற திட்டம் அவனுக்குள் இருந்தது. அவன் வலது கையில் அட்டைப் பெட்டி இருந்தது. உதட்டோரம் வெறி. சந்திரனைக் கடந்து சென்ற கறுப்பு அம்பாசிடர் கார் ஒன்று ப்ரேக்கிட்டு நின்றது தார் ரோட்டைத் தேய்த்துக் கொண்டு. நின்ற வேகத்தில் அவசரமாய் பின்னோக்கி வந்து சந்திரன் முன்னால் நின்றது. யாரோ உள்ளேயிருந்து அவனைக் கையசைத்து அழைத்தார்கள்.

தயக்கத்துடன் காரின் அருகே சென்றான்.

அதற்குள் காரின் பின்பக்க கதவு திறந்து கொண்டது.

சந்திரன் கையைப் பிடித்து காருக்குள் இழுத்தது ரோமம் படர்ந்த கை ஒன்று.

அவனுக்கோ மறுக்கத் தோன்றவில்லை. பதட்டத் துடன் ஏறிக் கொண்டான்.

வண்டி ஓட ஆரம்பித்தது அவசர வேகத்தில்.

உள்ளே விளக்கு எரிந்தது. அவன் அருகில் கண்களில் கோபம் மிதக்க அமர்ந்திருந்தார் பரம சிவம்.

பயத்தில் உடம்பு நடுங்க ஆரம்பித்தது சந்திரனுக்கு.

இதயம் வேகமாகியிருந்தது.



"சந்திரன் உன்னை அடிச்சது தப்புதான். என் கணக்கு தப்பாயிடிச்சி. மதுவுக்கு லெட்டர் எழுதியிருக்கான் - யார் அந்த கார்த்திகேயன்...?"

- ஆள் இல்லாத காட்டுக்குள் புலி உறுமுவது போலிருந்தது.

"அவன்தான். அவன்தான் உங்க மகளை காதலிக்கி றான். ஜுவாலஜி புரொபசர்"

"படிச்சு குடுக்கிற வாத்தியானா...?"

- கோபம் மிகுந்த அந்த கேள்விக்குத் தலையாட்டி வைத்தான்.

"நிறுத்து"

- ஒற்றை வார்த்தைக்கு கட்டுப் பட்டு வண்டி ப்ரேக்கிட்டு நின்றது.

"ம்... இறங்கிக்க."

என்ன பதில் பேசுவது என்று தெரியாமல் அவசர அவசரமாய் இறங்கிக் கொண்டான். கார் அரை வட்ட மடித்து வந்த பாதையில் திரும்பி சென்றது வேகமாய். வண்டியின் பின்புற விளக்குகளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டு நின்றான். அடுத்து என்ன செய்வது என்று அந்த நிமிடம் அவனுக்கு தோன்றவில்லை. கொஞ்ச நேரத்தில் கார் விளக்குகளின் வெளிச்சம் கண்களுக்கு மறைந்து விட இருட்டுக்குள் நிற்பதை உணர்ந்தான்.

'என்ன மனிதன் இவன் - பஸ் ஸ்டாப்பில் நின்றவனை கையை பிடித்து இழுத்து வண்டியில் ஏற்றினான்... கார்த்திகேயன் யார் என்று கேட்டான்... பதில் சொன்ன தும் பாதி வழியில் அதுவும் இரவில் எங்கோ இறக்கி

விட்டு விட்டு போய் விட்டானே- இது எந்த இடம்- பஸ் நிற்குமிடத்துக்கு எவ்வளவு தூரம் நடக்க வேண்டி யிருக்குமோ தெரியவில்லையே-'

- சுற்றும் முற்றும் பார்த்தான் சந்திரன்.

எல்லா திசைகளிலும் இருட்டுதான் நின்று கொண்டிருந்தது.

கையில் இருந்த அட்டைப் பெட்டியோ கனத்துக் கிடந்தது.

மல்லாந்து படுத்திருந்தாள் மதுமிதா.

தலைக்கு மேல் ஃபேன் சுழன்று கொண்டிருந்தது நிதானமாய்.

அறையெங்கும் துண்டு துண்டாய் முகம் கிழிந்து கிடந்தது கார்த்திகேயனின் கடிதம். டேவிட்டின் எழுத்து சுமந்த காகிதமோ மதுமிதா மார்பை தொட்டுக் கொண் டிருந்தது. அந்த காகிதத்துடன் அவள் காதல் இதயம் பேசிக் கொண்டிருந்தது சத்தமில்லாமல்.

'நான் மாடியிலிந்து இறங்கி வருவதற்குள் வீட்டுக்கு வெளியே கிடந்த காகிதம் எப்படி வீட்டுக்குள் வந்தது- அதுவும் அம்மா கையில். அம்மா கடிதத்தை படித்திருப் பாளோ... நாளை கார்த்திகேயனிடம் சொல்லி விட வேண்டும்- டேவிட்டை காதலிக்கிறேன் என்று-'

டேவிட் எழுதிய கடிதத்தை எட்டாவது முறையாகப் படித்தாள்.

'அன்பே மதுமிதா... உன்னை எந்த இமைமூடு பொழுதிலிருந்து காதலிக்க ஆரம்பித்தேன் என்பதை உன்னிடம் சொல்ல வேண்டாமா- தங்கவால் குதிரை உன் வீடு வரை வந்த ரகசியம் நீ அறிவாயா- காதல் துரத்திய தருணங்களில் உன் மனநிலையை நான் அறிந்து கொள்ள வேண்டாமா- உன்னிடம் நான் பேச வேண்டும்- உன் மடியில் தலை வைத்து உன் நிலா முகத்தை என் உயிர் பிரியும் வரை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். ஈருயிர் ஓருடலாய் இந்த பூமியில் வலம் வர வேண்டும். எந்த தடை வந்தாலும் தகர்த்து எறிய உன் இதயத்தை தயார் செய்து கொள். நாளை மதியம் ஒரு மணிக்கு உனக்காக காத்திருப்பேன் வட்டக் கோட்டையில். வா மன்னர்கள் உலாவிய அந்த மண்ணில் இளவரசனும் இளவரசியுமாய் வலம் வருவோம். கடல் கொஞ்சும் இடத்தில் அலைகளை நாம் மிஞ்சுவோம். காதல் மரத்து பறவைகளாய் சிறகசைப்போம்.

- என்றும் உன்னவன்,

டேவிட்

- முத்தமிட்டாள் 'டேவிட்' என்று எழுதியிருந்த எழுத்துக்கள் மீது. ஏனோ அந்த வினாடி கண்ணீர் வந்தது. 'வாழ்வில் எந்த தடை வந்தாலும் தங்கவால் குதிரை பின்னால் செல்வேன்.' மனதுக்குள் உறுதி வந்திருந்தது.

அதே நேரம் மதுமிதாவின் உறுதியைக் குலைப்ப தற்கான வேலையில் ஈடுபட்டிருந்தான் சந்திரன் அந்த கரிய இரவில். வீசிய குளிர் காற்றையும் மீறி வியர்த்திருந் தான். காலடியில் இருந்தது அட்டைப்பெட்டி விஷப் பாம்பாய்.

வலது கை வேக வேகமாய் அசைந்து கொண் டிருந்தது பதட்டத்துடன். வானத்து நட்சத்திரங்கள் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன பயத்துடன்.

கறுப்பாய்.. நீலமாய்.. கல்லூரி சுவரில் எழுத்துக்கள் பிறந்து கொண்டிருந்தன.

சற்று தள்ளி நின்று எழுதியதைப் பார்த்தான்.

தூரத்து மங்கலான வெளிச்சத்தில் சந்திரனின் கோபம் தெரிந்தது.

'விலங்கியல் பேராசிரியர் காதல் பேராசிரியர் ஆனது எப்போது..?'

உதட்டோரம் புன்னகை நெளிந்தது.

'மதுமிதா... உன் அப்பனுக்கு என்ன திமிர்... கன்னத்தில் அறைந்தது போதாது என்று, இரவில் அழைத்து சென்று நடு வழியில் இறக்கி விட்டு விட்டு செல்கிறான்.. விடிந்ததும் அவன் திமிர் அடங்கி விடும்.. நீயும், உன் அப்பனும் கண்ணீர் விடப் போகிறீர்கள்..'

- மீண்டும் எழுதத் தொடங்கினான் வெறியுடன்.

'காதல் தேசத்து கலைக் கல்லூரியில் கார்த்திகேயன், மதுமிதா நடிக்கும் ராத்திரி நேரத்து காதல் விளையாட்டு என்-'

- எழுத்து பாதியில் அறுபட்டது, சட்டைக் காலர் பின்னாலிருந்து இழுபட்ட வேகத்தில், அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்த்தவன், மீண்டும், அதிர்ந்தான்.

கண்ணாடி அணிந்த கார்த்திகேயன் நின்று கொண்டிருந்தான்.

'என்ன இதெல்லாம்..?'

- சந்திரனால் பதில் பேச முடியவில்லை. பயத்தில் உறைந்து போயிருந்தான்.

"நீயும் மதுமிதாவை காதலித்தாயா..?"



'இதென்ன கேள்வி.. நீயும் காதலித்தாயா என்று..'

"சந்திரன்.. நீ நினைத்துக் கொண்டிருப்பது போல மதுமிதா என்னைக் காதலிக்கவில்லை. நான் தான் அவளைக் காதலித்தேன். நான் தான் அவளுக்கு காதல் கடிதம் கொடுத்தேன். அவளுக்கு என் மீது காதல் இல்லை. காதல் இல்லவே இல்லை."

"காதலிப்பதாக என்னிடம் சொன்னாளே.."

"காதலிக்கிறாள்... என்னையல்ல, உன் வகுப்பு தோழனை"

"யார் அவன்..?"

- குரலில் ஆச்சர்யம் மிதந்தது.

"டேவிட்!"

"என்னது டேவிட்டா... முன்னாள் எம்.எல்.ஏ. அற்புதராஜ் மகனா..? யார் சொன்னது உங்களுக்கு..?"

"நிர்மலாவிடம் நேற்று மதுமிதாவை காதலிப்பதை சொன்னேன். மதுமிதா டேவிட்டை காதலிப்பதாய் நிர்மலா சொன்னாள்"

- அவள் சொன்னதை வரிசை மாறாமல் சொன்னான் கல்லூரி விடுதிக் காப்பாளன் கார்த்திகேயன்.

மௌனமாய் கேட்டுக் கொண்டு நின்றான் சந்திரன். இதயம் வலிப்பது போல் உணர்ந்தான்.

"சந்திரன் நீ நல்ல காரியம் செய்தாய்.. விடிந்ததும் கல்லூரி அமர்க்களப்பட போகிறது. எனக்கும் மதுமிதாவுக்கும் காதல் என்று கண், காது, மூக்கு வைத்து பேசப் போகிறது. சந்தேகத்தில் டேவிட் காதல் சாகப் போகிறது- இதை வைச்சுக்க பரிசாய்.."

"ஐநூறு ரூபாய் தாள் ஒன்றை எடுத்து சந்திரன் பையில் திணித்தான் கார்த்திகேயன்.

"இது உனக்கும் எனக்கும் தெரிந்த ரகசியமாகவே இருக்கட்டும். இன்னும் நான்கைந்து இடத்தில் எழுதி போடு... நாளைக்கு நீ வர வேண்டாம்... எனக்கு உறக்கம் வருகிறது. வருகிறேன். 'காத்திகேயனுக்கு மதுமிதா தந்த முத்தம்' என்று எழுது"

- கிசுகிசுப்பான குரலில் சொல்லி விட்டுக் கல்லூரி விடுதியை நோக்கி நடந்தான் கார்த்திகேயன்.

'டேவிட்டையா காதலிக்கிறாய்... டேவிட்டையா காதலிக்கிறாய்...'

- அதற்கு மேல் அங்கு நிற்க மனம் இல்லாமல் திரும்பி நடந்தான் கல்லூரி வாசலை நோக்கி. இதயமெங்கும் மதுமிதாவின் முகமே நிறைந்திருந்தது.

'என் மதுமிதாவை நானே அசிங்கப்படுத்தி விட்டேனே..'

நடையில் தள்ளாட்டம் வந்திருந்தது.

கையிலிருந்த அட்டைப் பெட்டியைத் தூக்கி வீசினான் இருட்டில்.

யூகலிப்டஸ் மரத்தில் மோதி பெயிண்ட் டப்பாக்கள் திசைக்கொன்றாய் உருண்டன. சட்டைப் பைக்குள் திணிக்கப்பட்டிருந்த ஐநூறு ரூபாய் தாளை வெளியில் எடுத்தான்.

'என் மதுமிதாவை கேவலப்படுத்த கூலியா...?'

- ஐநூறு ரூபாய் தாளை நான்காய், எட்டாய், பதினாறாய் கிழித்துக் காற்றில் வீசினான்.



'சபாஷ்!'

- இருளைக் கிழித்துக் கொண்டு வந்தது அந்த வார்த்தை.

இதயம் ஒரு விநாடி நின்று போயிற்று. திடுக்கிடலுடன் நிமிர்ந்தான்.

எதிரில் —

வாயில் சிகரெட்டுடன் நின்று கொண்டிருந்தான் மதன்.

'தட்... தட்... தட்...'

- கதவு தட்டப்பட்டது அதிர்வில்லாமல்.

சத்தத்தில் கார்த்திகேயன் விழித்துக் கொண்டான்.

எழுந்து லுங்கியை இறுக்கி கட்டினான். கண்ணாடி தேடி அணிந்து கொண்டான்.

வேகமாய் கதவை திறந்து முகத்தை நீட்டினான்.

அதே வேகத்தில் முகத்தில் குத்து வாங்கினான்.

'ஆ' என்று அலற எத்தனித்தவன் வாய் பொத்தப் பட்டது. தொடர்ந்து நான்கைந்து அடி வாங்கினான். கண்ணாடி எகிறி இருட்டில் விழுந்தது. இடுப்பு லுங்கி உருவப்பட்டது.

நிர்வாணமாய் நின்றான். பயத்தில் உடம்பு நடுங்கியது.

தன்னைச் சுற்றி நான்கைந்து பேர் நிற்பது மங்கலாய் தெரிந்தது இருட்டில்.

"நீ தான் ஐயா மகளை காதலிக்கிற வாத்தியானா...?"

"எந்த ஐயா...?"

- இரண்டு வார்த்தை பேச இருபது விநாடி தேவைப்பட்டது.

"அதுதாம்பா எங்க தலைவர் பொண்ணு மதுமிதாவை காதலிக்கிறது நீதானா...?"

- பதில் சொல்ல வாய் திறப்பதற்குள் இடுப்பில் மிதி விழுந்தது.

"காதல்ங்கிற வார்த்தையையே மறந்திடு"

-வயிற்றில் குத்து வாங்கினான். குடல் வாய்க்கு வந்து விடும் போலிருந்தது.

"நான்... நான் மதுமிதாவை காதலிக்கல... காதலிக்கிறது டேவிட்"

"டேவிட்னா...?"

- கேள்வி வந்தது ஒரு தடியனிடமிருந்து.

"முன்னாள் எம்.எல்.ஏ. அற்புதராஜோட ஒரே மகன்"

- அந்தப் பதில் சுற்றி நின்றவர்களை அதிரச் செய்தது.

"பொய் இல்லியே...?"

"சத்தியமான உண்மை"

- பதில் சொல்லி முடிப்பதற்குள் அடித்து தூக்கி வீசப்பட்டான். மல்லிகைப் புதருக்குள் மல்லாந்து விழுந்த கார்த்திகேயன் மயக்கமாகியிருந்தான். நிர்வாணம் பயமுறுத்திற்று.

**ச**ந்திரன் வீடு வந்து சேர்ந்த போது இரவு இரண்டு மணி.



சத்தமில்லாமல் பின்பக்க தோட்டம் வழியாக வந்து படுத்துக் கொண்டான். புரண்டு புரண்டு படுத்தான். தூக்கம் வர மறுத்தது. மதன் பேசிய வார்த்தைகள் காதில் மோதியது திரும்ப திரும்ப. கண்களை மூடினான். 'நான் உனக்கு எதிராக என்ன செய்தேன் சந்திரன்... உன்னிடம் அன்பாய் பேசியது என் தவறா... உற்ற தோழனாய் எண்ணி என் காதலை உன்னிடம் சொன்னது தவறா... எது தவறு... எதற்காக என்னை அசிங்கப்படுத்தினாய் சந்திரன்... எதற்காக...'

- மதுமிதா நேரில் வந்து நின்று கேள்வி கேட்பது போலிருந்தது.

"நீ... நீ எனக்கு துரோகம் செய்து விட்டாய்..."

- அவன் உதடுகள் முணுமுணுத்தன. அவனை யறியாமல்.

உறக்கம் வராமல் தவித்தான். தலை வலிப்பது போல் இருந்தது.

ஒரு வழியாய் விடிந்த போது தூங்கிப் போனான்.

**வி**ழித்துப் பார்த்தாள் மதுமிதா. விடிந்து போயிருந்தது. கதிரவனின் தங்க விளிம்பு சன்னலில் தெரிந்தது.

அன்று அவளுக்குள் உற்சாக ஊற்று ஒன்று பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

"கிச்சிட்... சிக்"

- குரலில் திரும்பிப் பார்த்தாள். பீரோ மேல் அமர்ந்திருந்தது சின்னக் குருவி.

"ஏய்... இங்கே வா... எங்கே போயிருந்தாய் இத்தனை நாளும்...?"

- மதுமிதா பேசியதும், பயத்தில் சிறகசைத்துப் பறந்தது குருவி சன்னலை நோக்கி.

படுக்கையிலிருந்து குதித்து இறங்கினாள் மதுமிதா. மனசு துள்ளாட்டம் போட்டது.

சிட்டுக் குருவியைத் துரத்திக் கொண்டு சன்னலை நோக்கி ஓடியவள் திகைத்துப் போய் நின்றாள்.

வாசலில் அப்பா நின்று கொண்டிருந்தார்.

முகம் இறுகிப் போய் கிடந்தது.

"என்னப்பா..."

- வார்த்தை வெளியே வரத் திணறியது.

"இனி நீ காலேஜுக்கு போக வேண்டாம். நாளைக்கு காலையில உனக்கு குற்றாலத்தில் கல்யாணம். மாவட்டச் செயலாளர் மகன் தான் மாப்பிள்ளை."

அதிர்ந்து போய் நின்றாள் மதுமிதா.




காதல்
ஒரு மருந்து தடவிய மாத்திரை
சிலர் அதை
விழுங்கி விடுகிறார்கள்
பலரை அது விழுங்கி விடுகிறது.

*- டைரக்டர் கே. பாலசந்தர்*

**கா**லடி ஓசையில் கண் விழித்த சந்திரனுக்குக் குழப்பமாயிருந்தது கொஞ்சம் வியப்பாகவும் இருந்தது. தன் கண்களில் விழும் காட்சி கனவல்ல நிஜமென்று அறிந்ததும் திகைப்பாகவும் இருந்தது. போர்வையை சுருட்டிக் கொண்டு எழுந்து அமர்ந்தான்.

வாசலில் நின்று கொண்டிருந்த மதுமிதா படுக்கையை நோக்கி நடந்து வந்தாள். கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

"என்ன மதுமிதா..."

- அவனையறியாமலே உடம்பு பதறியது.

"நான் டேவிட்டை காதலிக்கிறேன்."

"தெரியும்."

"எப்படி தெரியும்..?"

"தெரியுமென்றால் தெரியும். நீ எதற்காக இங்கு வந்தாய்? உன் அப்பா பார்த்தால் என்னை கொன்றே போட்டு விடுவார்."

- என்றான் குரலில் கடுமையை வரவழைத்துக் கொண்டு.

"சந்திரன்.. நீதான் சந்திரன் எனக்கு உதவ வேண்டும். விடிந்தால் எனக்குக் கல்யாணம்."

"என்னது! விடிந்தால் உனக்கு கல்யாணமா..?"

- காதுகள் அதிர்ச்சி வாங்கியிருந்தது.

"கல்யாணம். விருப்பமில்லாம கல்யாணம். என் அப்பா கொண்டு வரும் மணமாலையை மதுமிதாவுக்கு போட முடியும். ஆனால் மதுமிதா பிணமாக இருப்பாள்.."

- கண்களிலிருந்து கண்ணீர் மளமளவென்று வழிந்து தரை தொட்டது.

"உளறாதே, என்ன நடந்தது சொல்."

"நான் டேவிட்டை காதலிக்க ஆரம்பித்ததுமே அப்பாவுக்கு தெரிந்து விட்டது. விடிந்தால் கல்யாணம் என்று சொல்லி விட்டார். வீட்டை விட்டு வெளியே போக முடியாமல் வாசலில் காவலுக்கு ஆள் போட்டிருக்கிறார். எங்கள் வீட்டு வேலைக்காரி டேவிட்டுக்கு உதவி செய்து



வந்ததையும் கண்டுபிடித்து விட்டார். அவளை நெல் வைக்கும் அறையில் போட்டு பூட்டி விட்டார். எப்படி யாவது டேவிட்டுக்கு தகவல் சொல்ல வேண்டும்.. அவன் பார்த்துக் கொள்வான்"

- என்றாள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே

"மணமகன் யார்?"

"மாவட்டச் செயலாளர் மகனாம். நாளை காலை குற்றாலத்தில் கல்யாணம். கட்சிக் கூட்டம் போல என் கல்யாணத்தை நடத்த முடிவு செய்து விட்டார்."

"நான் என்ன செய்ய வேண்டும்?"

- கேள்வி கேட்டான் குரலில் எந்தவித உணர்வையும் வெளிப்படுத்தாமல்.

"இந்த கடிதத்தை டேவிட்டிடம் சேர்த்து விட வேண்டும.

- ஒரு மடிக்கப்பட்ட காகிதத்தை சந்திரன் கையில் கொடுத்தாள்.

"பதில் வேண்டாமா..?"

- புன்னகைத்தாள் மதுமிதா.

"நல்ல பதிலாய் கொண்டு வருகிறேன்"

- என்றான் சந்திரன் இனிப்பு தடவிய குரலில்.

உள்ளே விஷம் பொதிந்திருந்தது.

"வருகிறேன் சந்திரன். உனக்காக காத்திருப்பேன்."

'காத்திரு மதுமிதா காத்திரு. எமனை உன் வீட்டுக்கே அனுப்பி வைக்கிறேன்.'

- மதுமிதா நகர்ந்ததும் மடிக்கப்பட்ட காகிதத்தை அவசரமாய் கலைத்தான். வேக வேகமாய் எழுதப்பட்டிருக்க வேண்டும். அவசர எழுத்துக்கள் சில இடங்களில் சிதைந்து வெளுத்துப் போயிருந்தன. 'கண்ணீர் துளிகள் காகிதத்தில் விழுந்திருக்க வேண்டும்.'

'என் டேவிட்... என் இதயத்துக்கு இனியவனே... என் இதயத்தை அறுத்திட இங்கே நாள் குறித்து விட்டார்கள்... இல்லை. நேரம், இருபத்தி நான்கு மணி நேரம். இந்தக் கடிதம் உன் கைக்கு வந்து சேர்ந்திருக்கும் பொழுது கால் பங்கு நேரம் நிச்சயம் கரைந்து போயிருக்கும். மீதி முக்கால் பங்கு நேரம் கரைவதற்குள் என் உயிர் மூச்சை நிறுத்தி விடுவார்கள். நீதானே என் உயிர்மூச்சு. உன்னையும் என்னையும் பிரிக்கப் போகிறார்கள். விடிந்தால் எனக்கு திருமணம். யாரோ ஒரு முகம் தெரியாத ஆண் மகனோடு- விடியக்கூடாது, விடிவதற்குள் நாம் முடிவெடுத்தாக வேண்டும். உன் முடிவு தான் என் முடிவு. அது இறுதி முடிவாக இருந்தாலும் சரி.

உன் பதிலுக்காகவும், வரவுக்காகவும் காத்திருக்கிறேன். தங்கவால் குதிரையின் காதலி —

'மதுமிதா'

சந்திரன் கையிலிருந்த காகிதம் படபடத்தது அவன் இதயத்தைப் போல

'இந்த காகிதத்தை மட்டுமல்ல, டேவிட்டையும் எமனுலகத்தில் சேர்ப்பித்து விடுகிறேன். இன்றோடு மதுமிதாவின் காதலுக்கு முடிவுரை எழுதி விடுகிறேன். மதுமிதா, டேவிட் முடிவு தான் உன் முடிவா... மாற்றியமைக்கிறேன். இந்த காதல் கதைக்கு இரண்டு முடிவு



எழுதப் போகிறேன். அந்த முடிவு உன் அப்பனையும் உன்னையும் கதறி அழவைக்கும். ஒரு பகல், ஒரு இரவு தான் இருக்கிறது'

- ஆவேசமாய் போர்வை உதறி எழுந்தான்.

மதன் நேற்று இரவு சொன்னது மனதில் வந்து மோதியது. ஓரம் தள்ளி விட்டு நடந்தான்.

முந்நூற்று இருபது நிமிடங்களை தின்று விட்டு சூரியன் கோபத்திலிருந்தான். சந்திரனோ ஏ.சி. செய்யப்பட்ட பொது தொலைபேசி நிலையத்திலிருந்து காலில் கட்டுப் போட்டிருந்த கார்த்திகேயனிடம் பேசிக் கொண்டிருந்தான். கடைசியில் பேசிய வார்த்தைகள் காதில் தெளிவாய் விழுந்தன.

'...பாடல் நடத்துற வாத்தியாரை ஆள் வைச்சி அடிச்ச அந்த கிழவனுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டாமா... அவனை அசிங்கப்படுத்த வேண்டாமா... டேவிட்டோட ஊரை விட்டு ஓடிப் போறதுக்காக அம்மன் கோவில் முன்னால இருக்கிற பூவரசு மரத்துக்கு மதுமிதா வருவா. கடத்திட்டு போயி தாலி கட்டிடுங்க. மீதியை நான் பாத்துக்கிறேன். மஞ்சள் தாவணி, சிவப்பு பாவாடையில வருவா"

"................"

"ஆமாம், மஞ்சள் தாவணி, சிவப்பு பாவாடை"

அடுத்த முப்பதாவது நிமிடத்தின் முடிவில் மதுமிதாவின் அப்பா பரமசிவம் முன்னால் அமர்ந்திருந்தான் சந்திரன். சுற்றி நான்கைந்து பேர் நின்று கொண்டிருந்தனர்

“எதுக்காக வந்தே..?”

“விடிஞ்சா மதுமிதாவுக்கு கல்யாணம். நான் வரக் கூடாதா..?”

“உனக்கு எப்படித் தெரியும்..?”

“மதுமிதா தான் சொன்னா. டேவிட்டுக்கு ஒரு லெட்டர் தந்தா. கொடுத்திட்டு டேவிட் தந்த லெட்டரை வாங்கிட்டு வந்திருக்கேன். இன்னைக்கு ராத்திரி டேவிட்டும் மதுமிதாவும் ஊரை விட்டு ஓடிப்போகப் போறாங்க.”

“என்னடா சொன்னே..?”

- கோபத்தில் எதிரிலிருந்த சந்திரனின் சட்டைக் காலரை கொத்தாய் பிடித்தார். “அவசரப் பட்றீங்க.. இதை ஏன் நான் உங்ககிட்ட வந்து சொல்லணும்.. ரகசியமா லெட்டரை கொடுத்து ஊரை விட்டு ஓடிப் போகச் சொல்லியிருக்கலாமே..”

- சட்டைக் காலரைப் பிடித்திருந்த கை தளர்ந்து, மெல்ல விலகியது.

“அப்பாவி வாத்தியாரை தேடிப் போய் அடிச்சிட்டீங்க... முன்னாள் எம்.எல்.ஏ. அற்புதராஜ் மகனை நெருங்குறதுக்கே உங்களுக்கு பயமா இருக்குது.”

“அவன் மட்டும் கையில கிடைச்சா..

பெட்ரோல் ஊத்தி கொளுத்திடுவேன்”

- உதடுகள் கோபத்தில் துடித்தன பரமசிவத்துக்கு.



“அதுக்காகத் தான் வந்திருக்கேன். மதுமிதாவுக்கு டேவிட் எழுதின லட்டரை படிங்க. எங்க வைச்சி கொளுத்தலாங்கிறதை சொல்லுங்க”

- சட்டைப் பைக்குள் வைத்திருந்த கடிதத்தை எடுத்து அவர் கையில் கொடுத்தான். காகிதத்தை ஒரு முறை புரட்டிப் பார்த்தவர், ஏனோ சந்திரன் கையில் திணித்தார்.

“ம்.. நீயே படி..”

- ஒரு முறை சுற்றி நின்றவர்களை பார்த்து விட்டு படிக்க ஆரம்பித்தான் மெலிதான குரலில்.

‘என்னவளே மதுமிதா.. நாம் காதல் மரத்து பறவைகளாக சேர்ந்தே வாழ இறைவன் படைத்திருக்கிறான். இரவு இரண்டு மணிக்கு ஊருக்கு தெற்கே இருக்கிற புளியமரத்துக்கு வா. நம் காதலை தடுக்க நினைக்கிற இந்த ஊரை விட்டே பறந்து செல்வோம் சிறகசைத்து. நான் கறுப்புச் சட்டை கறுப்பு பேண்டில் வருவேன். நீயும் கறுப்பு தாவணி கறுப்புப் பாவாடையில் வா. இந்த கறுப்பு காதல் எதிரிகளுக்கு கறுப்புக் கொடி. இந்த தங்கவால் குதிரையை எவனும் தடுத்து நிறுத்த முடியாது..’

“தங்கவால் குதிரையை பெட்ரோல் ஊற்றி கொளுத்தி விடுகிறேன். ம்.. வேற என்ன எழுதியிருக்கிறான்..?”

“இரவு வருகிறேன். ஏழேழு ஜென்மத்துக்கும் உன் காதலன் டேவிட்”

“இந்த ஜென்மம் இன்னைக்கி ராத்திரியோட முடிஞ்சிது”

"அவசரப்படாதீங்க. உங்க ஆத்திரமும் அவசரமும் தான் உங்க அரசியல் எதிரி அற்புதராஜை எம்.எல்.ஏ. ஆக்கிச்சி. எதையும் நிதானமா செய்ங்க"

"நான் நிதானமாத்தான் இருக்கிறேன். எதுக்காக எப்பவும் குடிச்சிட்டு விழுந்து கிடக்கிற மாவட்டச் செயலாளர் மகனுக்கு மதுமிதாவை கட்டிக் குடுக்கிறேன்? அடுத்த எம்.எல்.ஏ. நான்தான். விடிஞ்சதும் எனக்கு யோகராசி ஆரம்பிச்சிடும். மதுமிதா அசைய முடியாதபடி பின் வாசல்ல ஒருத்தன், முன் வாசல்ல ஒருத்தன்னு காவல் போட்ருவேன். ராத்திரி புளிய மரத்துக்கு வர்ற அற்புத ராஜ் மகன் டேவிட்டை அங்கேயே பெட்ரோல் ஊத்தி கொளுத்திப் புடுவேன்."

"சரி, நான் வர்றேன்"

"ஏய்- இங்க எங்கே போறே..?"

"லெட்டரை மதுமிதாகிட்ட கொடுக்க வேண்டாமா..?"

"ம்ம்- கொடுத்துட்டு போ."

"எதுக்கும் இன்னொரு முறை ராத்திரி வருவேன்"

-அவர் பதிலை எதிர்பார்க்காமல் வீட்டுக்குள் நுழைந்தான் சந்திரன்.

"எப்படி வந்தே அப்பாவை தாண்டி"

- கேள்வியில் பதட்டமும், கண்களில் சந்தோஷமும் தெரிந்தது.

"புத்தகம் ஒண்ணு வாங்கணும்னு சொல்லிட்டு வந்திட்டேன். இந்தா பிடி டேவிட் கடிதம்."



விரல்கள் நடுங்க, கடிதத்தை வாங்கிக் கொண்டாள் மதுமிதா.

கடிதத்தை ஒரு முறைக்கு இரண்டு முறை படித்தாள் மதுமிதா வரி வரியாய். நிமிர்ந்தவள் கண்களில் கண்ணீர் திரையிட்டிருந்தது.

"நன்றி சந்திரன்."

"நன்றி இருக்கட்டும். கடிதம் எழுதிய பிறகு டேவிட் இரவு நீங்கள் இருவரும் சந்திக்கிற இடத்தை மாற்றி விட்டான். உன்னை அம்மன் கோவில் முன்னால் இருக்கும் பூவரசு மரத்துக்கு வரச் சொல்லியிருக்கான். மஞ்சள் தாவணி, சிவப்பு பாவாடை"

- பொய் சொல்லும் சந்திரனின் முகம் நிறம் மாறியிருந்தது.

"அம்மன் கோவில்.. பூவரசு மரம்.. மஞ்சள் தாவணி.. சிவப்பு பாவாடை"

- தனக்குத் தானே ஒரு முறை சொல்லிப் பார்த்துக் கொண்டாள் மதுமிதா.

"உன் அப்பா சந்தேகப்படுவார் நான் வருகிறேன்"

- எழுந்து நடந்த சந்திரன் வலது கையைப் பிடித்து நிறுத்தினாள் மதுமிதா.

"சந்திரன், உனக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியல்ல"

-அவன் கையை தூக்கி, விரல்களில் முத்தமிட்டாள் குனிந்து. இரண்டு சொட்டு சூடான கண்ணீர் புறங்கையில் விழுந்தது. கையை விலக்கிக் கொண்டு நடந்தான் வேகமாய்.

கால் இடறியது.

இரவு வந்திருந்தது.

மனதுக்குள் இருட்டோடு மல்லாந்து படுத்திருந்தான் சந்திரன். மதுமிதா தந்த முத்தம் இன்னும் இதயத்தை நெருப்பாய் சுட்டுக் கொண்டிருந்தது. புறங்கையில் விழுந்த கண்ணீர் சொட்டுகள் தகித்தன அனலாய்.

அவனால் நிம்மதியாய் படுத்திருக்க முடியவில்லை.

தலைக்கு மேல் சுழலும் ஃபேனாய் சிந்தனை சுழன்று கொண்டிருந்தது. நேற்று இரவு மதன் சொன்ன வார்த்தைகள் சவுக்காய் சுழன்றடித்தது. கண்ணீருடன் மதுமிதா எதிரில் நிற்பது போலிருந்தது.

'என்ன குற்றம் செய்தேன் சந்திரன்... எதற்காக இந்த தண்டனை... என் காதலனை பெட்ரோல் ஊற்றி கொளுத்த ஏற்பாடு செய்திருக்கிறாய்... என்னையோ கார்த்திகேயன் கடத்தி சென்று தாலி கட்ட வழி செய்திருக்கிறாய்... எதற்காக சந்திரன்... எனக்கு எதுவும் புரியவில்லை... என் கண்ணீர் உன்னை சும்மா விடாது.'

'நீ... நீ எனக்கு துரோகம் செய்தாய்.'

'நீ செய்தது துரோகமா... நான் செய்தது துரோகமா சந்திரன்... நீ என்றாவது உன் காதலை என்னிடம் வெளிப்படுத்தியிருக்கிறாயா... நீ சொல்லாத காதலை நான் எப்படி அறிந்து கொள்வேன்... நீ செய்ததுதான் துரோகம். உன்னை நம்பிய எனக்கு நீ செய்தது தான் துரோகம்... நீ செய்தது தான் துரோகம்'

- மதுமிதா விரல் நீட்டிக் குற்றம் சாட்டினாள்.



கோபத்தில் தலையணையைத் தூக்கி எறிந்தான்.

காலடியில் போய் விழுந்தது தலையணை. வாசலில் அத்தை.

'சந்திரன்... மனசை போட்டு அலட்டிக்காதே. நானும் மாமாவும் ராத்திரி கடைசி வண்டிக்கு மதுரை கல்யாணத்துக்கு போறோம். நாளைக்கு வந்திடுவோம்."

பதிலை எதிர்பார்க்காமல் திரும்பிச் சென்றிருந்தாள் அத்தை. மீண்டும் கண்களுக்கு முன்னால் வந்து நின்றாள் மதுமிதா கண்ணீருடன். மதனும் குற்றம் சாட்டினான் விரல் நீட்டி.

இரண்டு கைகளால் காதுகளைப் பொத்திக் கொண்டான் சந்திரன்.

- அதையும் மீறி காதில் தெளிவாய் விழுந்தது மதனின் வார்த்தைகள்.

'காதல்ங்கிறது கட்டிப் புடிச்சிக்கிடறது இல்லைடா... முத்தம், கொடுக்கிறதும் இல்லை... தாடி வைச்ச எழுத்தாளர் அழகாச் சொல்லியிருக்கார். விட்டுக் கொடுக்கிறது தான் காதல். அவளுக்காக நீ விட்டுக் கொடுக்கணும்... எதை விட்டுக் கொடுக்கிறது... உன் காதலையே விட்டுக் கொடுடா... அதுதான் உண்மையான காதல்.'

'விட்டுக் கொடுக்கத்தான் போறேன்'

- ஒரு முடிவுக்கு வந்தவனாய் எழுந்து கொண்டான்.

சந்திரனைக் கண்டதும் விலகி வழி விட்டான் காவலுக்கு இருந்த தடியன். மதுமிதாவின் அப்பா பரமசிவத்தைக் காணவில்லை.

விடுவிடுவென்று நடந்து கதவை தொட்டான். அகல திறந்து கொண்டது. உள்ளே விளக்கு எரிந்தது. மதுமிதாவின் அறைக்குள் நுழைந்தவன் அதிர்ந்தான். அழும் கண்களுடன் நிர்மலா அமர்ந்திருந்தாள் மதுமிதா அருகில்.

"நிர்மலா எப்படி வந்தாள்..?"

"என்னை பார்க்க தற்செயலாய் வந்தாள். அப்பா வீட்டுக் காவலில் வைத்து விட்டார். மணமகளுக்கு இவள் தோழி. கல்யாணம் முடிந்தால் தான் வீட்டுக்கு போக முடியும்"

"எல்லாம் நன்மைக்கே. நிர்மலாவுக்கு மஞ்சள் தாவணி, சிவப்பு பாவாடை உடுத்தி அம்மன் கோவில் பூவரசு மரத்துக்கு அனுப்பி வை. நீ கறுப்பு தாவணி, கறுப்பு பாவாடையுடன் பண்ணையார் ரைஸ்மில்லுக்கு வந்து விடு. அங்கு டேவிட் வந்து விடுவான். சரியாய் இரண்டு மணி."

"நிர்மலாவுக்கு எதுக்காக மஞ்சள் தாவணி..."

"சொன்னதை செய் மது... எல்லாம் காதலுக்காகத் தான்."

காலடி சத்தத்தில் திரும்பி பார்த்தான்.

மதுமிதாவின் அம்மா நின்று கொண்டிருந்தாள் கையில் காபியுடன்.



"தம்பி, காபியை குடிச்சிட்டு போ... நீ சொன்னபடி அனுப்பி வைக்கிறேன்."

மதனுக்கு போன் செய்து ஆட்களுடன் அம்மன் கோவில் பூவரசு மரத்துக்கு வரச் சொன்னான். கடத்த வரும் கார்த்திகேயன் ஆட்களை தடுக்க, டேவிட்டுக்கு போன் செய்து வெள்ளைச் சட்டை அணிந்து பண்ணையார் ரைஸ்மில்லுக்கு வரச்சொன்னான்.

அதே நேரம்-

மஞ்சள் தாவணியில் நிர்மலாவும் கறுப்பு தாவணியில் மதுமிதாவும் வீட்டில் தயாராய் இருந்தார்கள்.

ஊருக்குத் தெற்கே இருக்கும் பெரிய புளியமரத்தின் இருட்டு கிளைகளில் கையில் பெட்ரோல் கேன், நெருப்பு பெட்டியுடன் நான்கு பேர் காத்திருந்தனர். இருநூறு அடி தள்ளி இருட்டில் காத்து நின்றது பரமசிவத்தின் கார்.

பெட்டியைத் திறந்து கறுப்புச் சட்டை, கறுப்பு பேண்ட் அணிந்து கொண்டான் சந்திரன்.

வீட்டை விட்டு புறப்படும் பொழுது—

கடைசியாய் ஒரு போன் செய்தான் அருகிலிருந்த போலீஸ் ஸ்டேஷனுக்கு.

சந்திரனை சுமந்து கொண்டு சைக்கிள் வேகமாய் பறந்தது ஊருக்குத் தென் பகுதியில் இருக்கும் இருட்டு சுமந்த புளியமரத்தை நோக்கி.

கறுப்புச் சட்டை, கறுப்பு பேண்ட் அணிந்த சந்திரன், புளிய மரத்தின் நிழலுக்குள் நுழையவும் -

மேலேயிருந்து தலையில் பெட்ரோல் ஊற்றப் பட்டது.

நெருப்பு சுமந்த குச்சி வீசப்பட்டது.

பற்றி எரிந்தான் சந்திரன் நெருப்புக் கோளமாய்.

"மதுமிதா..மதுமிதா"

- உதடுகள் முணுமுணுத்தன காதலுடன்.

அதே நேரம் -

மதுமிதாவும், டேவிட்டும் ஊரை விட்டு ஓடிக் கொண்டிருந்தார்கள்......... காதல் மரத்துப் பறவைகளாய்.

முற்றும்

CPL 701722

CONNEMARA PUBLIC LIBRARY
13 NOV 2010